# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 02 வியாழக்கிழமை (18.11.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 357


## இந்திய அரசின் உதவித் திட்டத்துக்காக

# யாழ்.வந்துள்ள 100 டிராக்டர்கள்

# வடக்கு விவசாயிகளுக்கு கிடைக்கும்

## அமைச்சர் கிருஷ்ணா கையளிப்பார்

யாழ்ப்பாணம்,நவம்பர்18

**இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார். இந்தியத் துணைத் தூதரகத்தைத் திறந்து வைக்க வரும் அவர், வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் தேவைக்காக 100 டிராக்டர்களையும் அன்றைய தினம் கையளிப்பார். வடக்கில் விவசாய மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு வழங்குவதாக இந்தியா வழங்கிய உறுதிமொழியின் ஒரு பகுதியாக இந்த உதவிகள் வழங்கப்பட உள்ளன.**

இலங்கை - இந்திய கூட்டு ஆணைக்குழு மாநாட்டுக்காக எதிர்வரும் 25ஆம் திகதி இந்திய வெளிவிவகார அமைச்சர் கொழும்பு வருகிறார். இந்தப் பயணத்தின் போது அவர் யாழ்ப்பாணம், அம்பாந்தோட்டை நகரங்களில் இந்தியத் துணைத் தூதரகங்களை ஆரம்பித்து வைப்பார்.

யாழ்.நகரில் அமைக்கப்பட்டிருக்கும் துணைத் தூதரகத்தை திறந்து வைப்பதற்காக 27ஆம் திகதி இங்கு வருகிறார் அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா. அவரது பயணத்தை ஒட்டிய ஏற்பாடுகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(24ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கில் மீள்குடியேற்றம் ஆரம்ப நிகழ்வுகள் நவ.27 இல்

யாழ்ப்பாணம்,நவ.18

வலி.வடக்கில் கண்ணிவெடி அகற்றப்பட்டதாக சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் எதிர்வரும் 27ஆம் திகதி மக்களை மீள்குடியேற்றும் பணிகள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இளவாலை வடமேற்கு, இளவாலை வடக்கு, வித்தகபுரம் ஆகிய பிரதேசங்களிலேயே முழுமையாக மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவும் கலந்துகொள்வார் என்று அறிய வருகிறது.

நீண்ட காலமாக உயர் பாதுகாப்பு வலயமாக இருந்த வலி.வடக்கில் மீள்குடியேற்றம் பெரும் இழுபறிகளுக்கு மத்தியில் தற்போது சாத்தியமாகியுள்ளது.

வலி.வடக்கு மீள்குடியேற்றம் (24ஆம் பக்கம் பார்க்க)


உள்ளே

**யாழ்.பல்கலையில் எஸ்.பி. அள்ளி வீசிய வாக்குறுதிகள்**
யாழ்.பல்கலைக் கழக அபிவிருத்தி தொடர்பாக பல்வேறு வாக்குறுதிகளை உயர் கல்வி அமைச்சர் வழங்கினார். பக்கம் 02

**நாவற்குழியில் தமிழ் மக்களும் குடியேறினர்**
வீடமைப்பு அதிகார சபைக்குச் சொந்தமான காணியில் குடியேறிய தமிழ்மக்களை சுரேஷ் எம்.பி. பார்வை பக்கம் 04

**மீண்டும் மொழிப் பிரச்சினை**
நல்லிணக்க ஆணைக்குழுவின் யாழ். அமர்வுகள் பற்றிய அலசல் பக்கம் 13


## ஜே.வி.பி. இன்று ஆர்ப்பாட்டம்

கொழும்பு, நவ.18

மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரிப்பு, வரிச்சுமை உள்ளிட்ட பல காரணங்களை முன்வைத்து கொழும்பு - கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்னால் ஜே.வி.பியினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டம் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

'வரிச்சுமைக்கு எதிரான மக்கள் சக்தி' எனும் தொனிப் பொருளில் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.(ஒ-சி)

## மேலும் 7 புதிய அமைச்சர்களுடன் அமைச்சரவை திங்கள் பதவியேற்பு

கொழும்பு,நவ.18

அமைச்சரவை அந்தஸ்துள்ள புதிய ஏழு அமைச்சர்களுடன் அமைச்சரவை எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலையில் பதவியேற்றுக்கொள்ளும் என்று அரச வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் 19ஆம் திகதி இரண்டாவது ஆட்சிக் கால சத்தியப்பிரமாணம் செய்யவுள்ளார். ஜனாதிபதியின் சத்தியப் பிரமாணத்தின் பின்னர் தற்போதைய அமைச்சரவை கலைக்கப்பட்டுவிட்டதாகவே கருதப்படும் என சட்ட வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர். இருந்தும் சோதிடர்களின் கணிப்பின்படி எதிர்வரும் 22ஆம் திகதி அமைச்சரவை பதவியேற்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வரவு - செலவுத் திட்ட விவாதத்தின் பின்னர் புதிய அமைச்சரவை பதவியேற்குமென முன்னர் தகவல்கள் வெளியாகியிருந்தன.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், பிரதி நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, பிரதி அமைச்சர்களான டிலான் பெரேரா, மஹிந்தானந்த அளுத்கமகே, லக்ஷ்மன் செனவிரட்ன ஆகியோருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படலாமெனத் தெரியவருகிறது.

இதேவேளை, கண்டி மாவட்ட (24ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போனோர் தொடர்பாக

## நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு கிடைத்த 500 முறைப்பாடுகள்

கொழும்பு,நவ.18

யாழ்ப்பாணத்தில் கடந்த 11ஆம் திகதி முதல் நான்கு நாள்கள் நடைபெற்ற அமர்வுகளின் போது சுமார் 500 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என்று நல்லிணக்க ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடத்தல்கள் மற்றும் காணாமற் போதல் சம்பவங்கள் பற்றியே அதிகளவு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.பி.அத்துகோரள தெரிவித்துள்ளார்.

யுத்த காலத்தில் காணாமற்போன (24ஆம் பக்கம் பார்க்க)

## பொது வேலை நிறுத்தத்துக்கு தொழிற் சங்கங்கள் முஸ்தீபு

கொழும்பு,நவ.18

வரவு - செலவுத் திட்டத்தில் போதுமான அளவு சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் பொது வேலைநிறுத்தம் ஒன்று ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது என்று தேசிய தொழிற் சங்க மத்திய நிலையத்தின் தலைவர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த ஜூலை மாதம் எண்ணாயிரம்(24ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்க் கூட்டமைப்பு 21ஆம் திகதி கூடுகிறது

கொழும்பு,நவ.18

நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2011ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், கூட்டமைப்பின் எதிர்காலத் திட்டங்கள் ஆகியவை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் 21ஆம் திகதி கொழும்பில் கூடி ஆராயவுள்ளது என்று கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார். (24ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகா திடீர் சுகவீனம் விசாரணை பிற்போடப்படலாம்

கொழும்பு, நவ. 18

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா வெலிக்கடை சிறைச்சாலையில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதால் இன்று நடைபெறவுள்ள வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு பிற்போடப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வெள்ளைக்கொடி விவகாரம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்றுமுன்தினம் மேல் (04ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர் குழுவுக்கு

## சாட்சியங்களை அனுப்புமாறு தமிழர் பேரவை கோரிக்கை

லண்டன்,நவ.18

இலங்கையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் யுத்தக் குற்றங்கள் தொடர்பாக ஆராயவென நியமிக்கப்பட்ட ஐ.நா. நிபுணர் குழு இலங்கை செல்ல அனுமதி மறுக்கப்பட்டுள்ளதால் அது புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் சாட்சியங்களை எதிர்பார்க்கின்றது.

இலங்கையில் காணாமல் போனோரின் உறவினர்கள், கடத்தப்பட்டு விடுதலையானவர்களின்(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# யாழ். பல்கலை மேம்பாடு தொடர்பில் உயர் கல்வி அமைச்சர் வாக்குறுதி மழை

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ். பல்கலைக்கழகத்துக்கான மேம்பாட்டு திட்டங்கள் குறித்து உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க நேற்று வாக்குறுதிகளை அள்ளி வழங்கினார்.

யாழ்ப்பாணம் வந்திருந்த உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸநாயக்க யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மாணவர்கள் மத்தியில் நேற்று உரையாற்றினார். தென்னாபிரிக்காவில் நடைபெற உள்ள உலக வாலிபர் விழா தொடர்பான முன்னேற்பாடு நிகழ்வுக்காக அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்தார்.

அப்போதே அவர் வாக்குறுதிகளை அள்ளி வீசினார். அமைச்சர் தனது உரையில் தெரிவித்ததாவது.

ஏகாதிபதிய ஆட்சி எமது நாட்டில் முடிவுக்கு வந்தாலும் அவர்களது ஏகாதிபத்தியம் வேறு வழிகளில் தொடரவே செய்கிறது. 1950களில்தான் வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலுள்ள இளைஞர்களின் உரிமைகள் பற்றிக் குரல் கொடுக்கத் தொடங்கினார்கள். ஆரம்பத்தில் சிறு உரிமைகளைக கேட்டவர்கள் பின்னர் அரைக்கு அரைவாசி உரிமைகளைக் கேட்டனர். சமஷ்டி ஆட்சியைக் கேட்டனர்.

எமக்கு முன்புள்ள அரசியல்வாதிகளாலும் அரசியல் தலைமைகளாலும் இவ்வாறான பிரச்சினைகளை தீர்க்க முடியாது போய்விட்டது. இதன் காரணமாகவே எவரும் நினைத்துப் பார்க்க முடியாதளவில் போரும், அழிவுகளும் ஏற்பட்டன. அது முப்பது வருட காலமாக தொடர்ந்தது. அதன் விளைவுகள் மிகப் பாரதூரமானவை, மறக்க முடியாதவை துர்ப்பாக்கிய இந்த நிலைமைக்கு நாம் அனைவரும் பொறுப்புக் கூற வேண்டியவர்கள்தான்.

ஏகாதிபத்திய வாதம் இன்றும் பல்வேறு வடிவங்களில் எம்மிடம் வந்து சேர்கின்றது. அதன் மூலம் எம்மை ஆட்சி செய்ய முயல்கின்றனர். சிறிய நாடுகளில் உள்ள இனங்களை வேறுபடுத்தி கூறு போட முயல்கின்றனர். அது தொடர்பில் நாம் விழிப்பாக இருக்க வேண்டும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தை உலகத்தின் உயர்வான இடத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளார். இந்த வரவு செலவுத்திட்டம் சபையில் நிறைவேற்றப்பட்டதும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்காக, மிகவும் விசாலமான இரண்டு விடுதிகள் அமைத்து தரவுள்ளோம். இந்தப் பல்கலைக் கழகத்தின் அழகியல், கலைத் துறையினை தனியொரு பீடமாக அமைப்பதற்கு ஏற்கனவே திட்டமிட்டுள்ளோம்.



உலக வாலிபர் தின விழாவை முன்னிட்டு மேற்கொள்ளப்படவுள்ள ஏற்பாடுகள் தொடர்பாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் விளக்கினார். இதன்போது கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

**வாக்குறுதிகள்**

* யாழ். பல்கலையை உலகத் தரத்துக்கு உயர்த்துவது.
* மாணவருக்கு புதிதாக இரு விடுதிகள்.
* அழகியல், கலைத் துறை தனிப்பீடமாகும்.
* பட்டதாரிகளுக்கு வேலை
* பல்தேசிய ஆளுமை தரக் கூடிய கற்கை அறிமுகம்.
* பரீட்சை முறையில் மாற்றம்.

யாழ். பல்கலைக்கழகத்தை உலகத் தரமிக்கதாக மாற்றுவதற்காக நாம் இப்போது ஜப்பான், கொரியா, மேலைத்தேச நாடுகள் மற்றும் சர்வதேச முதலீட்டு வலயங்களுடன் பேச்சு நடத்தி வருகின்றோம்.

பல்கலைக்கழகத்தில் இருந்து பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்கள் நல்ல ஆங்கில அறிவுள்ளவராக இருக்க வேண்டும். எனவே அதற்கான முயற்சிகளை எடுத்துள்ளோம். அதற்கான சகல திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்கிறோம்,

எமது பட்டதாரிப் படிப்பு முறைகளில் மாற்றம் வேண்டும். கல்வி முறையில் கல்வியளிக்கும் முறையில் மாற்றம் வேண்டும். பரீட்சை முறையில் மாற்றம் வேண்டும். அதற்கான முயற்சியில் இறங்கியுள்ளோம். பட்டம் பெற்றவர்கள் வீட்டில் இருக்காமல் அவர்களுக்குப் பல்துறை தேர்ச்சியளிக்கக் கூடிய போதனை வழங்கவுள்ளோம்.

பட்டதாரி மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கி அவர்களது பிரச்சினைக்கு தீர்வு காண்போம். சர்வதேச ரீதியாக முன்னேறிச் செல்லக் கூடிய ஆளுமை மிக்க மாணவர் சமூகத்தை உருவாக்குவோம். இவற்றை நிறைவேற்ற எமது அரசு முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

பல்கலைக்கழக சமூகத்தினர் எம்மை எப்போதும் சந்திக்கலாம், கலந்துரையாடலாம்.

அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கு செலவழிக்கும் பணத்தைப் போல பல மடங்கு பணத்தை அரசு பல்கலைக் கழகங்களுக்கு செல வழித்து வருகின்றது. வடக்கு, கிழக்கு அபிவிருத்திக்கும் செலவழிக்கின்றோம்.

நாம் இந்தியாவிலிருந்து வந்தவர்கள். எமது பிறப்பிட தேசம் இந்தியாவே. நாம் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். எமது மொழி, பழக்கவழக்கம், ஆடை அணிகலன் அனைத்தும் ஒரே மாதிரியாகவே இருக்கின்றன. இது சிங்களவருடைய தேசமல்ல. இது சிங்கள, தமிழ், முஸ்லிம், பறங்கியர் என அனைத்து மக்களுக்குமுரிய தேசமாகும்.

மாணவர்களிடையே பரஸ்பர உறவு வளர்க்கப் பட வேண்டும். தமிழ், சிங்கள மொழிகள் பேசக் கூடிய சமூகம் தேவை. அந்த இரண்டு மொழிகளையும் பேசுபவர்கள் ஆங்கில அறிவை கொண்டிருக்க வேண்டும் என்றார்.

(உ-14)

## யாழ். கோட்டை புனரமைப்பு சிறந்த முறையில் நடக்கிறது

### நெதர்லாந்து தூதுவர் திருப்தி

யாழ்ப்பாணம்.நவ.18

யாழ். கோட்டையின் புனரமைப்பு பணிகள் சிறந்த முறையில் இடம்பெற்று வருவதாக நெதர்லாந்து தூதுவர் லியோனி குலேனறே அம்மையார் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரிடம் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்துத் தூதுவர் லியோனி குலேனறே அம்மையாருக்கும், யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருக்கும் இடையிலான சந்திப்பொன்று மாவட்ட செயலகத்தில் நேற்று மாலை இடம்பெற்ற போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ். கோட்டையின் புனரமைப்பிற்காக நெதர்லாந்து அரசாங்கம் 62 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளது. இதற்கு மேலதிகமாக இலங்கை அரசாங்கம் 43.4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கியுள்ளது.

நெதர்லாந்து அரசு மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்பு வேலைகளை பார்வையிடுவதற்காகத்தான் நான் இங்கு வந்தேன். இங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு வேலைகள் திருப்தி அளிப்பதாக உள்ளன என நெதர்லாந்துத் தூதுவர் அரச அதிபரிடம் தெரிவித்தார்.

இதன் போது யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக அரச அதிபர் தூதுவருக்கு விளக்கினார்.

இந்தக் கலந்துரையாடலின் போது யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி. இமெல்டா சுகுமார், மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபனி வரதலிங்கம் , யாழ், செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி. இ. மோகனேஸ்வரன், திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (மற்றுமொரு செய்தி 7ஆம் பக்கத்தில்)

(த-15)

## மாகாண ஆங்கில போட்டியில் பற்றிக்ஸுக்கு 4 முதலிடங்கள்

யாழ்ப்பாணம்,நவ.18

2010 ஆம் ஆண்டுக்கான மாகாண மட்ட ஆங்கிலத்தினப் போட்டியில் யாழ்.செண். பற்றிக்ஸ் கல்லூரிக்கு நான்கு முதலிடங்கள் கிடைத்துள்ளன.

இந்தப் போட்டி கடந்த வாரம் மன்னாரில் நடைபெற்றது.

இதில் இளவயதுப் பிரிவிற்குரிய நாடகப் போட்டியில் செண். பற்றிக்ஸ் கல்லூரி முதலாம் இடம்பெற்றது. சொல்வதெழுதல் போட்டியில் மேற்பிரிவில் மாணவன் சி.செல்வன் நித்திலன் முதலாம் இடம் பெற்றார். அதே பிரிவில் நடைபெற்ற திடீர் பேச்சுப் போட்டியில் ஏ.வி.ஆர். துஷான் முதலாம் இடம்பெற்றார். அதே பிரிவில் நிகழ்ந்த பாவோதல் போட்டியில் பி.ஏ.ஆர். திவாகரன் முதலாம் இடத்தையும், தனி நடிப்பில் 2 ஆம் இடத்தையும் பெற்றுக் கொண்டார்.

11 ஆம் தர மாணவர்களின் குழு நடிப்பு போட்டியில் கல்லூரி இரண்டாம் இடத்தை பெற்றது பாவோதலில் ஜே.ஜே. ஜீவநேசன் மூன்றாம் இடத்தை பெற்றுக் கொண்டார்.

முதலிடங்களை பெற்றவர்கள் தேசியமட்டப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ளனர். (த)

## வரவு-செலவுத் திட்டத்தில் அரச ஊழியருக்கு நிவாரணம்

### அமைச்சர் மைத்திரிபால தகவல்

கொழும்பு,நவ.18

இம் முறை வரவு செலவுத்திட்டத்தின் போது அரச சேவையாளர்களுக்கு உச்ச நிவாரணம் வழங்கப்படுமெனவும் , தனியார் துறை ஊழியர்களுக்கும் அத்தகைய நிவாரணத்தை வழங்கி முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சு வார்த்தைகள் நடைபெறுவதாகவும் சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போது மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர், நாட்டின் நலனுக்காக உழைக்கும் தொழிலாளர் சமூகத்துக்கு உரிய நிவாரணங்களை வழங்கும் வரவு செலவுத் திட்டமொன்று ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்படுமெனவும் உறுதியளித்தார்.

(த-5)

## கிளிநொச்சியில் பண மோசடி; நால்வருக்கு விளக்கமறியல்

கொழும்பு,நவ.18

பாதுகாப்பு அமைச்சின் தடுப்புக் காவலில் உள்ள புலிச் சந்தேக நபர்களை விடுவித்துத் தருவோம் எனக் கூறி கிளிநொச்சி பிரதேசத்தில் உள்ள பொது மக்களிடம் லட்சக் கணக்கில் பணம் பறிக்க முயன்ற மேஜர் சீலன் என்பவரும் அவரது நான்கு சகாக்களும் கைதுசெய்யப்பட்டு கிளிநொச்சி நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் பீ.சிவகுமார் உத்தரவிட்டார்.

நீதிமன்றத்துக்கு பொலிஸார் சமர்ப்பித்த அறிக்கையில் மேஜர் சீலன் என்பவர் இராணுவத்துடன் சம்பந்தப்பட்டவரே அல்ல என்றும், பணம் பறிப்பதற்காக தன்னை அவ்வாறு அறிமுகம் செய்து கொண்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சீலனுக்கு சிங்களம் பேசத் தெரியாது. எனவே அவர் கனகபுரம் பாடசாலை அதிபரை சிங்கள மொழிபெயர்ப்புக்கு அமர்த்திக் கொண்டிருந்தார். புலிப் போராளிகளை விடுவிக்க அவர்களின் பெற்றோர், உறவினர்களிடம் இருந்து தலா 10 ஆயிரம் ரூபாவை இக்கும்பல் பெற்றுள்ளது.

இந்த மோசடி தொடர்பாக ஏற்கனவே ஒருவர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டமை தெரிந்ததே..

(த)

## காத்தான்குடி பெண் மக்காவில் மரணம்

கொழும்பு,நவ.18

புனித மக்கா நகருக்கான ஹஜ் பயணத்தை மேற்கொண்டிருந்த இலங்கைப் பெண்ணொருவர் மக்கா நகரில் மரணமடைந்துள்ளார். புதிய காத்தான் குடி, மத்திய வீதியைச் சேர்ந்த மரியம்பீவி (வயது-55) என்ற பெண்ணே நேற்று முன்தினம் காலை மரணமாகினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவர் மக்கா நகரிலுள்ள அறபா மைதானத்திலிருந்து முஸ்தலிபா எனும் இடத்துக்குப் பயணித்துக் கொண்டிருக்கையிலேயே இவர் மரணமாகினார். இவரது ஜனாஸா நேற்று முன்தினம் மாலை மக்காவிலேயே நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மொபெட்' மோட்டார் சைக்கிள்களை பதிவில்லாமல் பயன்படுத்த முடியாது

## யாழ். பொலிஸ் தலைமையகம் தகவல்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ். மாவட்டத்தில் தற்போது பாவனையில் உள்ள 'மொபெட்' ரக மோட்டார் சைக்கிள்கள் அனைத்தும் உடன் பதிவு செய்யப்படவேண்டுமென யாழ். பொலிஸ் தலைமையக இன்ஸ்பெக்டர் சமன் சிகேரா அறிவித்துள்ளார். பதிவு செய்யப்படாத மோட்டார் சைக்கிள்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு;

யாழ். மாவட்டத்தில் தற்போது பெரும் எண்ணிக்கையான 'மொபெட்' ரக மோட்டார் சைக்கிள்கள் பாவனையில் உள்ளன. தலைக்கவசம், சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவை இல்லாமல் இவற்றைப் பயன்படுத்தக் கூடிய நிலைமை உள்ளதால் பலர் அவற்றை விரும்பிக் கொள்வனவு செய்து வருகின்றனர். இதனால் இவற்றின்எண்ணிக்கை யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

இந்த 'மொபெட்' ரக மோட்டார் சைக்கிள்களில் பெரும்பாலானவை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்யப்படாமலே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இனிமேல் பதிவு செய்யப்படாமல் இந்த மோட்டார் சைக்கிள்களை எவரும் பயன்படுத்த முடியாது.

பதிவு செய்யப்படாத நிலையில் இந்த மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்படுவதால் இதனைப் பாவித்துக் குடாநாட்டின் பல இடங்களிலும் குற்றச் செயல்கள், கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெறுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. எனினும் இவை பதிவு செய்யப்படாமல் பயன்படுத்தப்படுவதால் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. பொது மக்களினால் அந்த மோட்டார் சைக்கிள்கள் தொடர்பான விவரங்களை அறிய முடியாத நிலை உள்ளது.

எனவே 'மொபெட்' ரக மோட்டார் சைக்கிள்களை வைத்திருப்போர் உடனடியாக அவற்றை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் பதிவு செய்ய வேண்டும். பதிவு செய்யாத சைக்கிள்களின் உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளும் பணியைப் பொலிஸார் ஆரம்பித்துள்ளனர் என்றார். (த)

## மேர்வினால் மற்றுமொரு சலசலப்பு

# குர்பானுக்கு அறுக்கவிருந்த மாடுகளில் இருபது மாயம்

கொழும்பு,நவ18

ஹஜ்ஜுப் பெருநாளை முன்னிட்டு குர்பான் வழங்குவதற்காக களனித் தொகுதிப் பள்ளி வாசல்களிலும் முஸ்லிம்களின் வீடுகளிலும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த மாடுகளை பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா பொலிஸாரின் உதவியுடன் பலவந்தமாகக் கொண்டு சென்றார் என்றும், அந்த மாடுகள் திருப்பி ஒப்படைக்கப்பட்ட போது அவற்றில் 20 மாடுகள் காணாமற் போய்விட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது.

களனி தொகுதியில் ஹுனுப்பிட்டிய பேலியகொட பகுதியில் இருந்தே மாடுகள் பலவந்தமாகக் கொண்டு செல்லப்பட்டன. அவை வெட்டப்படுவதைத் தடுப்பதற்காகவே கொண்டு செல்லப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.

அந்த மாடுகள் பொலிஸ் நிலையங்களில் கட்டிவைக்கப்பட்டிருந்தன என பின்னர் தெரிய வந்தது.

இந்த நிலையில் மேல்மாகாண சபை உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இது தொடர்பாக முஸ்லிம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் கவனத்துக்கு கொண்டு வந்தார். இதையடுத்து இந்த மாடுகள் சம்பந்தப்பட்டவர்களிடம் நேற்று அதிகாலை 3.00 மணியளவில் ஒப்படைக்கப் பட்டன.

இருந்தும் பலவந்தமாகக் கொண்டு செல்லப்பட்ட சுமார் 70 மாடுகளில் 20 மாடுகளைக் காணவில்லையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் அமைதியான ஹஜ் பெருநாள் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம் மக்கள் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் ஹஜ் பெருநாளை பக்திபூர்வமாகக் கொண்டாடினார்கள். பல இடங்களில் ஹஜ் பெருநாளை ஒட்டிய சிறப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

யாழ். மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வாழ்ந்து வந்த முஸ்லிம்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மீண்டும் குடாநாட்டில் குடியமர்ந்துள்ளனர். இவ்வாறு மீளக் குடியமர்ந்துள்ள மக்களும் நேற்று பெருநாளை அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் கொண்டாடினார்கள்.

ஹஜ் பெருநாளையொட்டி யாழ்ப்பாணத்தில் உள்ள பள்ளிவாசல்களில் விசேட தொழுகைகள் இடம்பெற்றன. பெரும் எண்ணிக்கையான முஸ்லிம்கள் இந்தத் தொழுகைகளில் கலந்துகொண்டனர். ஹஜ் பெரு நாளையொட்டிப் பள்ளி வாசல்களில் விசேட நிகழ்வுகளும் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

நீண்ட காலத்தின் பின்னர் மன அமைதியுடன் யாழ்ப்பாணத்தில் ஹஜ் பெருநாளைக் கொண்டாடக் கூடிய சூழல் ஏற்பட்டமை சந்தோசமாக உள்ளதென மீளக்குடியமர்ந்துள்ள எம்.எம்.பளீல் தெரிவித்தார். (த)

## சமாதானம் மலரட்டும்



வேண்டுதல் : நேற்று முஸ்லிம்களின் ஹஜ் பெருநாள் கொண்டாடப்பட்டது யாழ்ப்பாணத்தில் உள்ள முஸ்லிம்களும் ஹஜ் பெருநாளை பக்திபூர்வமாகக் கொண்டாடினார்கள். யாழ். நாவலர் வீதியில் உள்ள முகம்மதியா ஜும்மா பள்ளிவாசலில் முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டுள்ளனர். (த-7)

# மூன்றாவது நாளாகவும் தொடரும் தேவதாசனின் உண்ணாவிரதப் போர்

கொழும்பு, நவ.18

புதிய மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள திரைப்பட கூட்டுத்தாபனத்தின் அதிகாரியான தேவதாசனின் உண்ணாவிரதம் மூன்றாவது நாளாகவும் தொடர்கிறது.

தேவதாசனின் எதுவித நீராகாரமுமின்றி தமது உண்ணா நோன்பை மூன்றாவது நாளாகவும் தொடர்கிறார்.

இதேவேளை நேற்று தேவதாசனைப் பார்வையிட்ட சிறைச்சாலை அதிகாரிகள், அவரின் உண்ணாவிரதம் மற்றும் உடல் நிலைகுறித்து மேல் மட்ட அதிகாரிகளுக்கு தாங்கள் அறிவித்திருப்பதாகவும் விரைவில் நல்ல தொரு தீர்வு கிடைக்குமென வும் எனவும் தெரிவித்தனர். (ஓ)

# உலக வாலிபர் விழாவுக்கான முன்னேற்பாடு யாழ்.பல்கலையில்

## அமைச்சர் எஸ்.பி. கலந்துகொண்டார்

யாழ்ப்பாணம்,நவ.18

உலக வாலிபர் விழாவை ஒட்டிய முன்னேற்பாட்டு நிகழ்வு ஒன்று யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக உயர் கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க கலந்து கொண்டார்.

'உலக சமாதானத்தை ஆதரிப்போம் சமுதாய மாற்றத்துக்காக ஏகாதிபத்தியத்தை தோற்கடிப்போம்' என்னும் தொனிப் பொருளில் 17ஆவது உலக வாலிபர் - மாணவர் விழா எதிர்வரும் டிசெம்பர் 13 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை தென்னாபிரிக்காவில் இடம்பெறவுள்ளது.

உலக ஜனநாயக வாலிபர் சம்மேளனம் உலகம் முழுவதிலுமுள்ள மாணவர் இயக்கங்களுடன் இணைந்து இந்த நிகழ்வை நடத்த ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இதற்காக, இலங்கையில் பல அரசியல் கொள்கைகளைக் கொண்ட வாலிபர் - மாணவர்கள் இயக்கங்களின் பிரதிநிதிகளைக் கொண்ட தேசிய ஏற்பாட்டுக் குழு ஒன்று தற்போது அமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஏற்பாட்டுக் குழுவின் ஒழுங்கமைப்பில் 17 ஆவது உலக வாலிபர் - மாணவர் விழாவைக் கொண்டாடுவதற்கான முன்னேற்பாட்டு நிகழ்வே நேற்று யாழ். பல்கலைக்கழகக் கைலாசபதி கலை அரங்கில் இடம்பெற்றது.

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் செயலாளர் எஸ்.சிறிரங்கன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது தேசிய ஏற்பாட்டுக் குழுவின் தலைவரும் உயர் கல்வி அமைச்சருமான எஸ்.பி திஸாநாயக்கா ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ஏ.எச்.அஸ்வர் யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள்,விரிவுரையாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (த-14)

# அம்பாந்தோட்டை துறைமுகத்தில் முதலாவது கப்பல் இன்று நுழையும்

கொழும்பு,நவ.18

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் இன்று வியாழக்கிழமை நுழையும் முதலாவது கப்பலை வரவேற்பதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

துறைமுகத்தின் நிர்மாணப் பணிகளை பிரதி அமைச்சர் நேற்று நேரடியாக சென்று பார்வையிட்டார். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெறவுள்ள வைபவத்தில் முதலாவது கப்பல் வரவேற்கப்படும் என்று துறைமுக அதிகாரசபை அறிவித்துள்ளது.

பண்டைய பட்டுப் பாதையை நினைவுகூரும் வகையில் பிரித் பாராயணத்துடன் ஒரு வழிகாட்டிப் படகு துறைமுகத்துக்குள் பிரவேசிக்கும். இதையடுத்து முதலாவது கப்பல் துறைமுகத்துக்குள் நுழையும்.

'ஜெட் லைனர்' கப்பல் மற்றும் இலங்கை வர்த்தகர் ஒருவருக்குச் சொந்தமான மற்றொரு கப்பல் என்பனவும் இன்று அம்பாந்தோட்டை துறைமுகத்தை வந்தடையும்.

# சிறைச்சாலை உயர் அதிகாரிகள் 10 பேருக்கு உடனடி இடமாற்றம்

கொழும்பு,நவ.18

சிறைச்சாலைத் திணைக்களத்தின் பத்து உயரதிகாரிகள் புதிய சிறைச்சாலை அதிகாரிகளாக உடனடியாக இடமாற்றம் செய்ய சிறைச்சாலைகள் புனருத்தாபன அமைச்சர் டியூ குணசேகர அனுமதி வழங்கியுள்ளார்.

இரண்டு வருடங்களுக்கு மேலாக ஒரே இடத்தில் பணிபுரிந்த இந்த அதிகாரிகள் அவசியமான பணிகளுக்கும் ஒய்வு பெற்றுச் செல்லும் அதிகாரிகளின் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

அதற்கமைய விசேட தர சிறைச்சாலை அதிகாரியான ஏ.ஹப்பு ஆராச்சி சிறைச்சாலை ஆணையாளர் (தொழில் நுட்பம்) ஆகவும், போகம்பரை சிறைச்சாலை அதிகாரி ஜீ.பி. குலதுங்க சிறைச்சாலைகள் தலைமையக அதிகாரியாகவும் வெலிக்கடை சிறைச்சாலை அதிகாரி ஓ.ஜீ. விக்கிரமசிங்க மஹர சிறைச்சாலை அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டு இடமாற்றம் பெறுகிறார்கள்.

மஹர சிறைச்சாலை அதிகாரி எல்.அபேகுணவர்தன வெலிக்கடைக்கும் கொழும்பு றிமாண்ட் சிறைச்சாலையின் பீ.என்.உடுல தெனிய ஆராய்ச்சி மற்றும் பயிற்சிப் பிரிவுக்கும் பல்லேகல சிறைச்சாலையின் பீ.ஏ.ஜயசிங்க போகம்பர சிறைக்கும் இடமாற்றம் பெறுகின்றனர்.

காலி சிறைச்சாலையின் ஏ.பீ. ஜயசிங்க கொழும்பு றிமாண்ட் சிறைச்சாலைக்கும் அநுராதபுர சிறைச்சாலையின் கே.ஜ.ட.டீ சில்வா காலி பூஸா சிறைக்கும் மஹர சிறையின் டபிள்யூ.எல். சந்திரசிறி அநுராதபுரத்துக்கும் பூஸா சிறையதிகாரி ஏ.டீ.திஸ்ஸ பல்லேகல சிறைச்சாலைக்கும் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றனர். (த-5)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீடித்து நிலைபெறவல்ல சமூக, அரசியல் பொருளாதார மாற்றங்கள் இன்றைய தேவை

## யாழ். பல்கலைக்கழக ஆய்வு மாநாட்டில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், நவ.18

நீடித்து நிலைபெறவல்ல சமூக, பொருளாதார, அரசியல் மாற்றங்களே இன்றைய காலத்தின் தேவை என்று யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழக ஆய்வு மாநாட்டை கடந்த திங்கட்கிழமை தொடங்கிவைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சமூக உணர்திறனுடனான உன்னத கல்வியே எமது பல்கலைக்கழகத்தின் உயரிய இலக்காகும். இந்த வகையில் சமூக மீள் இணக்கத்துக்கும் மீள் மேம்பாட்டிற்குமான அறிவு என்ற தொனிப்பொருளில் பல்கலைக்கழகத்தின் ஆய்வு மாநாட்டை தொடக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

சமூக மீள் இணக்கமும் மேம்பாடும் இன்றைய காலத்தில் மந்திரச்சொற்களாகியுள்ளன. நீதியான அழகான அனைவருக்கும் வாழ்வு தரும் சமூக உருமாற்றத்துக்கு இந்த இரண்டு எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவும் செயலும் இன்றியமையாதன. இவற்றை நிதர்சனமாக்குவதற்குத் தேவையான அறிவுப் பலத்தை இம் மாநாடு தரும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

மீள் மேம்பாடு, மீள் அபிவிருத்தி என்பது எங்களது சமூகத்தின், கிராமங்களின், நகரங்களின் பண்பாட்டில் மீள் எழுச்சி, மறுமலர்ச்சி என்ற பொருளில் அமைகின்றது. பொருளாதார நோக்கிலான மீள் கட்டுமானங்களாக இருந்தாலும் கூட அவை யாவும் மக்களின் இயல்பான வாழ்வாதாரத்தின் அடிப்படையாக இருக்க வேண்டும்.

மீள் அபிவிருத்தியாளர்களின் சந்தை விரிவாக்கத்துக்காக வறிய- நலிந்த மக்களின் காணிகளை-வாழ்வாதாரங்களை விழுங்கிச் செய்யப்படும் மேம்பாட்டுக் கொள்கைகளை நிராகரிக்க வேண்டும். அது தொடர்பான அறிவுசார் கருத்தாளர்களும் மேம்பாட்டில் முழுதளவிலான பார்வையும் ஆய்வுக்கட்டுரைகள் வழியாக எங்களை வந்தடையும் - என்றார்.

இந் நிகழ்வில் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். பல்கலைக்கழக பீடாதிபதிகள், துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், ஆய்வாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஒ-319)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**மதியாபரணம் துஷியா**

நேற்று முன்தினம் (16.11.2010) செவ்வாய்க் கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH - Colombo) நடைபெற்ற உயர் தேசிய முகாமைத் துவ டிப்ளோமா (HNDM) பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெற்ற உசன் - மிருசுவிலைச் சேர்ந்த மதியாபரணம் துஷியா அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் சீரும் சிறப்புடனும் மேலும் பல பட்டங்களைப் பெற்று பல்லாண்டுகாலம் வாழ்வதற்கு எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிய வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ராஜ் அண்ணா குடும்பம், உறவினர்கள்.
கே.கே.எஸ். வீதி, கோண்டாவில் மேற்கு.
(106142)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**அந்தோனிப்பிள்ளை சுதர்ஷன் திலீப்குமார்**

16.11.2010 செவ்வாய்க்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய கணக்கியல் டிப்ளோமா H.N.Dip.in.Acc. பட்டம் பெற்றமைக்காக மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்து வாழ்த்துகின்றோம்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.
(106130)

வாழ்த்துவோர்:
ரனிஸ், பவானி, வினித்
குடும்பத்தினர் (பிரான்ஸ்).



## அறிவித்தல்

### ஹோம் பினான்ஸ் லிமிட்டட்

(தற்போது கலைப்பிலுள்ளது)

கொழும்பு மாவட்ட நீதிமன்ற வழக்கு இல.91/CO

வைப்பாளருக்கான அறிவித்தல்

**வைப்பு மீளளிப்பு கோரலுக்கான இறுதித் திகதி**

ஹோம் பினான்ஸ் லிமிட்டட் கம்பனியின் வைப்பாளர்கள் தமது பணவைப்புக்களின் மீளளிப்புக்கான விண்ணப்பங்களை கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் நியமிக்ககப்பட்ட கம்பனிக் கலைப்பாளரிடம் 1982 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளுக்கமைய எதிர்வரும் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

மீளளிப்புக்கான விண்ணப்பப்படிவங்களை வேலை நாள்களில் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை கீழ்க் காணும் முகவரியில், உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். நேரில் வர முடியாதோர் தமது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலம் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். மேலும், தபால் மூலம் உரிய ஆவணங்களின் பிரதிகளை அனுப்பியும் மேற்படி படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம். ஏற்கனவே எமக்கு விவரங்களைச் சமர்ப்பித்தவர்களுக்கான விண்ணப்பப்படிவங்கள் தபால் மூலம் விரைவில் அனுப்பி வைக்கப்படும்.

உரிய முறையில் நிரூபிக்கப்பட்ட வைப்பாளருக்கான மீளளிப்புகள், மேற்படி கம்பனிகள் சட்டத்திற்கமைவாக கம்பனியின் சொத்துக்களை விற்றொதுக்கிப் பெறும் நிதிக்கமைவாக, கம்பனிக் கலைப்பாளரினால் வழங்கப்படும்.

2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதியின் பின் கிடைக்கப்பெறும் மீளளிப்புக்கான விண்ணப்பங்கள் கம்பனிக் கலைப்பாளரினால் வழங்கப்படக்கூடிய மீளளிப்புக்களில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டா என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேலதிக விவரங்களுக்கு கீழ்க்கண்ட தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

The Liquidators
Home Finance Ltd
C/O, SJMS Associates,
No.30-2/1, (2nd Floor) Galle Road,
Colombo - 06. T.P. 2508874

(சி/572385)


## பொன்சேகா...

(முதலாம் பக்கத் தொடர்சி)

நீதிமன்றில் நடைபெற்றது. இவ்வழக்கு விசாரணைக்கு சமுகமளித்துவிட்டு வெலிக்கடை சிறைச்சாலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது சரத் பொன்சேகாவுக்கு சுகயீனம் ஏற்பட்டது. இதனை அடுத்து அவர் சிறைச்சாலை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் மாலை சேர்க்கப்பட்டார்.

ஆஸ்மா நோய் ஏற்பட்டதன் காரணத்தினாலேயே சரத் பொன்சேகா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார் என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் வீ.ஆர்.டி.சில்வா தெரிவித்துள்ளார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவின் உடல்நிலை மோசமான நிலையில் இல்லை. அவருக்கு ஓரிரண்டு நாள்களே ஓய்வு தேவைப்படுகிறது என்று அவர் மேலும் கூறினார். (ஒ-சி)

## சாட்சியங்களை...

(முதலாம் பக்கத் தொடர்சி)

உறவினர்கள், போருக்கு முன்னரும் பின்னரும் இறந்தவர்களின் உறவினர்கள் மற்றும் நேரடியாகவே பாதிக்கப்பட்டவர்கள் என அனைவரும் உடனடியாகத் தமது சாட்சியங்களை நிபுணர் குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு பிரித்தானியத் தமிழர் பேரவை வேண்டுகோள் விடுக்கிறது.

டிசம்பர் மாதம் 15ஆம் திகதியோடு ஐ.நாவால் வழங்கப்பட்ட கால எல்லை முடிவடைவதால் உடனடியாக சாட்சியங்களை அனுப்பி உதவுமாறு அது வேண்டி நிற்கிறது.

சாட்சியங்களை அனுப்புவோரின் பெயர்கள் உட்பட அனைத்து விடயங்களும் இரகசியமாகக் கையாளப்படும் என பிரித்தானிய தமிழர் பேரவை உறுதி அளித்துள்ளது.

0044 207 183 4009 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு நீங்கள் அழைப்பதன் மூலம் எங்கள் பிரதிநிதிகளை நீங்கள் தொடர்புகொள்ளலாம். ஐ.நா. சபை ஏற்படுத்தித் தந்திருக்கும் இச் சந்தர்ப்பத்தை நாம் பயன்படுத்தவில்லை என்றால், நாம் வரலாற்றுத் தவறை இழைத்த தமிழர்கள் ஆகிவிடுவோம். எனவே விரைந்து செயற்படுங்கள் எனப் பிரித்தானிய தமிழர் பேரவை கோரிக்கை விடுத்துள்ளது. (ஒ-சி)


### வீடு வாடகைக்குத் தேவை

தேவை. யாழ். நகரை அண்டிய பகுதிகள்
விரும்பத்தக்கது. தொடர்பு: 0775341951


# நாவற்குழியில் தமிழ் மக்களும் கொட்டில்கள் போட்டு குடியேறினர்

## சரியான நடவடிக்கை என்கிறார் சுரேஷ்

நாவற்குழியில் வீடமைப்பு அதிகாரசபைக்குச் சொந்தமான காணிகளில் கொட்டில்கள் போட்டு, குடியேறிய தமிழ் மக்களை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் நேற்றுப் பார்வையிட்டார்.

இதன்போது தாம் அரசகாணியில் குடியேறியமைக்கான காரணத்தை அம்மக்கள் தெரியப்படுத்தினர்.

அவர்கள் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் தெரிவித்தவை வருமாறு:-

இந்தக் காணி அரச காணியென்று தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும்,உண்மையில் இந்தக் காணிகளில் நீண்டகாலத்துக்கு முன்னர் நாமே வாழ்ந்துவந்தோம். 1995ஆம் ஆண்டு இந்த மண்ணில் இருந்து இடம்பெயர்ந்து வெளியேறியிருந்தோம். ஆயினும் இப்போது

நாங்கள் பிறரின் வீட்டுக்காணிகளில் வாழ்ந்து வருகின்றோம். இந்நிலையில் மீண்டும் நாங்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை. நாங்கள் அலைந்து திரியும் போது எமது நிலத்தில் சிங்களவர்கள் வந்து எவ்வாறு குடியேற முடியும்?

நாங்கள் வாழ்ந்து வந்த காணிகளில் சிங்கள மக்கள் குடியேறும் போது நாமும் குடியேறத்தானே வேண்டும் - என்றனர்.

மக்களைச் சந்தித்தபின்னர் சுரேஷ் எம்.பி தெரிவித்தவை வருமாறு :-

நாற்பது ஐம்பது வருடங்களுக்கு மேலாக எமது மக்கள் இருப்பதற்கு இடமில்லாமல் பல்வேறுபட்ட இடங்களிலும் இருந்துவருகின்றனர். அவர்களுக்கு உரிய வசதிகளை அரசு செய்து கொடுத்திருக்க வேண்டும்.

மாறாக அவர்கள் விரட்டப்பட்டிருப்பதுடன், அவர்களின் இடங்களில் சிங்களமக்கள் குடியேற்றப்பட்டுள்ளார்கள். இந்நிலையில் தமிழ் மக்கள் தமது இடத்திற்கு வந்திருக்கின்றார்கள். இந்த குடியேற்றம் சரியான நடவடிக்கை தான். எனவே அரசு உடனடியாகச் செயற்பட்டு சட்டரீதியான நடவடிக்கை எடுத்து எமது மக்களுக்கான ஆவணங்களை வழங்கவேண்டும்.

இது அரசினுடைய கடமை. அரசு சட்ட ரீதியாகச் செயற்படாமல் அதற்கு மாறாக தென்னிலங்கையில் இருந்து மக்களைக் கொண்டு வந்து எமது மக்களுக்குச் சொந்தமான காணிகளில் குடியமர்த்துவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. எனவே எமது மக்கள் குடியேறுவார்கள் என்பதும் அவர்களைக் குடியேற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதுமே எமது கருத்தாகும் - என்றார். (எ)

# சர்வ மதப் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், நவ.18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பிறந்த தின நிகழ்வை முன்னிட்டும் இரண்டாவது பதவியேற்பு வைபவத்தை குறிக்கும் முகமாகவும் இன்று வியாழக்கிழமை வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாநாட்டு மண்டபத்தில் சர்வமதப் பிரார்த்தனையும், ஆசீர்வாத நிகழ்வும் நடைபெறும் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ)


## ஓராண்டு நினைவஞ்சலி



**கோணேசப்பிள்ளை கதிரவேற்பிள்ளை (பூரி அப்பா)**

திதி:19.11.2010

தாயின் மடியில்
14.09.1931

இறைவன் அடியில்
29.11.2009

உள்ளத்தில் உயர்வாகி
இதயத்தில் இறையாகி
வானுறையும் தெய்வத்துள்
தெய்வமாகி
எம் அன்பு மலர்த் தோட்டத்து
அணையா விளக்கே!
வல்வை தனில் அவதரித்து
வல்வை மண் புகழ்சேர்த்து
பண்பின் சிகரமாய்
பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்த-எம்
இல்லறத்தின் இதய விளக்கே!
நீங்கள் எம்மை விட்டுச் சென்று
ஓராண்டு சென்றாலும்-எம்
நெஞ்சில் விதைக்கப்பட்டு விட்டீர்கள்!

நாளை (19.11.2010) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் முதலாம் ஆண்டு ஆத்ம சாந்திப் பிராத்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கொத்தியால்,
வல்வெட்டித்துறை. (சி/573014) குடும்பத்தினர்.



## மரண அறிவித்தல்

**சபாபதிப்பிள்ளை கந்தையா**

வட்டு.மேற்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சபாபதிப்பிள்ளை கந்தையா (தவராசா) நேற்று (17.11.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், சந்திரசேகரன், ஜீவசேகரன், இந்துமதி, கோமதி, சேகர் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞானேஸ்வரி, சிவகலை, திருச்செல்வம், ஞானக்குமார், சூரியகலா ஆகியோரின் அன்பு மாமனாரும், கிருஷ்ணமேனன், அபிசன், ஆருஜன், ஆரபி, ஆதுஷன், சர்மிலன், யதீசன், மதுஷன்; சர்வின், மதுமிலன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2010) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு.மேற்கு,
வட்டுக்கோட்டை.
தொ. இல. : 021 300 6198 (சி/573029)

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## மனங் கொள்வாரா ஜனாதிபதி?

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக நாளை பதவி ஏற்கிறார். அதற்கான கொண்டாட்டங்கள் பலவற்றுக்கும் நாடாளவிய ரீதியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாட்டு மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தி, ஜனநாயகத்துக்கு முதன்மை இடம் கொடுத்து, மக்களின் இப்போதைய துன்ப துயரங்களை நீக்கி அவர் நல்லாட்சி நடத்த வேண்டும் என்பதே இங்கு வாழும் மக்கள் அனைவரினதும் பெரும் விருப்பமாகும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், அவர்கள் இரண்டாந்தரப் பிரசைகள் என்ற உணர்வுடன் வாழவேண்டிய நிலை உருவாக்கப்பட்டுள்ளது. அவர்கள் தமக்கு உரித்தான உரிமைகளை அனுபவிக்க முடியாத விரக்தியுடன் வாழ நேர்ந்துள்ளது மட்டுமன்றி, தொடர்ந்தும் அடக்கி, ஒடுக்கப்படும் நிலையே தொடர்கிறது. வெளிப்படையாக இராணுவ ஆட்சி எழுத்தில் இல்லையெனினும் அதன் கீழ் தாம் நாள்களைக் கழிப்பது போன்ற ஓர் உள்ளுணர்வுடனும், அச்சத்துடனும் வாழ வேண்டியதோடு, அவர்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். அவற்றை இங்கே விவரமாக பட்டியலிட இது உரிய தருணமன்று.

இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாகப் பதவி ஏற்கும் நாளைய நாளில், தமிழ் மக்களுக்கு மனிதாபிமானம் காட்டப்படும் என்பதற்கு சமிக்ஞையாக, நல்லகாரியம் ஒன்றைச் செய்யுமாறு, நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் தமிழ் உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீண்ட காலமாக சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் தமிழ் இளைஞர்கள்,யுவதிகள் தமது எதிர்காலத்தை இழந்தவர்களாக வாடுகின்றனர். ஜனாதிபதி தாம் பதவியேற்கும் நாளில் அவர்களின் விடுதலை குறித்து அறிவிக்கவேண்டும் என்று- நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கோரியுள்ளார்.

அந்தக் கோரிக்கையை ஏற்று, பலப்பல ஆண்டுகள் சிறைகளில் வாடும் தமிழ் இளைஞர் யுவதிகளையும் மற்றும் சரண்அடைந்த போராளிகளையும், அவர்களுக்கு மன்னிப்பு வழங்கி, விடுதலை செய்யவேண்டும் என்பது நாடாளுமன்ற உறுப்பினரின் வேண்டுகோள்.

அந்த வேண்டுகோளை நிறைவேற்றினால், தமிழ் மக்கள் ஜனாதிபதிக்குப் பின்னால் அணிவகுக்க, அவரை ஆதரிக்க வழிதிறக்கும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டி உள்ளார்.

எப்படியோ, தமிழர்களை நோக்கிய தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதற்கு சிறைகளில் விசாரணை இன்றியும் நீண்ட காலமாகவும் அல்லற்பட்டு வாழ்க்கையின் ஓரத்துக்கே சென்று தவிக்கும் தமிழ் இளைஞர், யுவதிகளுக்கு ஜனாதிபதி தமது மனிதாபிமானத்தைச் செயலாக்கிக்காண்பித்தால், அதனால் அவரது பிரதிமை உயரும் என்பது மறுக்கப்பாலதன்று.

அடுத்து-

இதேபோன்று, போரின் விளைவாக அகதி முகாம்களில் வாழும் மக்கள் தமது வீடுகளுக்குச் செல்லவும்-

மீளக்குடியேறிய மக்களின் இப்போதைய இடர்ப்பட்ட வாழ்க்கைக்கு முடிவுகட்டும் விதத்தில் அவர்களுக்கு உதவவும்- ஜனாதிபதி படிப்படியாக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சர்வ அதிகாரங்களையும் தம்மிடத்தே வைத்திருக்கப்போகும் ஜனாதிபதி-

தமிழ் மக்களும் இந்த நாட்டின் குடிமக்கள், அவர்களும் பல நூற்றாண்டுகளாக இந்த நாட்டில், மண்ணில் வாழும் மக்கள், பெரும்பான்மையின மக்களைப்போன்று ஜனநாயகப் பரப்பின்பாற்பட்ட சகல உரிமைகளுடனும் அவர்கள் வாழ வேண்டும். அதற்கு வகை செய்வது அவசியம் என்ற நியாய சிந்தையுடன், தாராள மனத்துடன் புதிய நோக்குடன் செயற்படுவதற்கான நல்லெண்ணத்தின் ஆரம்பமாகிவிடும்-

அந்த வழியில் தடம் பதித்து, இனப்பிரச்சினைக்கு பல்லின மக்கள் வாழும் இங்கிலாந்து, சுவிற்சர்லாந்து, ஜேர்மனி, கனடா போன்ற நாடுகளில் நடைமுறையில் உள்ள அரசியல் முறைகளை- இலங்கையிலும் நடைமுறைப்படுத்த முனைந்து- ஓர் அரசியல் தீர்வை முன்வைத்தால்-

இலங்கையின் அரசியல் சீழ்களை அகற்றி, ஆசியாவின் முதல்தர நாடுகளில் ஒன்றாக உயர்ந்து நிற்க வாய்ப்பு உண்டாகும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஜனாதிபதி இவற்றைக் கருத்தில் கொண்டு செயற்படுவதற்கு நாளைய பெருநாளில் முதலாவது காலடியை எடுத்து வைப்பதற்கு மனங் கொள்வாராக.

# குடாநாட்டு சிங்களக் குடியேற்றத்தின் பின்னணியில் தென்னிலங்கை அமைப்பொன்று செயற்படுகிறது

## குற்றஞ்சாட்டுகிறார் விநாயகமூர்த்தி

யாழ்ப்பாணம், நவ. 18

தற்போது ஏற்பட்டுள்ள சுமுகமான சூழ்நிலையைக் குழப்பி மீண்டும் இனமோதல்களை உருவாக்க வேண்டும் என்று துடிக்கின்ற தென்னிலங்கையில் உள்ள அமைப்பொன்றுதான் யாழ்ப்பாணத்தில் சிங்களக் குடியேற்றங்களை நெறிப்படுத்தி வருவதாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தி தெரிவித்தார்.

கொக்குவில் கருவேலடி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

யாழ்ப்பாணத்தில் தற்போது சிங்களக் குடியேற்றங்கள் திட்டமிட்ட முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த மக்கள் இங்கிருந்ததற்கான சொந்தக் காணிகள் எதுவும் இல்லை. இந்த நிலையில் இங்கு குடியேற்றம் செய்வது சட்ட விரோதமானது.

யாழ்ப்பாணத்தில் முன்னர் இங்கிருந்த முஸ்லிம் மக்கள் இங்குவந்து மீள்குடியேறுவது வரவேற்கத்தக்கது. அவர்களை வரவேற்பதில் தப்பில்லை. ஏனெனில் அவர்களுக்குச் சொந்தக் காணி, வீடு உள்ளது.

சிங்கள மக்கள் இங்கு முன்னர் வியாபார நோக்கத்துக்காக இருந்தார்கள் என்ற ஒரே காரணத் துக்காக இங்குள்ள அரச காணிகளில் குடியேற்றம் செய்வதுசட்டவிரோதமானசெயலாகும்.

இங்கு தற்போது நிலவுகின்ற சுமுகமான சூழ்நிலையைக் குழப்பி இனமோதல்களை உருவாக்கவே இத்தகைய செயல் மேற்கொள்ளப்படுகிறது - என்றார். (த-9)

# தமிழ் அரசியல் கைதிகளை விடுவித்தால் ஜனாதிபதியின் பின் அணி திரளத் தயார்

## சபையில் சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, நவ. 18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இரண்டாவது தடவையாக ஜனாதிபதியாக பதவியேற்கும் நாளில் சிறையில்வாடுகின்ற தமிழ் இளைஞர், யுவதிகள் மற்றும் சரணடைந்த போராளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டால் தமிழ் மக்கள் ஜனாதிபதியின் பின்னால் அணிதிரளத் தயாராகவுள்ளனர்.

இப்படி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கூறினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற ஏற்றுமதி அபிவிருத்தி அடிப்படை சட்ட மூலம் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும்கூறியவை வருமாறு:

தமிழர்கள் கடந்த காலங்களை விடவும் இப்போதுதான் அதிக துன்பத்தை அனுபவிக்கின்றனர். அவர்களின் கனவுகள் சிதறடிக்கப்பட்டு மிகவும் துன்பப்படுகின்றனர். இந்த மக்களுக்கு வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்த தீர்வை வழங்குவதன் மூலமே பிரச்சினைகளை நிரந்தரமாகத் தீர்த்து வைக்க முடியும்.

சுவிஸ், கனடா, அயர்லாந்து போன்ற நாடுகளில் காணப்படுகின்ற அரசியல் தீர்வு முறைமையை ஒத்த தீர்வை இங்கும் வழங்க முடியும்.

எமது இளைஞர், யுவதிகளையும், சரணடைந்த போராளிகளையும் விடுதலை செய்தால் தமிழர்கள் ஜனாதிபதியின் பின்னால் அணிதிரளத் தயாராகவுள்ளனர்.

### அகதி முகாம் மக்களுக்கு விடிவுவேண்டும்

அதேபோல் அகதி முகாம்களில் வாழும் மக்கள் தங்களின் வீடுகளுக்குச் செல்வதற்கும் வழிசமைத்துக் கொடுக்க வேண்டும். அவர்கள் மழைக் காலத்தில் மிகவும் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

வடக்கு-கிழக்கில் தமிழர்களின் காணிகளில் வெளியார் அத்துமீறிக் குடியேறுகின்றனர். படையினர் இவர்களுக்கு தங்குமிடங்களை அமைத்துக்கொடுக்கின்றனர். காணிகளின் உரிமையாளர்கள் பார்த்திருக்க அவர் களின் கண்ணெதிரே இந்த அநியாயம் இடம்பெறுகிறது.

இந்த நாட்டில் எவரும் எந்த இடத்திலும் வாழலாம். ஆனால், மற்றவரின் இடத்தில் அத்துமீறிக் குடியேறுதல் கூடாது.

தமிழர்களை அவர்களின் சொந்த இடங்களில் வாழவிடுங்கள். வடக்கு-கிழக்கில் தமிழர்கள் இராணுவ ஆட்சியின் கீழே வாழ்கின்றனர். இந்தச் சபை இந்த உண்மையை மறுக்கின்றது.

தமிழர்கள் மீண்டும் ஒரு போர்ச் சூழலுக்குள் தள்ளப்படுவதை எம்மால் அவதானிக்க முடிகின்றது. அவர்கள் நிம்மதியாக வாழ அவர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்பட வேண்டும்.- என்றார். (சி)

## இருபதவிகளுக்கு ஒரேநேரத்தில் பரீட்சைக்கு விண்ணப்பித்தோர் திண்டாட்டத்தில்

தென்மராட்சி,நவ.18

ஒரே நாளில் ஒரே நேரத்தில் இரு பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகளுக்கு விண்ணப்பித்த பலர் எந்தப் பரீட்சைக்குத் தோற்றுவது எனத் தீர்மானிக்க முடியாமல் திணறுகின்றனர்.

நாளை மறுதினம் சனிக்கிழமை மாகாண பொது முகாமைத்துவ உதவியாளர் பதவிக்குமம் சிறைச்சாலை பாதுகாவலர் பதவிக்கும் போட்டிப் பரீட்சைகள் யாழ்.மாவட்டத்தில் நடைபெறுமென பரீட்சைகள் ஆணையாளரினால் சம்பந்தப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் ஒரு பரீட்சையை வேறு திகதிக்கு மாற்றமாட்டார்களா என பரீட்சார்த்திகள் அங்கலாய்க்கின்றனர். (ம-201-207)

## நாளை

| | | |
|---|---|---|
| கார்த்திகை 3 | | 19.11.2010 வெள்ளிக்கிழமை |
| திதி: | : | திரயோதசி மு.இ.10.22 வரை |
| நட்சத்திரம் | : | அச்சுவினி [illegible] |
| சுபநேரம் | : | 06.09-07.39 வரை |
| ராகுகாலம் | : | 10.39-12.09 வரை |

## எல்லோர் மீதும் அன்பைச் சொரியுங்கள்

''அன்பே எனது போதனை! அன்பே எனது செய்தி! அன்பின் வழியே என் வாழ்வு! உண்மையுள்ளவர்களாக இருங்கள். என்னிடமிருந்து தூர விலகிச் செல்லாதீர்கள்! இறைவனின் பேரொளி இதயத்துள் நிரம்பட்டும் என்றே ஒவ்வொரு மதமும் மனிதனுக்குப் போதிக்கின்றது. நான் அவர்களை நேசிக்கிறேன் என்று சொல்லுங்கள். என்னை நேசிப்பது போன்று எல்லோரையும் நேசியுங்கள். அது வொன்றே நான் உங்களிடம் வேண்டுகின்ற பரிசில்''.

''நல்ல எண்ணங்கள், நல்ல முடிவுகள், தூய அன்பு, கருணை என்பவற்றை மனதில் வளர்த்துக் கொள்ளுங்கள். இதன் மூலம் தீய ஆசைகள் மனதில் எழாதவாறு தடுக்கலாம். இது மட்டுமே உங்களது சிறந்த நலன்களைப் பேணுவதற்கான வழியாகும்.''

''உணவு, பணம், நேரம், சக்தியை வீணாக்காதீர்கள் எல்லாமே தெய்வீகமானவை''

''ஒரு மதம் மட்டுமே உள்ளது. அதுவே ''அன்பு'' எனும் மதம். ஒரு இனம் மட்டுமே உள்ளது அதுவே மனித இனம் ஒரு மொழி மட்டுமே உள்ளது அதுவே இதயத்தின் மொழி. ஒரு இறைவன் மட்டுமே உள்ளான் அவன் எங்கும் நிறைந்துள்ளான்.

''சேவை செய்யும் கைகள் வழிபாடியற்றும் உதடுகளை விடப் புனிதமானவை. சேவைசெய்ய வேண்டும் என்ற ஆர்வம் நிறைந்திருப்பின் இறைவன் உங்களை வழி நடத்துவார் நீங்கள் பயன் படத்தப்படுவீர்கள். சமூகசேவை செய்ய வேண்டுமென்ற உண்மையான வேணவாவின் வெளிப்பாடாக இவ்விருப்பம் அமைய வேண்டும். அன்பு கலந்த சேவை உயர்ந்த இயக்க சக்தியாகும்.''

''நான் அன்பின் வடிவம், சத்யமே எனது மூச்சு, பேரானந்தம் எனது உணவு எனது வாழ்வே நான் தரும் செய்தி, எங்கும் பரந்திருப்பதே என் வாழ்வு, அன்பிற்குக் காரணம் கூறமுடியாது. அன்பு கால நியதிக்கு அப்பாற்பட்டது, பிறப்பும் இல்லை, இறப்பும் இல்லை.'' நான் என்ற ஆணவம் அகன்று போகட்டும் நான் எனும் முனைப்பு அகன்றதும் இறைவன் ஒளி உட்புகுந்து பிரகாசிக்கும்.''

''தெய்வீக வங்கியில் வைப்புக் கணக்கொன்றை ஆரம்பியுங்கள். சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை என்ற பணமே ஏற்றுக் கொள்ளப்படும். நீங்கள் அதில் வைப்புச் செய்திருக்கின்ற அளவுக்குட்பட்டே மீளப் பெறமுடியும். முன்னைய பிறப்புக்களில் வைப்புச் செய்த அளவின் தன்மைக்கேற்ப கடன் பெறலாம். நற்செயல்கள், நல்ல எண்ணங்கள், நல்ல உறவுகள், நல்லோர் சேர்க்கை, நாமஸ மரண எனும் இறைவன் திருநாமத்தை இடையறாது தியானித்தல் ஆகிய சாதனைகளின் விளைவாக வங்கி வழங்கும் மேலதிகப்பற்றுப் போன்று இறைவனின் அளப்பெரும் கருணையும் நமக்குக் கிடைக்கும். இறைவன் என்ற பாதுகாப்பு வங்கியில் உங்களுடன் ஒட்டியுள்ள நான் என்ற ஆபரணத்தை ஒப்படைத்து விடுங்கள்.



சாயி சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BLAKE HALL COLLEGE
BLAKE HALL COLLEGE
Blake Hall College was established as a result if the to help students achiveve personal career dreams through affordable graduate studies in the UK.
SPOT ADMISSION
No Need IELTS / Intake Jan 2011
தேவையான ஆவணங்கள் : O/L , A/L Certificates , Passport
UNDERGRADUATE COURSE
• BA Hons Business Management
• BA Hons Business Marketing
• BA Hons Business Accounting
TOP - UP COURSES
• BA Hons Business
• BSc Hons Business
இறுதி சந்தர்ப்பம்
UK இல் கல்வி தொடர
திகதி : 20th Nov 2010
நேரம் : 9 am - 12 pm
முன் பதிவுகளுக்கு
JAFFNA, BRANCH 82/12 A, CHETTY STREET NALLUR.
Phone:- 0774454646/0777849853
EUROPEAN TECHNOLOGY & BUSINESS COLLEGE
No. 22A, Frankfort Place, Bambalapitiya, Colombo -04, Srilanka.
Tel : 011 2508443 / Mob : 0777 849 853,
Web : www.etbclanka.com / E-mail : etbc@etbclanka.com

# தனியார் சுத்திகரிப்புப் பணியாளர் பணிப்பகிஷ்கரிப்பைக் கைவிட்டனர்

யாழ்ப்பாணம் ,நவ.18

யாழ்.போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய தனியார் சுத்திகரிப்பு பணியாளர்கள் சம்பள உயர்வுகோரி நடத்தி வந்த வேலைநிறுத்தப் போராட்டம் கைவிடப்பட்டது. கடந்த 14 ஆம் திகதி காலை தொடக் கம் தனியார் நிறுவன சுகாதாரப் பணியா ளர்கள் சம்பள உயர்வு கோரி வேலை நிறுத் தத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதனால் வைத்தியசாலையில் சுத்திகரிப்புப் பணிகள் இடம்பெறாமையால் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவின.

பாரம்பரிய மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு இவ் விடயம் கொண்டுவரப்பட்டதையடுத்து, அவர் குறித்த தொழிலாளர்களுடன் பேசினார். அமைச்சர் மேற் கொண்ட நட வடிக்கையையடுத்து திங்களன்று இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு கைவிடப்பட்டது. உரிய அதிகாரிகளுடன் கலந்து ரையாடி விரைவில் தீர்வு காணப்படும் என்று அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

கஜித் கட்டடப் பொருள் விற்பனை நிலையம் திறப்பு விழா அழைப்பு

இல.661/1, கே.கே.எஸ். வீதியில் இயங்கி வந்த கஜித் கட்டடப் பொருள்கள் விற்பனையகம் இடம் மாற்றப்பட்டு 51-A, ஒடை ஒழுங்கை, வண்ணார்பண்ணையில் (தட்டாதெருச் சந்தியில் இருந்து 500 M இல்) 19.11.2010 காலை 7.30 - 8.30 மணி வரையிலான சுபவேளை யில் திறந்து வைக்கப்படவுள்ளது. இத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு வாடிக்கையாளர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

கஜித் கட்டடப் பொருள்கள் விற்பனையகம், ஓடை ஒழுங்கை, வண்ணார்பண்ணை.
தர்சன், உரிமையாளர்.
(106109)

# மின்பொறியில் சிக்கி குடும்பஸ்தர் மரணம்

கொழும்பு, நவ.18

செட்டிக்குளம் பொலிஸ் வலயத்துக்குட்பட்ட குருக்கள் புதுக்குளம் பிரதேசத்தில் காட்டு விலங்குகளைப் பிடிப்பதற்காக இழுக்கப்பட்டிருந்த மின்கம்பியில் சிக்குண்ட நபரொருவர் அவ்விடத்திலேயே மரணமானார்.

கடந்த சனிக்கிழமை அதிகாலையில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. அதனையடுத்து மின்கம்பியை பொறியாக வைத்திருந்த நபர் சடலத்தை அவ் விடத்திலிருந்து அகற்றிப் புளியங்குளம் காட்டின் ஒரு பகுதியில் மறைத்து வைத்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் இதுவரை மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருக்கள் புதுக்குள வாசியான சண்முகநாதன் கிருபன் (24) எனும் திருமணமான நபரே மரணமானவராவார்.

இந்த மரணம் தொடர்பான நீதிவான் விசாரணை வவுனியா நீதிவான் முன்னிலையில் நடைபெற்றது. சந்தேக நபர்கள் மூவரும் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். (ம-5)

கிளி/தருமபுரம் மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம்

இடம் : பாடசாலை பிரதான மண்டபம்
காலம் : 21.11.2010 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப. 3மணி

2011ஆம் ஆண்டுக்கான பரிசளிப்புவிழா, கடந்துபோன பொன் விழா மலர் வெளியீடு, கல்வி நிதியம் ஸ்தாபித்தல் தொடர்பாகக் கலந்துரையாட இருப்பதால் அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தயவாகக் கேட்டுக் கொள்கின்றேன்.

அதிபர்
ச.பூலோகராஜா.
(106114)

# மரண அறிவித்தல்

## அமிர்தவல்லி கந்தசாமி (அம்மாச்சி)



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தவல்லி கந்தசாமி 11.11.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-சின்னத்தங்கம் ஆகியோரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான கணபதிப்பள்ளை உடையார்-தங்கம் ஆகியோரின் மருமகளும், காலஞ்சென்ற கந்தசாமி அவர்களின் அன்பு மனைவியும், நடராசா பாய்க்கியம் (கனடா), செல்வரத்தினம் யோகம் (இரத்தினம், ஆசிரியை - லண்டன்), வைத்திய கலாநிதி K.E.சந்திரபால் (லண்டன்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற விசுவலிங்கம் நடராஜா (முன்னாள் விதானை யார்), காலஞ்சென்ற நாகேந்திரர் செல்வரத்தினம் (அரசாங்க எழுதுவினைஞர் - காணித் திணைக்களம்), சாவித்திரி சந்திரபால் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மதனா (ரஞ்சினி), வேதரஞ்சினி, யோகரஞ்சினி, வதனி, சுபாஷினி, சுபோதினி, சுரேஷினி, சுரேஸ், சித்திரா, சுபத்திரா, ஹரித்திரா ஆகியோரின் நேசமிகு பேர்த்தியும், மதன், தர்மினி, தர்ஷினி, தயாளினி, சோபனா, சங்கீத்தா, சரண்யா, பிரிந்தன், பிரிட்ணி, சிவோண், சரண், சிரோமி, ஜெரோமி, செகான், ஹரன், ஜக், ஜாட், ரிறிஷ்டன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும், கதிராளன், பரகலநர்தன், தமிழவை, நிலான், தாமிரா, சயன், தரண், அகல்யா ஆகியோரின் அன்புக் கொள்ளுப்பாட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 20.11.2010 சனிக்கிழமை St.Mary's Church, Hendon Lane, Finchley Central N3 1TR பார்வைக்கு வைக்கப்பட்டு Hendon Cemetery இல் தகனஞ் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு:
சந்திரபால் - பிரித்தானியா 442083463247, 447734694795
செ.சுரேஸ் - பிரித்தானியா 442086872130, 447515650944
ந.பாய்க்கியம் - கனடா 14165515830

ARRUL GLOBAL EXPRESS
International Courier & Cargo Service
வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள் மற்றும் பொதிகள் சேவை
Worldwide Delivery
Time-definite Express service
Widest range of service options
Easy tracking and proof of delivery
No 1, Brown Road, Navalar Road Junction, Jaffna.
Tel : 021 222 6113
E-mail : arrulexpress@gmail.com

# வீதிகளைப் புனரமைக்குமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.18

புங்குடுதீவுப் பகுதியில் உள்ள சில வீதிகள் பல வருடங்களாகச் சேதமடைந்துள்ளன. இப்பகுதியில் உள்ள மக்கள் போக்குவரத்துச் செய்வதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருவதால் வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பகுதியில் சேதமடைந்துள்ள வீதிகளைத் திருத்தியமைப்பதற்காக உரிய நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.


சேதமடைந்த வீதிகளான கண்ணகி அம்மன் கோயில் வீதி, ஆலடி வல்லன் குறுக்குவீதி, சங்கத்தார் கேணி வீதி, வல்லன் வீதி என்பன கடந்த 25 வருடங்களுக்குமேலாக சேதமடைந்துள்ளன.

மேற்படி வீதிகளுக்கான திருத்த வேலைகள் இதுவரை இடம்பெறவில்லை. இதனால் மக்கள் இப்பகுதியில் முழுமையாகக் குடியமரும் வாய்ப்பு இல்லை எனவும் தற்போது கணிசமானளவு மக்கள் இப்பகுதிகளில் வசிக்கின்றனர் என்றும் குறிப்பிடப்படுகிறது.

மேற்படி வீதிகள் சீரின்மையால் தாம் போக்குவரத்துச் செய்வதில் மிகுந்தசிரமங்களை எதிர்கொள்வதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (201-7)

# மரண அறிவித்தல்

## சின்னப்பு இளையதம்பி



ஏழாலை வடக்கு, கட்டுவன் முனியப்பர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, மஞ்சவனப்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு இளையதம்பி 15.11.2010 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் அன்னரத்தினத்தின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பொன்னையா மற்றும் சின்னத்தம்பி, அன்னமுத்து, சின்னம்மா, சின்னத்தங்கம், ஆச்சிமுத்து ஆகியோரின் சகோதரரும் சீவரட்ணம், யோகேஸ்வரன் (இத்தாலி), விஜயலட்சுமி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிருபாமலர், சறோஜாதேவி, சோதி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் அருட்செல்வன், யசோதா (நோர்வே), யசோதரன் (பிரான்ஸ்), ஜெனகன், ஜெயந்தன் (ஸ்பெயின்), சுபாங்கினி (கொழும்பு), தனுசா (கொழும்பு), சிந்துஜா (சுவிஸ்), சாருஜன் (சுவிஸ்) ஆகியோரின் பேரனும் ரம்யா, ரித்தியா (நோர்வே), கவிஸ்வரன் (கொழும்பு) ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (18.11.2010) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சவனப்பதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (106136)

தகவல்:
மகன் - சீவரட்ணம் (கைலேஸ்)
தொ.பே. 0214902235

## මහජන සම්පත / மஹஜன சம்பத / Mahajana Sampatha

16.11.2010

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2319

வெற்றி எழுத்து: X
வெற்றி எண்கள்: 8 4 9 2 1 2

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | X | 8 | 4 | 9 | 2 | 1 | 2 | ரூபா.17,477,052/= | பரிசு - |
| 1 பரிசுகள் | | 8 | 4 | 9 | 2 | 1 | 2 | ரூபா. 2,000,000/= | பரிசுகள் 01 |
| 2 பரிசுகள் | | | 4 | 9 | 2 | 1 | 2 | ரூபா. 100,000/= | பரிசுகள் 10 |
| 3 பரிசுகள் | | | | 9 | 2 | 1 | 2 | ரூபா. 10,000/= | பரிசுகள் 131 |
| 4 பரிசுகள் | | | | | 2 | 1 | 2 | ரூபா. 1,000/= | பரிசுகள் 1341 |
| 5 பரிசுகள் | | | | | | 1 | 2 | ரூபா. 100/= | பரிசுகள் 13258 |
| 6 பரிசுகள் | | | | | | | 2 | ரூபா. 20/= | பரிசுகள் 130682 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 8 | 4 | 9 | 2 | 1 | | ரூபா. 10,000/= | பரிசுகள் 13 |
| 8 பரிசுகள் | | 8 | 4 | 9 | 2 | | | ரூபா. 1,000/= | பரிசுகள் 140 |
| 9 பரிசுகள் | | 8 | 4 | 9 | | | | ரூபா. 100/= | பரிசுகள் 1318 |
| 10 பரிசுகள் | | 8 | 4 | | | | | ரூபா. 50/= | பரிசுகள் 13100 |
| 11 பரிசுகள் | X | | | | | | | ரூபா. 20/= | பரிசுகள் 52388 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை Rs. 11,695,000.00

அடுத்த சீட்டிழுப்பிகான சுப்பர் பரிசு
Rs. 18,821,233.00

ஐந்து இலட்சம் அல்லது அதற்கு மேற்பட்ட பரிசுத்தொகை அரசாங்க வரி சட்டதிட்டங்களுக்கு உட்படும் பரிசுத்தொகையைப் பெற்றுக்கொள்ள தேசிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்பட வேண்டும். வெற்றி பெற்ற டிக்கட் சீட்டிழுப்பு இடம்பெற்ற தினத்தில் இருந்து ஆறு மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும்.

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
2342 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி 2470662, 4607000, Hotline: 2433631

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் மருத்துவர் பற்றாக்குறை சிகிச்சைக்காக நோயாளர்கள் 10 மணித்தியாலங்கள் காத்திருப்பு

தென்மராட்சி, நவ.18

சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில் மருத்துவர்கள் பற்றாக் குறையினால் சிகிச்சை பெற வந்த நோயாளர்கள் பத்து மணித்தி யாலங்கள் காத்திருந்து சிகிச்சை பெற்றனர்.

மேற்படி வைத்தியசாலை யில் செவ்வாய்க்கிழமை தோறும் நடைபெறும் பொது மருத்துவ கிளினிக்கில் சிகிச்சை பெறுவதற்கு காலை 5 மணிக்கு வந்த நோயா ளர்களும் வெளிநோயாளர் பிரி வில் சிகிச்சை பெற வந்த நோயாளர் களுமாக 600ற்கு மேற்பட்டோர் நேற்றுமுன்தினம் காத்திருந்த னர்.

இதேவேளை நேற்றுமுன் தினம் இரு வைத்தியர்கள் மட் டுமே கடமையில் இருந்ததால் ஒரு வைத்தியர் விடுதி நோயாளர் களைப் பார்வையிட்டு வந்து கிளினிக் நோயாளர்களைப் பார்வை யிட்டார். மற்றொரு வைத்தியர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை வழங்கினார்.

காலையில் வெளிநோயாளர் பிரிவில் 360 நோயாளர்களும் கிளினிக்கில் 250 இற்கு மேற் பட்ட நோயாளர்களும் சிகிச்சை பெற வந்திருந்தனர். இவர்களை விட விடுதியில் அனுமதிக்கப் படும் நோயாளர்களும் சிகிச்சைக் காக வருகை தந்திருந்தனர்.

இதனால் காலை 8.30 மணி தொடக்கம் தொடர்ச்சியாக பி.ப 4 மணிவரை நோயாளர்களுக்கு இரு இடங்களிலும் சிகிச்சை வழங்கப்பட்டது. மாலை 4.30 மணி வரை வெளிநோயாளர் பிரிவின் மருந்தகம், ஊசி போடும் அறை, மருந்து கட்டும் பிரிவு ஆகியவை யும் தொடர்ந்து இயங்கின.

இவற்றைவிட பிற்பகலில் வெளிநோயாளர் பிரிவுக்கு வந்த நோயாளர்களில் சிலர் அங்கு நின்ற நோயாளர்களைப் பார்த்து விட்டு சிகிச்சை பெறாமல் வீடு திரும்பினர் எனத் தெரிவிக்கப்பட் டது.

இது தொடர்பாக வைத்திய சாலை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டபோது தெரிவித்ததாவது:-

வைத்தியசாலையில் 5 மருத் துவ உத்தியோகத்தர்களும் 2 உதவி மருத்துவர்களும் உள்ளனர். அவர் களில் நால்வர் விடுமுறையில் நிற்கிறார்கள். ஒருவர் இரவுக் கடமையில் பணியாற்றுகிறார்.

இதனால் சிகிச்சை மற்றும் கிளினிக் ஆகியவற்றுக்கு வந்த நோயாளர்கள் காத்திருப்பதாக வும், வைத்தியசாலைக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதால் மேலும் இரு மருத்துவ உத்தியோகத்தர் கள் தேவை எனவும் வைத்திய சாலை அலுவலகத்தினர் தெரிவித் தனர்.

இவ்விடயம் தொடர்பாக வைத் தியசாலையில் நின்ற அபிவிருத் திச் சபை உறுப்பினரிடம் கேட்ட போது-

கடந்த மாதம் இந்த வைத்திய சாலைக்கு இரு மருத்துவ உத்தி யோகத்தர்கள் வந்த போதிலும் இங்கு கடமையாற்றிய இரு மருத் துவ உத்தியோகத்தர்கள் யாழ். போதனா வைத்தியசாலைக்கு யாழ்.பிராந்திய பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளரினால் இட மாற்றம் செய்யப்பட்டனர்.

இதனால் வைத்தியர்கள் பற்றாக் குறையினால் நோயாளர்கள் சிர மங்களை எதிர்நோக்குகின்றனர் எனத் தெரிவித்தார். (ம-201-207)




## தனி நடனத்தில் முதலிடம்



அகில இலங்கை ரீதியில் பாடசாலை மாணவர்களுக்கு இடையில் இடம்பெற்ற தனி நடனப் போட்டியில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மாணவியான லாவண்யா சயந்தன் முதலாமிடத்தைப் பெற் றுள்ளார். (20-15)

## சந்தைக் கட்டடம் பாஷையூரில் திறப்பு

பாஷையூரில் புனரமைக்கப் பட்ட பாஷையூர் சந்தைக் கட்ட டத்தின் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகர முதல்வர் திரு மதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமைச்சர் கே.என். டக்ளஸ்தேவா னந்தா கட்டடத்தைத் திறந்துவைப் பார். (ம-7)

# யாழ்.கோட்டைப் புனரமைப்புப் பணிகளை நேரில் பார்வையிட்டார் நெதர்லாந்து தூதர்



பழைமை வாய்ந்த யாழ்.கோட்டைச் சுவரைப் பார்வையிடும் நெதர்லாந்துத் தூதுவர்.

யாழ்ப்பாணம், நவ.18

நெதர்லாந்து அரசின் நிதியுதவி யுடன் யாழ்.கோட்டையில் மேற் கொள்ளப்பட்டு வரும் புனர மைப்புப் பணிகளை இலங்கைக் கான நெதர்லாந்துத் தூதுவர் லியோனி குயேனறே அம்மையார் நேற்று முன்தினம் நேரடியாகச் சென்று பார்வையிட்டார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வந்த நெதர்லாந்துத் தூதுவர் பி.ப 3.30 மணியளவில் யாழ்.கோட்டைப் பகுதிக்குச் சென்றார். அங்கு நெதர்லாந்து அரசின் நிதியுதவியுடன் மேற் கொள்ளப்பட்டு வரும் புனரமைப் புப் பணிகளை அவர் பார்வையிட்ட துடன் கோட்டைப் பகுதியையும் சுற்றிப் பார்வையிட்டார்.

தூதுவருடன் யாழ்நகரப் படைத் தளபதி கேணல் விஜயசுந்தர, தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் செனரத் திஸநாயக்கா, யாழ். பல் கலைக்கழக வரலாற்றுத்துறைத் தலைவர் பேராசிரியர் என்.புஸ்ப ரட்ணம் ஆகியோரும் சென்றிருந் தனர்.

யாழ்.கோட்டை, முன்னர் டச்சு என்று சொல்லப்பட்ட நெதர் லாந்து அரசினால் அமைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்பின்னர் தொல்லியல் திணைக்களத்தின் யாழ். அலுவல கத்துக்குச் சென்ற நெதர்லாந்துத் தூதுவர் அங்கு தொல்லியல் திணைக்கள அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டார். (த-319)

# முன்பள்ளி டிப்ளோமா பயிற்சிநெறி யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம்,நவ.18

யாழ்ப்பாண மாவட்ட முன் பள்ளிக் கல்வி டிப்ளோமா பயிற்சி நெறிக்கான அங்குரார்ப்பண நிகழ்வு நாளை மறுதினம் சனிக் கிழமை நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி யில் காலை 9.30 மணிக்கு இந்த நிகழ்வு ஆரம்பமாகும். வரவேற் புரையை இலங்கை 'ஆறுதல் நிறுவனத்தின் பிரதான நிறை வேற்று உத்தியோகத்தரான சுந்தரம் டிவகலாலா நிகழ்த்து வார்.

முக்கிய உரைகளை வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் எஸ். இளங்கோவன், மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சின் சிறுவர் களுக்கான செயலகத்தின் பிரதிப் பணிப்பாளர் பி.சுனில் ஜயந்த பீரிஸ், அதே செயலகத்தின் பணிப் பாளர் திருமதி. ஜமுனா பெரேரா ஆகியோர் நிகழ்த் துவர்.

இறுதியில் பயிற்சியில் கலந்து கொள்ளவிருப்பவர்களின் பதிவு கள் மேற்கொள்ளப்படும். (க)

## யாழ்.மத்திய கல்லூரி மாணவர்களுக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம்,நவ.18

அகில இலங்கை ரீதியில் இடம்பெற்ற தேசிய தமிழ்த்தினப் போட்டியில் நடனம் குழு I (கிராமிய நடனம்), குழு II (நாட்டிய நாடகம்) ஆகியவற்றில் முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்த யாழ். மத்திய கல்லூரி மாணவர்களுக்கு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கல்லூரி சமூகத்தால் வரவேற்பு அளிக்கப்பட்டது.

கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் காலை 9 மணியளவில் வேம்படி மகளிர் கல்லூரி முன்பாக வந்தடைந்த மாணவர்கள், பொறுப்பாசிரியர் அனுருத்தன் ஆகியோர் கல்லூரிச் சமூகத்தால் மாலை அணிவிக்கப்பட்டு பாண்ட் வாத்திய சகிதம் பாடசாலை நுழை வாயில் வரை அழைத்துச் செல்லப்பட்டனர்.

இதன்போது மாணவர்கள் வீதியின் இரு பகுதிகளிலும் நிரையாக நின்று தமது சக மாணவர்களுக்கு கைதட்டி உற்சாகத் தோடு வரவேற்பளித்தனர்.

(ம-201-23)

# வங்கியில் பெற்ற கடனைச் செலுத்துவதற்காக மானிப்பாய் ப.நோ.கூ.ச. லொறிகள் அடமானத்துக்கு

சண்டிலிப்பாய்,நவ.18

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் வங்கியில் பெற்ற கடனைத் திரும்பச் செலுத் துவதற்காக சங்கத்துக்குச் சொந்த மான இரு லொறிகளையும் 50 லட்சம் ரூபாவுக்கு அடமானம் வைக்க முடிவு செய்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

மேற்படி சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் சங்கத் தலைவர் க.வன்னியசிங்கம் தலைமை யில் சங்க மண்டபத்தில் நடை பெற்றபோது சபையின் அங்கீ காரத்துடன் இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட் டுள்ளது.

சங்கத்துக்கு ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி பற்றி விரிவாக எடுத்து விளக்கிய தலைவர் வங்கி யில் இருந்து கடனாகப் பெற்ற 3 கோடி ரூபாவுக்கு மாதாந்தம் 5 லட்சம் ரூபா வட்டியாகக் கட்டப் படுகிறது. அத்துடன் சங்கத்தில் போதிய வியாபாரம் இடம்பெறாத நிலையில் பணியாளர்களுக்கு வேதனம் வழங்க முடியாத நிலை யும் உருவாகியுள்ளது.

மக்கள் வங்கியின் கன்னாதிட் டிக் கிளையில் கடனாகப் பெற்ற 30 லட்சம் ரூபாவும் யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திடமிருந்து பெற்ற 20 லட்சம் ரூபாவும் உடனடி யாகத் திரும்பச் செலுத்த வேண்டி யுள்ளது. எனவே சங்கத்தின் இரு லொறிகளையும் மேற்படி சமா சத்தில் அடமானம் வைப்பதற்கு பொதுச்சபை அங்கீகாரம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற் றப்பட்டுள்ளது. (ம-201-115)

## மானிப்பாய் ப.நோ.கூ.சங்கத்தின் தலைவர் பதவி விலகினார்

சண்டிலிப்பாய்,நவ.18

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் க.வன்னியசிங்கம் தலைவர் பதவியை இராஜினாமாச் செய்த துடன் பணிப்பாளர் சபையிலி ருந்தும் ஒதுங்கியுள்ளார்.

இவரின் பதவி விலகலைத் தொடர்ந்து பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவர் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணை யாளரின் ஆலோசனைப்படி தற்காலிக தலைவராக நிய மிக்கப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் சங்கத் தலை வர் க.வன்னியசிங்கம் தலைமை யில் சங்க மண்டபத்தில் நடை பெற்றது. இக்கூட்டத்தில் மக் கள் வங்கி கன்னாதிட்டிக் கிளை முகாமையாளர், கூட்டுறவு அபி விருத்தி உத்தியோகத்தர், முன் னாள் பொதுமுகாமையாளர், தற்போதைய பொதுமுகாமை யாளர் ஆகியோர் சமுகமளித்தி ருந்தனர்.

மேற்படி கூட்டத்தில் சங் கத்தின் தற்போதைய நிலைப் பாடு குறித்து பொதுச்சபை உறுப்பினர்களுக்கு விரிவாக எடுத்துவிளக்கிய சங்கத் தலை வர், தலைவர் பதவியிலிருந்து தான் விலகுவதாகக் கூறி பதவி விலகல் கடிதத்தையும் செய லாளரிடம் கையளித்திருந்தார்.

இதனைத் தொடர்ந்து உப தலைவராக இருந்த வி.மகா லிங்கம் தலைவர் பதவியை ஏற்க முன்வராததால் உறுப் பினர் ஒருவர் தற்காலிகமாகத் தலைவர் பதவியை ஏற்றுள் ளார். (ம-201-115)

# குறிகாட்டுவான் - நயினாதீவு பாதைசேவை கிடப்பில் போடப்படும் அபாய நிலை



யாழ்ப்பாணம், நவ.18

குறிகாட்டுவான் - நயினா தீவுக்கு இடையிலான கடல் மார்க்க சேவையில் ஈடு படுத்துவதற்கென எடுத்து வரப்பட்ட பாதை கடந்த இரண்டு மாதங்களாகக் கவனிப் பாரின்றிக் குறிகாட்டுவான் பேச்சி அம்மன் ஆலயப் பகுதியில் துருப்பிடித்த நிலை யில் கிடப்பில் போடப்பட் டுள்ளதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பாதை சேவை எதிர்வரும் ஜனவரி மாதத் தில் ஆரம்பிக்கப்படும் எனக் கூறப்பட்டது. எனினும் குறி காட்டுவான்- நயினாதீவு துறை முகப் பகுதிகளில் இதற்குரிய பாலம் அமைக்கும் நடவடிக் கைகள் இன்னமும் ஆரம்பிக் கப்படாத நிலையில் மேற்படி பாதை சேவை குறிப்பிட்டபடி இடம்பெற வாய்ப்பில்லை எனவும் பொதுமக்கள் கூறு கின்றனர்.

(ம-201-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை...

சரியானதா | தவறானதா

ஆடம்பரப் பொருளாக மட்டுமே முன்னொரு காலத்தில் பயன்பட்டு வந்த கையடக்கத் தொலைபேசியானது தற்காலத்தில் அத்தியாவசியப் பொருள்களில் ஒன்றாக எம் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கின்றது.

இதன்மூலம் இளையோருக்கான வேலைவாய்ப்புக்கள், மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள், நாட்டு நடப்புக்கள் என்பவற்றைத் துரித கதியில் அறிந்துகொள்ள முடியும். கைத்தொலைபேசியில் ஆங்கில வார்த்தைகள் அதிகம் பயன்படுத்தப்படுவதால் இளம் சமூகத்தின் மத்தியில் ஆங்கில அறிவு விருத்தியடைய வாய்ப்புக்கள் அதிகம் உண்டு.

கைத்தொலைபேசியால் தீமைகள் ஏற்படுகின்றதே! என்று அதனை முற்று முழுதாக ஒதுக்கி வைக்க நீங்கள் தயாரா? கைத்தொலைபேசியால் பல சீரழிவுகள் ஏற்படுகின்றன என்றால் அதற்கு ஒட்டு மொத்த இளையோர்களையும் பொறுப்பாளிகளாக்க முனைவது முட்டாள்தனம்.

எனவே, தொலைபேசியை தொல்லைபேசியாகக் கருதாமல் கையடக்கத் தொலைபேசிகளை எங்கள் கையடக்கத் தோழர்களாக எண்ணிப் பாவித்தோமானால் வளமான எதிர்காலம் இளையவர்களாகிய எம் வசமாகும்.

செல்வநாயகம் ரவிசாந்,
குப்பிளான்.




இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசி பாவனை தவறானது.

விஞ்ஞான யுகத்தின் விந்தையினால் மனித வாழ்க்கை பிரிக்க முடியாதவாறு விஞ்ஞானத்துடன் பின்னிப் பிணைந்துள்ளது. விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தினால் தொடர்பு நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றது. விஞ்ஞான வளர்ச்சியினால் தொடர்பாடல் சாதனங்களின் வளர்ச்சி பெருகிக் காணப்படுகின்றது. கைத்தொலைபேசியின் பாவனை கூறமுடியாத அளவு பெருகியுள்ளது. எதற்காக பாவிப்பதென்பதே கேள்விக் குறியாகிவிட்டது.

கைத்தொலைபேசி பாவனை இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைகளில் எண்ணிக்கையற்றுத் தவழ்கிறது. அவர்களுடைய இலட்சிய வேட்கையை திசை திருப்புகின்றது. கைத் தொலைபேசி அவர்களின் குறிக்கோளுக்கு குறிவைக்கின்றது. கைத் தொலைபேசியே வாழ்நாள் என்ற எண்ணத்தில் அவர்களின் காலம் ஓடிக் கொண்டிருக்கின்றது. அத்தோடு சமுதாயத்தில் சீரழிவுகளுக்கும் குழப்பங்களுக்கும் வழிசமைக்கின்றது.

கல்வியறிவு உண்டோ இல்லையோ ஆனால் கைத்தொலைபேசி உண்டு என்னும் அளவுக்கு காலம் மாறிவிட்டது. இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசி பாவனை உரிய முறையில் கையாள்வது அரிதாகக் காணப்படுகின்றது. எனவே தவறானது என என் வாதத்தை முன்வைக்கின்றேன்.

இ.ரிஷிதா, நயினை - 8.

## விடை பெறும் நேரமிது



கார்மேகம் மூழ கதிரவன் ஒளிபெற்று
புத்துயிர் பெறுகின்ற புவி தனில்
வெற்றி நடை போட்டு வீரத்துடன்
எழுந்திருக்க வேண்டிய நேரமிது

உண்மைகளையும், உணர்வுகளையும்
மறைப்பதில் இன்று நியாயமில்லை
சற்றென திரும்பிப் பார் நண்பா உன்
உலகம் எவ்வளவு புதுமையானது என்று

இனமும் மதமும் என்றோ சுனாமி
என்ற குழியில் புதைக்கப்பட்டு விட்டது
இன்றும் நீயும் நானும் இணைபிரியா தோழர்கள்
பாரதியின் கூற்று இன்னுமா நிறைவேறவில்லை

உனக்கு நிகர் யாருமில்லை உறவிருந்தும்
நாம் ஒதுக்கப்படுவது ஏன்? ஆதலால்
தான் கூறுகின்றேன் காலத்தின் கோலத்தை
காயங்களை மறந்து விடு

காலங்களைக் கடந்து விடு கம்பீரமாய்
எழுந்துவிடு இனியும் அடிமையாகாதே
நமக்கென சுதந்திரம் பெற
விடை பெறும் நேரமிது

கா.உதயமலர்,
தொண்டமானாறு.

## நன்றிக்கடன்

ஐயிரு மாதங்கள் தன் கருவறையிலே
மாத வாடகை ஏதுமின்றி கண்ணியமாய் சுமந்து
தன் உயிரின் தவிப்பிலே இன்னோர்
உயிரின் துடிப்பைத் தாங்கி உதிரமதை
பாலாக ஊட்டி வளர்த்து புரியாத இவ்வுலகினை
புரிய வைத்த அன்னையவளான தெய்வத்திற்கு
பிள்ளை செய்யும் நன்றிக் கடன்
தனக்கென ஓர் துணை கிடைத்ததும்
தாயவளை தனிமைப்படுத்தி முதியோர்
இல்லத்தில் சேர்ப்பதுதான்.

S.அசோக்கமாலா
உடுப்பிட்டி



## விவாதமேடை

சரியானதா | தவறானதா

இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை

இளைய சமூகத்தின் விவாதத் திறனுக்கு களம் அமைத்துக் கொடுப்பதற்காக ஆரம்பிக்கப்படுகின்றது. எனவே இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை சரியானதா, தவறானதா என்ற விவாதத்துக்கு உங்கள் கருத்துக்களை முன்வைத்து மோதுங்கள். வெற்றியைத் தீர்மானிப்பதும் நீங்களே. வெற்றிபெறும் என நீங்கள் கருதும் அணிக்கு வாக்களிக்க முடியும். வெற்றி பெறும் அணிக்கு வாக்களித்தவர்களில் மூவர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குப் பரிசில் வழங்கப்படும். அத்துடன் சிறந்த விவாதம் அனுப்புவோரில் ஒருவர் தெரிவு செய்யப்பட்டுப் பரிசில் வழங்கப்படும்.

## எதேச்சதிகாரம் எழில் நடனம் புரிகிறது

போர் முடிந்தது அமைதி ஏற்படலாமென
கனவு கண்ட மக்களின் இதயங்களில்
இடிவிழுந்தது ஏக்கம் பரவியது
கிழக்காசியக் கண்டத்தில் சர்வாதிகார
நாடொன்று உதயமாவது உறுதியானது
சீனாவின் முத்துமாலைத் திட்டத்தின் மூலம்
முடங்கப் போவது தமிழர் தாயகம்
எதிர்ப்பின்றியே எதேச்சதிகாரம்
எழில் நடனம் புரிகிறது எமது பூமியில்

கந்த ஞானமுத்து
கைதடி மேற்கு - 02




## இளவல்கள் வட்டம் வாக்குச்சீட்டு

இன்றைய இளம் சமுதாயத்தினரின் கைத்தொலைபேசிப் பாவனை...

சரியானதா ☐ தவறானதா ☐

பெயர் :-..........
முகவரி :-..........
:-..........
அடையாள அட்டை இல. ..........

உங்கள் தீர்ப்புகளை 25.11.2010 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். இவ் வாக்குச் சீட்டுடன் அனுப்பப்படும் வாக்குகள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும், பிரச்சினைகள் பற்றிப் பேசவும், தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இப்பகுதிக்கான உங்கள் படைப்புகளையும், ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........
முகவரி :-..........
:-..........
.......... ..........
திகதி கையொப்பம்

'இளவல்கள் வட்டம்',
'உதயன்',
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டு மாதங்களாகியும் உழவுக் கூலி இல்லை பூநகரி விவசாயிகள் கடும் நெருக்கடியில்

பூநகரி,நவ.18

பூநகரிப் பிரதேச விவசாயிகளுக்கு அவர்களால் மேற்கொள்ளப்பட்ட உழவுக்கான கூலிப்பணம் இன்னமும் வழங்கப்படாமையால் அவர்கள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

மீள்குடியேறிய இந்தப் பிரதேச மக்கள் விவசாயத்திலீடுபடும்போது 2 ஏக்கருக்கான உழவுக் கூலிப்பணம் அவர்களுக்கு வழங்கப்படுமென விவசாயப் பகுதியினரால் கூறப்பட்டது. இதனடிப்படையில் தனியார் உழவு இயந்திரங்கள் மூலம் இந்த மக்கள் உழவு வேலைகளை மேற்கொண்டனர். விவசாயப் பகுதியினர் பணம் தருவார்களென்ற நம்பிக்கையில் கடனடிப்படையிலேயே இந்த உழவு வேலைகள் செய்து முடிக்கப்பட்டன. ஆனால் விதைப்பு வேலைகள் முடிந்து 2 மாதங்கள் கடந்து விட்ட போதிலும் இந்தப் பணம் இன்னமும் வழங்கப்படாது நிலுவையில் உள்ளது. பொறுமையிழந்த உழவு இயந்திர உரிமையாளர்கள் விவசாயிகளை நெருக்கி வருகின்றனர். கையிலே பணமில்லாத விவசாயிகள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.

கொடிய யுத்தமொன்றுக்கு முகம் கொடுத்து எல்லாவற்றையும் இழந்து அலைந்து திரிந்து வெறுங்கையுடன் மீள்குடியேறிய இந்த மக்கள் விவசாயத்தின் மூலமாவது தமது வாழ்வில் ஒளி பிறக்கும் என்ற நம்பிக்கையுடன் உள்ளனர்.

தற்போது உழவு கூலிக்கு நெருக்குதல் ஏற்பட்டுள்ளதால் இவர்களின்பாடு திண்டாட்டமாக உள்ளது.

எனவே உரியவர்கள் இவர்களின் நிலையறிந்து உரிய சமயத்தில் தமக்கு உதவ வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் கூறுகின்றனர். (க-406)

## பாடசாலைக் கட்டட திருத்த வேலைகள்

பூநகரி,நவ.18

பூநகரி மகாவித்தியாலய இருமாடிக் கட்டடத்திற்கான திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடனேயே இந்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்தக் கட்டடத்தின் மேற்கூரை முற்றாகச் சேதமடைந்து காணப்படுவதோடு சுவர்களில் வெடிப்புக்களும் காணப்படுகின்றன.

இந்தக் கட்டடத்தின் திருத்த வேலைகள் முடியும் வரை மாணவர்கள் மழையிலும், வெயிலிலும், மரநிழல்களிலும் இருந்து கல்வி கற்க வேண்டிய பரிதாபகரமான நிலையில் உள்ளனர். இதில் 850 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். (க-406)




## பஸ்களில் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்த கும்பல் பொலிஸாரிடம் சிக்கியது

கிளிநொச்சி,நவ.18

பேருந்தில் பயணம் செய்பவர்களிடம் பல்வேறு வேடங்களை அணிந்து திருட்டுக்களில் ஈடுபட்டுவந்த திருட்டுக் கும்பலை கிளிநொச்சிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சாத்திரம் கூறும் குறவர்கள், பிச்சைக்காரர்களெனப் பல விதமான வேடங்களில் இந்தக் கும்பல் பேருந்துகளில் மக்களோடு மக்களாகப் பயணம் செய்து தமது கைவரிசையைக் காட்டி வந்துள்ளது. இந்தத் திருட்டுக் கும்பல் கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள் ஆகியோரையும் இந்தத் திருட்டுத் தொழிலில் ஈடுபடுத்தி வந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இந்தத் திருட்டுக் கும்பலைப் பொலிஸார் மிகவும் சாதுரியமான முறையில் மடக்கிப் பிடித்துள்ளனர். இவர்களிடம் மேற்கொண்ட விசாரணையின்போது பல ஆயிரம் ரூபா பெறுமதியான பணத்தையும், நகைகளையும் இவர்கள் கொள்ளையிட்டமை தெரியவந்தது.

ஏ-9 பாதையூடாகப் பயணம் செய்யும் மக்கள் மிக்க அவதானத்துடன் இருந்து தமது பொருள்களைப் பாதுகாத்துக் கொள்ளுமாறு கிளிநொச்சி பொலிஸார் கேட்டுக்கொண்டுள்ளனர். (க-440)

## கற்சிலைமடுவில் கந்தசஷ்டி பூசை

முல்லைத்தீவு,நவ.18

கற்சிலைமடு, சமளங்குளாய் விநாயகர் ஆலயத்தில் கந்த சஷ்டி விரத பூசைகள் வெகுசிறப்பாக நடைபெற்று முடிந்துள்ளன. பிரதம குரு வாசன் ஐயாவின் கிரியைகளுடன் சிறப்பாக நடைபெற்ற கந்தசஷ்டி விரத நிகழ்வில் மீள்குடியேறிய மக்கள் கலந்து கொண்டதுடன் சூரன் போர் நிகழ்விலும் கலந்து கொண்டனர். (க-500)

## சரியான போட்டி....



கருமமே கண்: கிளிநொச்சிப் பாடசாலைகளில் கல்வி கற்கும் வணிகத்துறை மாணவர்களுக்கிடையில் நடைபெற்ற வினாவிடைப் போட்டியில் மாணவ, மாணவிகள் மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர். (405)

## பற்றைக்காடுகளாய் காட்சி தரும் கிளிநொச்சி மாவட்டக் கிராம வீதிகள்

கிளிநொச்சி,நவ.18

மக்கள் மீள்குடியேறியுள்ள கிளிநொச்சி மாவட்டப் பிரதேசங்களிலுள்ள வீதியோரங்கள் பற்றைக்காடுகளால் நிறைந்து காணப்படுகின்றன.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளில் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளனர். ஆனால் இப்பிரதேசங்களிலுள்ள வீதியோரங்கள் பற்றைக் காடுகளால் நிறைந்து காணப்படுவதால் இந்தப் பிரதேசங்களில் மக்கள் மீள்குடியேறியுள்ளனரா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அநேகமாக நீர்ப்பாசன வாய்க்கால்கள் செல்லும் வீதியோரங்களிலேயே அதிகளவு பற்றைக் காடுகள் காணப்படுகின்றன. ஆனால் நீர்ப்பாசனத் திணைக்களத்தினரோ அல்லது தொடர்புடைய கிராமங்களின் அபிவிருத்திக்குப் பொறுப்பானவர்களோ இதனைக் கண்டு கொள்வதாகத் தெரியவில்லையென இந்தப் பிரதேசங்களில் வசிக்கும் மக்கள் கூறுகின்றனர். குறிப்பாக வட்டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிகளினூடாக வீதியோரமாகச் செல்லும் நீர்ப்பாசன வாய்க்கால்களில் அருகிலுள்ள பற்றைக்காடுகள் அடர்ந்த காட்டினூடாக வீதி செல்வதைப் போன்ற தோற்றப்பாட்டைத் தருகின்றன. இதனால் இவ்வீதியினூடாகப் பயணிக்கும் மக்களின் மனதில் ஒருவித அச்ச உணர்வு தோன்றுவதை அவதானிக்க முடிகின்றது.

ஆகவே உரியவர்கள் இந்த விடயத்தில் அதிக கவனம் செலுத்தி இந்தப் பற்றைக் காடுகளை அகற்றுவதற்கு ஆவனசெய்யுமாறு இந்தப் பிரதேசங்களில் மீள்குடியேறிய மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (க-405)

## இராமநாதபுரத்தில் மாணவர் கௌரவிப்பு

கண்டாவளை,நவ.18

கிளிநொச்சி, இராமநாதபுரம் மகாவித்தியாலயத்தில் 2010 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கலந்து கொள்வார்.

நிகழ்வில் 2009 ஆம் ஆண்டில் இந்தப் பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் ச.முருகானந்தன் கேட்டுள்ளார். (ஒ-10-432)

## போதைப்பொருள் கலந்த பாக்குச் சீவல் கிளிநொச்சிப் பொலிஸார் கைப்பற்றினர்

கிளிநொச்சி,நவ.18

கிளிநொச்சியில் போதைப் பொருள் கலந்த பாக்குச் சீவலைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கிளிநொச்சியின் நகரப் பகுதியிலும் தருமபுரம் பகுதியிலும் போதைப்பொருள் கலந்த பாக்குச் சீவல் விற்பனை செய்யப்படுவதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்தது. இதனைத் தொடர்ந்து பொலிஸார் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த கடைகளை முற்றுகையிட்டுத் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். அப்போது பல கடைகளில் இவை காணப்பட்டன. பொலிஸார் உடனடியாக இவற்றைக் கைப்பற்றியதுடன் கடை உரிமையாளர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கையும் எடுத்துள்ளனர்.

தற்போது அந்தக் கடைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. அத்துடன் இத்தகைய போதைப் பொருள்களினால் ஏற்படக்கூடிய தீமை தொடர்பான விழிப்புணர்வைப் பாடசாலை மாணவர்களுக்கும், பொது மக்கள் மத்தியில் பொலிஸார் ஏற்படுத்தி வருகின்றனர்.

சமீப காலமாக இத்தகைய போதைப் பொருள் கலந்த பாக்குச் சீவலைப் பாடசாலை மாணவர்கள் இரகசியமாகப் பெற்றுப் பாவித்து வந்துள்ளமை தொடர்பான தகவல்கள் வெளிவந்துள்ளன. (க-440)

## கபிற்றாற் நிறுவனத்தின் உதவியுடன் வீடுகளின் புனரமைப்பு வேலைகள்

முல்லைத்தீவு,நவ.18

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலே பகுதியளவு சேதமடைந்த வீடுகளின் புனரமைப்பு வேலைகள் கபிற்றாற் நிறுவனத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தரின் சிறப்பான செயற்பாடு காரணமாக வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இந்தப் பிரதேசத்திலே கபிற்றாற் நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் மீள்குடியேறிய மக்களின் பகுதிச்சேத வீடுகளைப் புனரமைப்பதற்கான முதலாவது கட்டடக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் கபிற்றாற் நிறுவனத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் ஆலோசனைக்கும் அறிவுறுத்தல்களுக்கும் அமைவாகத் திருத்த வேலைகள் விரைவாக நடைபெற்றுவருகின்றன. அரைவாசி வேலைகளைப் பூர்த்தி செய்தவர்களை தொழில் நுட்ப உத்தியோகத்தர் சந்தித்து மீதி வேலைகளைச் செய்வதற்கான இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டு வருகின்றார். இவர் மக்களுடன் மிகவும் நெருக்கமாகப் பழகுவதோடு தேவையான அறிவுரைகளையும் வழங்கி வருவதால் இந்தத் திட்டம் வெற்றிகரமாக நிறைவேறி வருகின்றது என மக்கள் கூறுகின்றனர். (க-500)

## கிராமப்புறப் பாடசாலைகளின் அபிவிருத்திக்கு பெற்றோர்களும் பங்களிக்க வேண்டும்

### கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர்

கிளிநொச்சி,நவ.18

பெற்றோர்கள் தமது பிள்ளைகளைக் கிராமப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்க அனுமதிப்பதனூடாக அப்பாடசாலைகளை மேம்படுத்துவதில் பங்களிக்கவேண்டும் என கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா கோரிக்கை விடுத்துள்ளார்.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் கடந்த 12 ஆம் திகதி இடம்பெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


தற்போது பெற்றோர்கள் தமது பிள்ளைகளை நகர்ப்புறப் பாடசாலைகளில் கல்வி கற்க வைப்பதில் அதிக நாட்டம் காட்டுகின்றனர். இதனால் பல மைல் தூரங்களில் இருந்து பல பாடசாலைகளைக் கடந்து நகர்ப்புறப் பாடசாலைகளில் பிள்ளைகள் கல்வி கற்க வருகின்றனர். கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் 2011 ஆம் ஆண்டுக்கான தரம் 1 இல் அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் அதிகளவில் கிடைத்துள்ளன. ஆனால் கிராமப்புறப் பாடசாலைகளில் அவ்வாறில்லை.

எனவே பெற்றோர்கள் தமது கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் தமது பிள்ளைகளைக் கல்வி கற்க அனுமதிப்பதன் மூலம் தமது கிராமப் பாடசாலைகளையும் மேம்படுத்த உதவவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (க-405)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 07 . 1987



உதிர்வு 18 . 11 . 2008

## கனியூட் கட்சன்

மூன்று சகோதரிகளுக்கு மத்தியில்
முத்தென உதித்தவனே!
தவமிருந்தும் கிடைக்காத தவப் புதல்வனே!
பட்டம் பல நீ பெற்று வைத்தியராய்
வருவாயென நாமிருக்க
பாதியில் எமை வருந்தவிட்டு சென்றதேனா?
ஈராண்டு அல்ல நூறாண்டு சென்றாலும்
கட்சா! உன் சாந்தமான முகமும்
பண்பான செயலும் எம் மனதைவிட்டு
நீங்காதடா.....

நி.மு.: 10ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

த.மு.: கடற்கரை வீதி,
பாஷையூர், யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, சகோதரிகள்,
அத்தான், குட்டி மருமகள்.

(106061)

# மானிப்பாய் அரசினர் வைத்தியசாலை மாலையில் மட்டுமே இயங்கும்

நவாலி,நவ.18

மானிப்பாய் பிரதேச அரசினர் வைத்தியசாலை எதிர்வரும் 22 ஆம் திகதி வரை மாலையில் மட்டுமே இயங்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த வைத்தியசாலையில் உள்ள வைத்திய அதிகாரி நெடுந்தீவு வைத்தியசாலைக்குப் பதில் கடமையாற்றச் சென்றுள்ளதால் கொக்குவில் வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி இங்கு பணியாற்றவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த 15ஆம் திகதி முதல் இந்த வைத்தியசாலை மாலையில் மட்டுமே இயங்குகிறது. (204-100)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, லண்டன் பிரஜாவுரிமை பெற்ற, 1979ஆம் ஆண்டு பிறந்த, 104 கிரகபாவமுடைய, செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கு படித்த, அழகிய குடும்பப் பாங்கான மணமகள் தேவை.
தொடர்பு: 075 0404320 (106110)

## தவறிவிட்டது

174, உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியைச் சேர்ந்த சுரேஸ் ரஜீவ் என்பவரது தேசிய அடையாள அட்டை [911733080V] பேர்சுடன் போற்பதிக்கும் கே.கே.எஸ்.வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் தொலைபேசியுடன் தொடர்புகொள்ளவும். தொ.பே.: 0774015793.

## பூச்சாடிப் பிரியர்களுக்கு....

பாவனைக்கு இலகுவான DSI பூச்சாடிகளை பெற நீங்கள் நாடவேண்டிய இடம் இல. 220, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.இல: 021 222 1378

## TVகள் மலிவு விற்பனை

50இற்கும் மேற்பட்ட Sony wega Flat 14''-9000/=, 21''-14,000, 25''-20,000/=, 29''-25,000/= பொக்ஸ் வகைகள் (JBL), அம்பிளிவயர்கள் DTS, குளிர்சாதனப் பெட்டிகள், Cassete, Deck, Radioகள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு. VCR, DVD என்பனவும்.
தொடர்பு: 0771393670, 0214920853.
இ.மகேஸ்வரன் (அம்பாள் கொம்பனி),
ரீவிப்புளியடி (ஆரம்ப பாடசாலை அருகில்), கே.கே.எஸ்.வீதி, இணுவில்.

## விண்ணக வாழ்வின் பத்து ஆண்டுகள்



அமரர் பீற்றர் இம்மானுவல் கிறிஸ்தோப்பர்
(Jaffna Town Co.Op Stores Ltd.)


பிறப்பு 13.07.1909

இறப்பு 19.11.2000

அன்னாரது ஆன்மா இறை இல்லத்தில் நித்தியமும் இளைப்பாற வேண்டி நாளை (19.11.2010) வெள்ளிக்கிழமை இறைதியான இல்லத்திலும், அருள் ஆச்சிரமத்திலும், யாழ்.மரியன்னை பேராலயத்திலும் காலை 6 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

30, பழைய பூங்கா வீதி,
முதலாம் லேன், யாழ்ப்பாணம்.
(106915)

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.




## வாக்காளர் பதிவு 2010

### வாக்களிப்பதற்கு பதிவு செய்து விட்டீர்களா?

- ✓ வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் மற்றும் இடம் பெயர்ந்து புத்தளம் மாவட்டத்தில் வாழும் மக்களுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் 2010 நவம்பர் 30ம் திகதி வரை தொடரும்.
- ✓ மேலதிகத் தகவல்கள் மற்றும் படிவங்களை பெற்றுக் கொள்ள இன்றே உங்கள் கிராம சேவை அலுவலர் அல்லது மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரை அணுகுங்கள்.

இத் தகவலை உங்களுக்கு வழங்குவோர்:
CPA
minority rights group international

## நெஞ்சகலாத நினைவலைகள்

9ஆம் ஆண்டு



6ஆம் மாதம்



திருமதி அருள்ராசலிங்கம் ரேவதிதேவி — திருமதி பாரததேவி அம்பலவாணர்

| | | |
|---|---|---|
| 24.09.1953 | உதயம் | 19.06.1932 |
| 27.1.2001 | மறைவு | 22.05.2010 |
| துவாதசி | திதி: | தசமி |

பாசத்தின் திருவுருவே! நீவிர் எம்மை விட்டுப் பிரிந்து
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள் நினைவில் எம் இதயம் வாழ்ந்திருக்கும்...

குப்பிளான் தெற்கு.

என்றும் நினைவில்:
கணவர் மற்றும் குடும்பத்தினர்.


## கிளிநொச்சியில் மங்களகரமான ஆரம்பம்

இன்று (18.11.2010) மு.ப. 10.32-12.08 வரையான சுபநேரத்தில் *Jaffna Electrical* அதன் கிளை ஸ்தாபனத்தை ஏ-9 வீதியில் இல.135, கிளிநொச்சியில் ஆரம்பிக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

SINCE - 1969

LG **JAFFNA ELECTRICAL**

No.(94),6, Stanley Road, Jaffna.
Tel : 021 222 2353
Fax : 021 222 4302

No.141, Power House Road, Jaffna.
Tel : 021 222 5766
Fax : 021 222 8378

No.4, New Market,
Chavakachcheri.
Tel : 021 227 0268

No.135, A9 Road,
Kilinochchi.
Tel : 021 492 5289



Authorized Dealer for **Abans**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## யாழில் சிங்களவர்கள் குழப்பம் விளைவிக்கும் போது

# இலங்கையில் சமாதானம் வந்துவிட்டதென சர்வதேசத்துக்கு எப்படிச் சொல்ல முடியும்?

## ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி

கொழும்பு, நவ. 18

தெற்கைச் சேர்ந்த சிங்களவர்கள் 300 பேர் யாழ்ப்பாணம் சென்று யாழ். பொது நூலகத்தில் குழப்பம் விளைவித்துள்ள நிலையில், இலங்கையில் பூரண சமாதானம் வந்துவிட்டது என்று எப்படி வெளிநாடுகளுக்கு எம்மால் சொல்ல முடியும்?

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பினார்.

நாடாளுமன்றில் இடம்பெற்ற ஏற்றுமதி அபி விருத்தித் தொடர்பான சட்டமூலம் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

இந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் ஆடை ஏற்றுமதி எட்டு வீதத்தால் குறைவடைந்துள்ளது. ஓகஸ்ட் மாதம் 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச்சலுகை நிறுத்தப்பட்டதால் ஏற்றுமதி மேலும் குறைவடைந்திருக்கும்.

வடக்கில் புதிய தொழிற் பேட்டைகளை அமைக்கப் போவதாக அமைச்சர் ரிஷாட் பதியுதின் இங்கு கூறினார். புதிய தொழில் அமைச்சை அமைப்பதற்கு முன் இருப்பதைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்.

'ஜி.எஸ்.பி. பிளஸ்' வரிச் சலுகையை மீண்டும் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுங்கள்.

பாகிஸ்தானுக்கு 'ஜி.எஸ்.பி. பிளஸ்' வழங்கப்படப் போகின்றது. யுத்தம் முடிவடைந்துள்ள போதிலும் வெளிநாட்டு முதலீடுகள் அதிகரிக்கப்பட வில்லை. நாம் சொல்வதை முதலீட்டாளர்கள் கேட்கமாட்டார்கள். இலங்கை நிலைமை தொடர்பாக அவர்கள் ஆராய்ந்து பார்ப்பர். அவர்களே ஊடகங்களைப் பார்ப்பர். இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகம் இடம்பெறுகின்றன என்றே செய்திகள் தெரிவிக்கின்றன.

மனித உரிமை மீறல்களின் மத்திய நிலையமாக இலங்கை மாறி வருகின்றது. ஐ.தே.கட்சியில் தேர்தலில் போட்டியிடுபவர்கள் சிறையில் அடைக்கப்படுகின்றனர். ஊடகவியலாளர்கள் கடத் தப்படுகின்றனர். வடக்கு - கிழக்கில் காணாமல்போதல் இன்னும் இடம்பெறுகின்றது. அப்படி இருக்கும்போது எப்படி உங்களால் வடக்கில் கைத்தொழிற்சாலைகளைஅமைக்கமுடியும்? இன்னும் அரசியல் தீர்வு இல்லை. அது இல்லாமல் எப்படி இனங்களிடையே ஒற்றுமையையும், சமாதானத்தையும்ஏற்படுத்த முடியும்?

தெற்கில் உள்ள சிங்களவர்கள் 300பேர் யாழ்ப்பாணத்துக்குச் சென்று யாழ். நூல்நிலையத்தில் குழப்பம் விளைவித்தனர். இந்த நிலையில் இங்கு சமாதானம் நிலவுகின்றது என எப்படி வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு எம்மால் கூற முடியும்?

அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்துக்குள் 'ஜி.எஸ்.பி.பிளஸ்' வரிச்சலுகை கிடைக்காவிட்டால் இந்த நாடு மிகவும் துர்ப்பாக்கியநிலையை எதிர்கொள்ளும்.

- இப்படி அவர் தெரிவித்தார். (ம-சி)

### ஜனாதிபதி மஹிந்தவின் இரண்டாவது பதவியேற்புக்கு 150 வெளிநாட்டுப் பிரமுகர்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்தில் கலந்து கொள்வதற்காக 150 வெளிநாட்டுப் பிரமுகர்கள் வருகை தரவுள்ளதாக சுகாதார மற்றும் போஷாக்கு அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இப்பிரமுகர்களில் மாலைதீவு ஜனாதிபதி, பூட்டான் பிரதமர், சீன பதில் பிரதமர், பாகிஸ்தான் செனட்சபை பிரதிநிதி, இந்திய அரசின் பிரதிநிதி ஆகியோர் அடங்குவர்.

இப்பிரமுகர்கள்இன்றுஇலங்கை வந்தடைவர் என சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம-5)

### இளைஞனின் சடலம் மீட்பு

விளையாடச் செல்வதாக வீட்டில் இருந்து கடந்த திங்கட்கிழமை புறப்பட்ட இளைஞன் செவ்வாய்க்கிழமை காலை வல்வெட்டித்துறை கடலில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பொலிகண்டி மேற்கைச் சேர்ந்த பத்மநாதன் துஷ்யந்தன் (வயது 22) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார். (ஒ-10-236)

### சேவை.....



முன் உதாரணம்:- சாவகச்சேரிப் பொலிஸாரின் ஏற்பாட்டில் அண்மையில் மட்டுவில் மகாவித்தியாலயத்தில் நடமாடும் சேவை ஒன்று நடத்தப்பட்டது.சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி ஜே. டி.கே. சனத்குமார தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கொடிகாமம் மற்றும் கோப்பாய் பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இந்த நடமாடும்சேவையின் போது இரத்ததானம், முறைப்பாடுகள் ஏற்றல், கருத்தரங்குகள், பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் இடம்பெற்றன. (ம-131)

## ஒன்றரைக்கோடி ரூபா பெறுமதியான ஹெரோயினுடன் வர்த்தகர் கைது

கொழும்பு, நவ.18

இந்தியாவிலிருந்து படகுகள் மூலமாக பெருந்தொகை ஹெரோயினைக் கடத்தி வந்து நாடு முழுவதும் நீண்டகாலமாக விநியோகித்துவந்த பெரும் வர்த்தகர் ஒருவர் உட்பட நால்வர் கொழும்பு போதைப் பொருள் ஒழிப்புப்பிரிவின் விசேட நடவடிக்கைப் பிரிவினரால் கைது செய்யப்பட்டதுடன் அவர்களிடமிருந்து ஒரு கோடி 40 லட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயினும் கைப்பற்றப்பட்டுள்ளது.

2001 ஆம் ஆண்டு கோடிக் கணக்கான ரூபா பெறுமதி வாய்ந்த எட்டரைக் கிலோ ஹெரோயினுடன்முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இந்நிலையில் அவர் நீதிமன்றத்துக்கு சமூகமளிக்காமல் தலைமறைவாகியதையடுத்து அவர் மீது பல பிடியாணைகள் பிறப்பிக்கப்பட்டிருந்தன.

கடந்த ஒன்பது வருட காலமாகப் பொலிஸாரின் கண்களில் மண்ணைத் தூவிவந்த இவர் கல்கிசை பகுதியிலுள்ள சொகுசு ஹோட்டலொன்றில் மொஹமட் எனும் பெயரில் தங்கியிருந்துள்ளார். போதைப் பொருள் ஒழிப்புப் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே இந்த வர்த்தகர் கைது செய்யப்பட்டார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து சிலாபம், புத்தளம் மற்றும் வெல்லம்பிட்டி பிரதேசத்திலிருந்த அவரது மூன்று சகாக்களும் கைதாகினர். (ம- 5)

## அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு 3.98 கோடி அமெரிக்க டொலர்கள்

### உலக உணவுத் திட்டம் வழங்குகிறது

கொழும்பு, நவ. 18

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அகதிமுகாம்களில் உள்ளவர்களுக்கும், மீளக் குடியேறியவர்களுக்கும் மனிதாபிமான உதவியாக 3.98 கோடி அமெரிக்க டொலர்களை வழங்குவதற்கு உலகஉணவுத் திட்ட அமைப்பு தீர்மா னித்துள்ளது.

அடுத்த ஒரு வருடத்துக்கென வழங்கப்படவுள்ள இந்த நிதியின் மூலம் அகதி முகாம்களில் வாழ்வோரும், மீளக்குடியேறியவர்களும் போஷாக்கு மிக்க உணவைப் பெற்றுக்கொள்ள வழிவகை செய்யப்படும். விசேடமாகக் கர்ப்பிணித் தாய்மார்கள், சிறுவர்களுக்கான அவசியமான போஷாக்கைப் பெற்றுத் தருவதே இத்திட்டத்தின் பிரதான நோக்கமென உலக உணவு அமைப்பு தெரிவித்துள்ளது. (த-5)

## ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தின் பாதுகாப்புக்கு 4 ஆயிரம் பொலிஸார்

கொழும்பு,நவ. 18

நாளை வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள ஜனாதிபதியின் இரண்டாவது பதவியேற்பு வைபவத்துக்கென 4 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக்கடமையில் ஈடுபடுத்தப்படுவரென கொழும்பு பிரதேசத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் கே.பீ.பீ. பத்திரன தெரிவித்தார்.

இதற்கென சுமார் ஆயிரம் பொலிஸார் வெளிமாவட்டங்களிலிருந்து கொழும்புக்கு வரவழைக்கப்படுவரெனவும் அதற்கு மேலதிகமாக முப்படையினரும் பாதுகாப்புப்பணியில் ஈடுபடுத்தப்படுவரெனவும் அவர் கூறினார்.

இந்தவைபவத்துக்காக கொழும்பில் விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் இன்று முதல் பல இடங்களில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு தீவிர சோதனைகள் மேற்கொள்ளப்படுமெனவும் அவர் தெரிவித்தார். பொலிஸ் நடமாடும் சேவைப்பிரிவும் வைபவத்தின்போது விஸ்தரிக்கப்படும்.

ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவத்துக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த உயர்மட்ட மாநாடு ஒன்று திங்கட்கிழமை கொழும்பில்நடைபெற்றது. (க-5)

# வடக்கில் முதலீடுகளை ஊக்குவிக்க இயந்திர உபகரணக் கண்காட்சி

### அமைச்சரும், பிரதி அமைச்சரும் திறந்து வைத்தனர்

யாழ்ப்பாணம்,நவ.18

வடக்கில் முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக இயந்திர உபகரணக் கண்காட்சியும், கருத்தரங்கும் நேற்றுமுன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் ஆரம்பமாகின.

கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகக்கலந்துகொண்ட பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பிரதி அமைச்சர் வீரகுமார திஸநாயக்க ஆகியோர் கண்காட்சியை ஆரம்பித்து வைத்தனர்.

வடக்கில் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகங்களை ஆரம்பிப்பதற்கு உதவும் நோக்குடனேயே இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டது என்று கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் தலைவர் உதயசிறி காரியவாசம் தெரிவித்தார்.

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையை மீள இயக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது [illegible] தெரிவித்த அவர், இதன் புனரமைப்புக்கு "174.6 மில்லியன் ரூபா வெளிநாட்டு உதவியாகக் கிடைக்கிறது. அரசு 25 பில்லியன் ரூபாவை இத்திட்டத்துக்குவழங்க முன்வந்துள்ளது" என்றும் கூறினார்.

இக்கண்காட்சியில் வடமாகாணத்தில் உள்ள கைத்தொழிலாளர்களின் இயந்திர உபகரணங்களும், தென்னிலங்கையின் கைத்தொழில் தலைமைக் காரியாலயத்திலிருந்து கொண்டுவரப்பட்ட இயந்திர உபகரணங்களும் காட்சிக்கு வைக்கப்பட்டன.

சிறுகைத்தொழில் மற்றும் நடுத்தர கைத்தொழிலாளர்களுக்கும், முயற்சியாளர்களுக்கும், பயிற்சியாளர்களுக்குமான கருத்தரங்கும் இடம்பெற்றன.

இக்கருத்தரங்கில் வடமாகாணத்தில் உள்ள சிறிய நடுத்தர கைத்தொழில் துறையின் முதலீட்டு வாய்ப்புக்கள் பற்றி டாக்டர் கே. நிமலதாசன், சிறுகைத்தொழில் முயற்சியாண்மையின் பண்புகளும், தொழிற்திட்டத்தின் அவசியங்களும் பற்றி முகாமைத்துவ கற்கைநெறி வணிகபீட சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன், சிறுகைத்தொழிலாளர்களுக்கான தொழில் முயற்சியின் ஒழுங்கு விதிகள் பற்றி முகாமைத்துவ கற்கைநெறி வணிகபீட சிரேஷ்ட விரிவுரையாளர் கே.சிவராஜா, இத் திட்டத்தின் நிதி மூலங்கள் பற்றி யாழ். பிராந்திய அலுவலகம் இலங்கை வங்கி உதவி பிராந்திய முகாமையாளர் கே. சுசீந்திரன், வெற்றிகரமான தொழில் முயற்சியாளர்களின் அனுபவங்கள் பற்றி யாழ்ப்பாணம் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் கே.பூரணச்சந்திரன் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

குழுநிலை ஆய்வில் யாழ். கைத்தொழில் அபிவிருத்திச் சபையின் பிரதிப் பணிப்பாளர் எஸ். கங்காதரன், வவுனியா கைத்தொழில் சபையின் உதவிப் பணிப்பாளர் கே.சசிகரன், யாழ். மாவட்ட தொழில்துறை அலுவலர் திருமதி பொலின்வனாஸ் முதலீட்டுச்சபை சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர் ஆர்.ஜெயமனோன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஒ- ஐ- 311-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:**
இனம்புரியாத கவலைகள் மனதில் குடிகொள்ளும் நாள். சுயதேவைகளை நிறைவேற்றிக் கொள்வீர்கள். பிள்ளைகள் செய்யும் தவறுகளால் கோபம், எரிச்சல் அடையலாம். ஆரோக்கியக் குறைவால் மருத்துவச் செலவு சந்திக்கலாம். சகோதரர்கள் விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ளவும். தடை, தாமதங்களைச் சந்திக்கலாம்.

**இடபம்:**
தைரியம், தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொல்லை கொடுத்த சிலரே தோள் கொடுத்து உதவ முன்வரலாம். அலைச்சல் இல்லாமல் தொலைபேசி வழியில் இருந்த இடத்தில் இருந்தே காரியங்களை முடித்துக் கொள்வீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். உதவி செய்த ஒருவருக்குப் பதில் உதவி செய்வீர்கள். அதிக வேலைகளால் பதற்றம் அடையலாம்.

**மிதுனம்:**
விருந்தினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். மற்றவர்கள் தவறு என நினைக்கும் ஒன்றை நீங்கள் சரி என நினைத்துச் செய்வீர்கள். சுய தொழில் புரிவோர் கோபம், வேகத்தைக் குறைக்க வேண்டும். கடன் பிரச்சினைகளால் ஏற்பட்ட கவலைகள் மாறி நிம்மதி பெறுவீர்கள். எதிர்பார்த்த பணவரவுகளைப் பெறலாம்.

**கடகம்:**
இரண்டு நாள்களாகத் தடைப்பட்ட காரியம் ஒன்று இன்று நடக்கலாம். சிலரிடம் வாயைக் கொடுத்து வம்பில் மாட்டிக் கொள்ளலாம். அவசியமான காரியம் ஒன்றுக்கு அங்கும் இங்கும் அலைய நேரிடலாம். மறதியைத் தவிர்த்து எதிலும் முன்னெச்செரிக்கையுடன் செயற்பட வேண்டும். தொழில் ரீதியான பயணங்கள் செல்ல நேரிடலாம்.

**சிங்கம்:**
எதிர்பார்த்த பணவரவுகள் வருவது தள்ளிப் போகலாம். குடும்பத்தில் பெரியவர்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடலாம். வீட்டைச் சீரமைப்பதில் அதிக நேரத்தைச் செலவு செய்வீர்கள். ஓய்வு எடுக்க நினைத்தாலும் அது முடியாத அளவுக்கு யாராவது வந்து தொந்தரவு கொடுக்கலாம். வீண் பழிகளைத் தவிர்க்க மற்றவர்கள் விவகாரங்களில் தலையிட வேண்டாம்.

**கன்னி:**
ஆசைப்பட்ட சில பொருள்களை வாங்குவீர்கள். குடும்பத்தினருடன் வெளியிடங்களுக்குச் செல்லலாம். விருந்து, விசேஷங்களால் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் விலகும். நீங் கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். அனுகூலமான நாள்.

**துலாம்:**
கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள். பல விடயங்களைப் பற்றி அறிந்த ஒருவரிடம் யோசனை கேட்டுச் செயற்படுவீர்கள். இரண்டு நாள்களுக்கு முன்னர் பாதியில் விட்ட வேலை ஒன்றை இன்று வெற்றிகரமாகச் செய்து முடிப்பீர்கள். சக ஊழியர்கள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். சுபச் செலவுகள் ஏற்படும்.

**விருச்சிகம்:**
தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். உறவினர்களை விமர்சனம் செய்வதை தவிர்க்க வேண்டும். எந்த வேலையும் உடனுக்குடன் முடியாமல் இழுத்தடிக்கலாம். சுபகாரியம் அல்லது வேறு விடயங்களுக்காக வெளியூர் பயணம் செல்லலாம். புதிய முயற்சிகளைத் தள்ளி வைக்க வேண்டிய நாள். சிலருடன் கோபம், வேகமாகப் பேசலாம்.

**தனுசு:**
விருப்பங்கள் நிறைவேற சோர்வின்றி செயற்பட வேண்டிய நாள். சொந்தபந்தங்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். மனதை விட்டு அகலாத சம்பவம் ஒன்று நடக்கலாம். ஏதாவது வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டு செய்வீர்கள். உதவி கேட்ட ஒருவர் அதைச் செய்யாமல் கையை விரிக்கலாம்.

**மகரம்:**
நல்ல காரியம் ஒன்றைச் செய்வீர்கள். ஒரு பணவரவை எதிர்பார்த்திருந்த நேரத்தில் மற்றொரு பணவரவும் சேர்ந்து கிடைக்கும். வீட்டில் வசதி வாய்ப்புகளை அதிகரிக்க முற்படுவீர்கள். வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. புத்திசாலித்தனமாகச் செயற்பட்டு உறவினர்கள் அல்லது நண்பர்களின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள். புத்துணர்வு கூடும்.

**கும்பம்:**
வருமானத்தை அதிகரிக்கும் விடயங்களில் நாட்டம் செல்லும். செய்ய மறந்த காரியம் ஒன்றால் செலவுகளைச் சந்திக்கலாம். நண்பர் ஒருவருடன் சுக துக்கங்களைப் பேசி மகிழ்வீர்கள். தொழில் விடயங்களில் நேர்மை, நாணயத்துடன் நடந்து கொள்வீர்கள். குடும்பத்தினருடன் ஆலோசித்து சில காரியங்களைச் செய்வீர்கள்.

**மீனம்:** பல நாள்களாக முடியாமல் இருந்த வேலை ஒன்று இன்று முடியலாம். காலை நேரத்தில் நல்ல செய்திகள் வீடு தேடி வரலாம். நண்பர் ஒருவரை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைப்பீர்கள். மலை போல் குவிந்த வேலைகளையும் அசராமல் செய்து முடிப்பீர்கள். மற்றவர்களுக்கு உதவுவதில் தாராளம் காட்டுவீர்கள். வெற்றிகரமான நாள்.

## அறிவூட்டல்....



பார்வையிடல்: வட்டு.மேற்கு அ.மி.த.க. பாடசாலை மேற்கொண்ட கல்விச் சுற்றுலாவின் போது உதயனைப் பார்வையிட வந்திருப்பதைக் காணலாம்.

## செல்வம்



ஓர் ஊரில் உலகம் முழுவதையும் ஆட்டிப் படைத்துக் கொண்டிருந்த அரசன் நீண்ட காலமாக அரசாட்சி செய்து கொண்டிருந்தான்.

திடீரென அவனுக்கு எதிரிகள் உருவாக ஆரம்பித்து விட்டனர். அனைவரும் ஒன்று சேர்ந்து இவனைத் தோற்கடிக்க தொடங்கினர். இதனால் எதிரிகள் தன்னைக் கொன்று விடுவார்களோ என்ற பயம் வந்துவிட்டது.

யாருக்கும் தெரியாமல் குகை ஒன்றினுள் பதுங்கிக் கிடந்தான். அரண்மனையில் அதிகாரம் செய்தவன் குகையில் பதுங்கி இருக்க வேண்டிய நிலைமை.

இரவு நேரம் அவனுக்குப் பசி வந்து விட்டது. பிச்சை எடுக்க வேண்டிய நிலை. பிச்சை எடுக்கப் பாத்திரம் தேடினான். ஒரு மூலையில் உடைந்த ஓட்டுத்துண்டு இருந்தது. அதை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

இருட்டில் வழி தெரியாமல் தடுமாறிக் கொண்டு நடந்தான். வழியில் ஒரு கறுப்பு நாய் தூங்கிக் கொண்டிருந்தது.

அதன் மேல் தவறிக் காலை வைத்துவிட்டான்.

நாய் சும்மா இருக்குமா? 'வள்' என்று கடித்து விட்டது. தனது காலையும் பார்த்து அத்துடன் காலத்தையும் நினைத்துப் பார்க்கிறான்.

அரண்மனையில் புலவர்களது புகழுக்கு மத்தியிலும் பொற்கிண்ணங்களிலும் சாப்பிட்ட இவனுக்கா இந்த நிலைமை.

ஆட்சியிலிருக்கும் போது அரசருக்காக காணிக்கை செலுத்துவோரைக் கௌரவக் குறைவாக நினைத்து வாங்கமாட்டார். ஆனால் இப்பொழுது அனைவரது கண்களும்படுமாறு பிச்சை வாங்குகிறார்.

முதல்நாள் அரசன் மறுநாள் பிச்சைக்காரன். இவ்வாறான ஒரு வேறுபாடு ஏற்படுத்துவதற்குச் செல்வம்தான் காரணம். அப்படிப்பட்ட செல்வம் வாழ்க்கைக்குத் தேவைதான். ஆனால் அந்தச் செல்வத்தையே நாம் அடைய வேண்டிய பயனாக நினைக்கிறோம். அதுதான் வேடிக்கை.

**கோ.சுவாமிநாதன்.**

## அகங்கார அவஸ்தைகள்....



என் நண்பர் ஒருவர்... கடுமையானவர்.. எதையும் திட்டமிட்டுச் செய்வார். திட்டவட்டமாகவே முடிவெடுத்து அதை அனைவரும் கீழ்ப்படிந்து பின்பற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்துவார். தனது நிர்வாகத்திற்கு கீழ்வீடு, அலுவலகம் எல்லாம் கட்டுப்பட்டு இருப்பதில் அவருக்கு அப்படி ஒரு கர்வம்.. பெருமிதம். "என்னைக் கேட்காமல் என் வீட்டில் யாரும் மூச்சுக் கூடவிட முடியாது" என்று பெருமைப்படுவார்.

ஆனால் அண்மையில் அவரை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்த்தபோது அவரைக் கேட்காமலேயே அவர் மூச்சு விட்டுக் கொண்டிருந்தார். புரியும்படி சொல்ல வேண்டுமா? பிறர் தயவில் அவர் மூச்சுவிட்டுக் கொண்டு. எனப்படும் சுயநினைவற்ற நிலையில் இருந்தார்.

''என்னைக் கேட்காமல் என் வீட்டில் யாரும் மூச்சுக்கூட விடமுடியாது என்று பெருமைப்பட்டவர் இனியும் மூச்சுவிட வேண்டுமா? வேண்டாமா? என்று டாக்டரும், நண்பனின் மனைவியும் பலரிடம் கேட்டுக் கொண்டிருந்தது வேதனையாக இருந்தது.

சுயநினைவற்ற நிலையிலும் சுவாசம் மட்டும் நடப்பது எவ்வளவு ஆச்சரியமான விடயம் என்று யோசித்துப் பாருங்கள். எல்லோரையும் இயக்கும் நம்மை உள்ளிருந்து ஏதோ ஒன்று இயக்குகின்றதே! அதுதான் கடவுள் என்று உணர வேண்டாமா? இறைவன் அதனைத் தனது நிர்வாகத்தில் வைத்திருப்பது நமது கொடுப்பினை என்றே தோன்றுகின்றது.

குடும்பம் என்னால் நடக்கிறது... தொழிற்சாலை என்னால் நடக்கிறது... எல்லாமே நம்மால் நடக்கிறது.. என்கிற அகங்கார அவஸ்தையில் இருந்து கொஞ்சம் வெளி வாருங்கள். நமது ஒவ்வொரு இயக்கமும் கடவுளின் இயக்கமே என்பதை உணரும் பூரண சரணாகதியே ஞானத்தின் பிறப்பு, நிம்மதி நிலை. இதை விளக்கும் அழகான கதை ஒன்று கூறுகிறேன்:-

மொழி தெரியாமல் அந்நிய நாட்டுக்கு வந்த ஒருவனுக்கு அங்கு நடப்பது எல்லாமே ஆச்சரியமாக இருந்தது. விழிகளை விரியத் திறந்தபடி விவரிக்க முடியாத நிலையில் அங்கும் இங்கும் அலைந்து திரிந்தான். அப்போது அவன் கண் முன்னே ஒரு மாளிகை தெரிந் தது. அந்த மாளிகையின் வாசலில் பலர் நின்று வருபவர்களை வணங்கி வரவேற்றனர். ஆச்சரியத்துடன் அவர்களைப் பார்த்துத்தானும் மாளிகைக்குள் நுழைந்தான்.

உள்ளே வரவேற்பு பலமாக இருந்தது. ஏதோ அரச மாளிகை என்று எண்ணி அவர்களின் விருந்தோம்பலை வியந்து வயிறுகுளிர உண்டு விட்டு எழுந்தான். அதன் போது உபசரித்த ஒருவன் வந்து ஒரு காகிதத்தை அவனிடம் நீட்டினான். அது சாப்பிட்ட தொகைக்கான 'பில்' அவன் வந்த இடம் ஒரு ஹொட்டல். மொழி தெரியாத அவனுக்கு அது புரியவில்லை.

அது ஏதோ தனக்கு மரியாதை செலுத்தி வழங்கப்பட்ட பாராட்டுக் கடிதம் என்று எண்ணி வாங்கிக் கொண்டு தன் மொழியில் நன்றியைச் செலுத்தி விட்டுப் புறப்பட்டான். வழிமறித்த காவல்காரன் முகாமையாளர், உயரதிகாரிகள் மற்றும் நீதிபதியிடம் அனுப்பிய போதும் நன்றி நன்றி என்று அவன் மொழியிலேயே கூறிக்கொண்டிருந்தான்.

கோபமடைந்த நீதிபதி அவனைக் கழுதைமேல் ஏற்றி "இவன் ஒரு மோசடிக்காரன்" என்று எழுதி ஊர்வலமாக அனுப்புமாறு உத்தரவிட்டார். அந்த மூடனோ தன்னைப் பாராட்டி அரசாங்கமே விழா நடத்துவதாக நினைத்துக் கொண்டான். அப்போது அந்த வழியால் வந்த அவனது ஊரைச் சேர்ந்தவன் நடப்பதைக் கூறி தலையில் அடித்துக் கொண்டு நகர்ந்து போனான். அப்போதும் மூடன் " அவன் பொறாமைக்காரன்... என் பாராட்டு ஊர்வலத்தைப் பார்க்கப் பொறுக்காமல் பேசுகிறான்" என்று அகங்காரத்துடன் நினைத்தான்.

இந்த மூடனுக்கும் எமக்கும் என்ன வித்தியாசம்! ஒன்றுமே இல்லை! நமது வாழ்க்கையில் மொழி தெரியாமல், ஒவ்வொரு நிகழ்வையும் அகங்காரத்தின் படியே அர்த்தம் செய்து கொள்கிறோம்! அகங்காரம் என்ற பிரமையில் இருந்து விலகி இருந்தால் மட்டுமே கடவுளை நம்மால் புரிந்துகொள்ள முடியும்.

**சுகி சிவம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் மொழிப் (பெயர்ப்பு) பிரச்சினை



எதிர்பார்ப்பு: ஏதோ ஒரு எதிர்பார்ப்பில் குழந்தைகளுடன் வந்திருந்து சாட்சியமளிக்கும் ஒரு தாய்.

முதற் கோணல் முற்றும் கோணல் என்று சொல்வார்கள். அதற்கு மாறாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் யாழ்ப்பாண அமர்வு சில நம்பிக்கைகளை ஏற்படுத்தியிருக்கின்றது. ''இனக்கலவரம், நூலக எரிப்பு என்பனவெல்லாம் இலங்கையின் கறை படிந்த அத்தியாயங்கள். அது போன்ற அசிங்கமான செயல்கள் இனியும் இடம் பெறாவண்ணம் சிபார்சுகள் அடங்கிய இறுதி அறிக்கை அமையும் என'' ஆணைக் குழுவின் தலைவர் சீ.ஆர். டி. சில்வா சொல்லியிருப்பதனூடாக நிறைய விடயங்களை அது கற்றிருக்கிறது என்பதனை உணர முடிகின்றது.

இங்கு முதற் கோணல் என்று சொல்லப்பட்டது ஆணைக்குழுவின் முதல் நாள் வருகையைத்தான். நவம்பர் 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்குக் குருநகரில் ஆணைக்குழுவின் அமர்வு நடைபெற ஏற்பாடாகியிருந்தது. சாட்சியமளிப்பதற்காக ஏராளமானோர் காலை 8 மணிக்கே வந்துவிட்டனர். ஆனாலும் ஆணைக்குழுவினர் வரவில்லை. நேரம் நீளமாக நகர்ந்து கொண்டிருந் ததே தவிர ஆணைக்குழுவின் தலைவர் வருவதற்கான எந்தவித 'அசுமாத்தமும்' தெரியவில்லை. காத்திருந்தவர்களோ தம் பொறுமையை இழக்காது தொடர்ந்தும் வழி மீதிருந்த தம் பார்வையை அகற்றாமல் இருந்தார்கள்.

''கொழும்பில் சரியான மழையாம். அதுதான் வர லேட்டாகுதாம்,'' வாய்மொழி மூலத் தகவல்கள் அவ்விடத்தில் பரவிய பின்னரும் நம்பிக்கையிழக்காதவர்களாக 'எப்படியும் சாட்சியமளித்துவிட்டுத்தான் போவோம்' என்று ஒற்றைக் காலில் மக்கள் நின்றுகொண்டேயிருந்தனர். நேரம் மாலை 4 மணியை எட்ட முனையும்போதுதான் அவசர, அவசரமாக யாழ்ப்பாணத்துக்குள் ஆணைக்குழுவினர் உள்நுழைந்தனர். திட்டமிட்டதை விடவும் பலமணிநேரம் தாமதமானதால் ஆணைக்குழுவின் அமர்வுகளின் நிகழ்ச்சி நிரலும் சடுதியாக மாறியது. குருநகர் அமர்வு கைவிடப்பட்டது. இதனால் யாழ்ப்பாணத்தில் நல்லிணக்க ஆணைக் குழுவின் முதலாவது அமர்வை நடத்தும் பேறு அரியாலைக்குக் கிடைத்தது. அதன் பின்னர் நீர்வேலியில் மாலை 5 மணியுடன் முடிவதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த அமர்வு இரவு 10 மணியைத் தாண்டியும் முடியவில்லை. முதல் நாளில் விடுதலைப்புலிகள் அமைப்பில் முக்கிய பாத்திரங்களை வகித்த கவிஞர் புதுவை இரத்தினதுரை, யோகரட்ணம் யோகி ஆகியோரின் மனைவியர் ''எம் கண்முன்னால் இராணுவத்திடம் சரணடைந்த கணவர் எங்கிருக்கிறார்? அவரை விடுவியுங்கள்'' என்று மன்றாடினர். (இறுதிப்போரின் போது சரணடைந்த எவரும் கொல்லப்படவில்லை என்று போர் நிகழ்ந்த காலங்களில் கள முனைத் தளபதியாகவிருந்த சவீந்திர சில்வா அண்மையில் நீதிமன்றத்தில் தெரிவித்திருக்கிறார். ஏனவே புதுவை,யோகி ஆகியோர் உயிருடன் இருக்க் வேண்டும். இல்லாவிட்டாலும் அவர்கள் யுத்தத்தின் போதே கொல்லப்பட்டார்கள் எனக்கதை விடுவதும் அரசுக்கு அவ்வளவு கஷ்டமான காரியமல்ல).

அடுத்த நாளும் நிகழ்ச்சிநிரல் பெரும் மாற்றத்தைச் சந்திக்கவேண்டியதாகிவிட்டது. முன்னைய நிரலில் யாழ் .செயலகத்தில் ஓர் அமர்வு இடம்பெறவுள்ளது என எந்த அறிவிப்பும் செய்யப்பட்டிருக்கவில்லை. காதும், காதும் வைத்தது போன்று விசேட அமர்வொன்று இரண்டாம் நாள் யாழ்.செயலகத்தில் நடைபெற்று முடிந்தது. பேராசிரியர் ரட்ணஜீவன் கூல். சீ.வி.கே சிவஞானம், பேராசிரியர் சி.கா. சிற்றம்பலம், உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன் உட்பட குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மட்டுமே இதன்போது தமது சாட்சியங்களைப் பதிவு செய்து கொண்டனர்.மூன்றாம் நாள் வடமராட்சி கிழக்கு. வடமராட்சி- நெல்லியடி. தென்மராட்சி என அமர்வு தொடர்ந்தது. இறுதி நாளின் போது யாழ்.நூலகத்தை ஆணைக் குழுவினர் பார்வையிட்ட பின்னர் தீவகத்தில் அதன் அமர்வு நடைபெற்றது.

வேலணை, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் நடைபெற்ற அமர்வுகளின் போது யாழ்ப்பாணத்தின் உண்மையான நிலைவரத்தையும் ஆணைக்குழுவினர் தரிசிப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. கருத்துச் சுதந்திரம், ஜனநாயகம் என்பனவெல்லாம் குடாநாட்டில் எந்த லட்சணத்தில் பேணப்படுகின்றன என்பதை இங்கு நடைபெற்ற சம்பவம் உணர்த்தியிருந்தது. தீவகத்தில் சாட்சியமளிப்பவர்கள் தமக்கு எதிராகச் சாட்சியமளிக்கின்றனரா என அவதானிப்பதற்காக மூவர் கண் கொத்திப்பாம்புகள் போல வேலணையிலும், ஊர்காவற்றுறையிலும் வட்டமிட்டுக்கொண்டிருந்தனர். அவர்களின் செயல் மீது ஊடகவியலாளர் ஒருவருக்கு சந்தேகம் தொற்றிக்கொள்ள, அவர்களை நோட்டமிடத் தொடங்கினார். செய்தியாளர் ஒருவர் குறித்த நபர்களை புகைப்படமும் எடுக்கமுற்பட்டுள்ளார். அதன் போது 'படம் எடுத்தால் கழுத்தை அறுத்துவிடுவேன்' என்னும் அர்த்தத்தில் அவர் சைகை செய்துள்ளார். ஊடகவியலாளர் இது குறித்து அங்கு பிரசன்னமாகியிருந்த தூதரக அதிகாரிகளிடம் சொல்ல, இந்த விடயம் ஆணைக்குழுவின் தலைவர் காதுக்குப் போனது. ஆணைக்குழுத் தலைவரின் உத்தரவின் பேரில் குறித்த சைகையைக் காட்டிய நபர் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டார். விடயம் அத்துடன் முடிந்து விடவில்லை. தமது வேடத்தைக்கலைத்த ஊடகவியலாளரை அச்சுறுத்தும் வகையில் ஊர்காவற்றுறையில் இருந்து மோட்டார் சைக்கிளில் குறித்த நபர்கள் பின்தொடர்ந்தும் வந்துள்ளனர். என்னதான் ஜனநாயக வாதிகள் என்ற முகமூடியை அணிந்திருந்தாலும் தமது சுயரூபத்தைக் கடைசிவரையும் வெளிப்படுத்தாமல் இவர்களால் (யார் என்பது உங்களுக்குப் புரியும்) இருக்கமுடியாது என்பதையே இது காட்டி நிற்கிறது. அத்துடன் தீவகத்தில் நடக்கும் இருள் ஆட்சியும் ஆணைக் குழுவுக்குத் தெரியவருவதற்கு இச்சம்பவம் பேருதவி செய்திருக்கிறது. ஏனெனில் சாட்சியங்கள் பயத்[illegible] விடயத்தை [illegible] நபர்கள் நேரடியாகவே ஆணைக்குழு முன் அம்பலப்படுத்தியிருக்கிறார்கள்.அதற்காகத் தமிழ் மக்கள் அந்த இரு நபர்களுக்கும் நன்றி சொல்லவேண்டியிருக்கும். தமக்கு எதிராகச் சாட்சியமளித்த ஒரு மூதாட்டியை இந்த நபர்கள் மண்கும்பானில் வைத்து நீண்டநேரமாக விசாரித்தனர் எனவும் ஒரு தகவல். காணாமல் போதல், படுகொலைகள் அதிகம் நிகழ்ந்த தீவகத்தில் இன்னும் இருண்டயுகமே தொடர்கிறது என்பதற்கு இது நல்ல எடுத்துக் காட்டு.

இம்முறை ஆணைக்குழுவினர் மேற்கொண்ட குழு ரீதியிலான விசாரணை முறை பாரட்டப்பட வேண்டியதொன்று. மிகப்பெரும் எண்ணிக்கையில் சாட்சியமளிக்க மக்கள் கூடியதால் அவர்கள் எல்லோரினதும் வாய்மொழிமூலமான கருத்துக்களை அறிவதற்காக தமது வழமையான அமர்வு நடவடிக்கையை ஓரங்கட்டிவிட்டு, ஆணைக்குழு உறுப்பினர்கள் தனித்தனியாக மக்களிடம் இறங்கிச் சென்று கதைத்தனர். இந்த உத்திமூலம் ஒரே சமயத்தில் ஏராளமானோரிடம் சாட்சியங்களைப் பெறமுடிந்தது. சாட்சியமளிக்க வந்தவர்களும் தமது அவலங்களை ஆணைக்குழுவினர் செவிமடுத்தார்களே என்ற மனநிறைவுடன் செல்லவும் முடிந்தது. அதேவேளை, இம்முறையும் மொழிபெயர்ப்பில் அனேக இடங்களில் இடர்ப்பாடுகள் ஏற்படவே செய்தன. மொழிபெயர்ப்பாளர்கள் சொல்லப்படுவதை தமிழில் அப்படியே மொழிபெயர்த்ததாலேயே இந்நிலை.

உதாரணத்துக்கு ஒன்று-

*சாட்சியளித்த நபர்- ''புல்மோட்டையில் நேவி என்ர மருமகனுக்கு மருந்து கட்டினாங்கள். பிறகு முகாமுக்கு எங்களைக் கொண்டு போறதுக்கு பஸ்ஸில ஏத்திற இடத்தில விட்டாங்கள். அங்கதான் மருமகனை சிவில் உடுப்பில வந்த ஆமி கொண்டு போனது''.*

*(இதனை ஆங்கிலத்தில் சொல்லும் போது பஸ்ஸில ஏத்திற இடம் என்பதை மொழிபெயர்ப்பாளர் பஸ்தரிப்பு நிலையம் (பஸ் ஸ்டொப்) என்று விளிக்கிறார். ஆனால் உண்மையில் அது பஸ்நிலையம் அல்ல. கடற்படை முகாமில் இருந்து நலன்புரி நிலையத்துக்கு மக்களைக் கொண்டு செல்வதற்கான இடம். ஆனாலும் மொழிபெயர்ப்புத்தவறால் கதை எப்படி மாறியது என்பதைப்பாருங்கள்.)*

*ஆணைக் குழுத்தலைவர்: ''அப்படியானால் பஸ் தரிப்பு நிலையத்துக்கு எப்படிப் போனீர்கள்?''*

*சாட்சி: ''நாங்கள் போகேலை. நேவிதான் அதில நிக்கச் சொன்னது; நாங்கள் பஸ் ஏற அதில நிண்டம்''.*

*ஆணைக் குழுத்தலைவர்: ''அவர்கள் உங்களை விடுவித்த பின்னர் தானே அந்த பஸ்தரிப்பு நிலையத்துக்கு நீங்கள் போயிருக்க முடியும். இந்நிலையில் எப்படி படையினர் தான் உங்கள் மருமகனைக் கொண்டு சென்றதாகக் கூறுகிறீர்கள்?''*

*சாட்சி: ''இல்லை! ஆமிதான் கொண்டுபோனது.''*

*ஆணைக் குழுத்தலைவர்: ''அவர்களின் பிடியில் இல்லாமல், விடுவித்த பின்னர் நிகழ்ந்த சம்பவத்துக்கு எப்படி இராணுவத்தினரைக் குற்றம் சாட்டமுடியும்? சரி.உங்கள் பிரச்சினையை எழுதிக் கொடுங்கள். அடுத்தவர் சாட்சியமளிக்க வாருங்கள்''.*

ஒரு சிறிய மொழிபெயர்ப்புத் தவறு சாட்சியத்தின் அர்த்தத்தையே அடியோடு மாற்றிவிட்டது. குறித்த அமர்வு முடிந்தவுடன் ஆணைக்குழுவின் தலைவர் சீ.ஆர்.டி.சில்வாவின் கவனத்துக்கு இந்த விடயம் கொண்டு செல்லப்பட்டது.

அதற்கு, ''மொழிபெயர்ப்பில் சில சிக்கல்கள் இருப்பதை நாங்களும் உணர்ந்துள்ளோம். ஆயினும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை இந்த அமர்வுகள் மூலம் அறிய முடிகிறது. அதன் பின்னர் எழுத்து மூலமான அவர்களின் சாட்சியத்தின் அடிப்படையிலேயே குறித்த பிரச்சினைகள் பற்றி ஆராய்வோம்''- என்று கூறினார்.

இதைவிடத் தமது ''சொந்தக்கதை, சோகக்கதைகளைச்'' சொல்லும் களமாகவும் ஆணைக்குழு அமர்வுகளைப் பயன்படுத்திய பிரகிருதிகளும் இருக்கத்தான் செய்தார்கள். யாழ்.செயலகத்தில நடைபெற்ற அமர்வின்போது சாட்சியமளிக்கக் கொழும்பிலிருந்து வந்ததாக ஒருவர் தன்னை அறிமுகம் செய்து கொண்டார். கொழும்பிலிருந்து சாட்சியமளிப்பதற்காகவே 'மினக்கெட்டு' ஒருவர் வந்திருக்கிறார் என்றால் ஏதேனும் முக்கிய விடயமாகவே இருக்கும் என எண்ணி எல்லோ ரும் பரபரப்பானார்கள். ஆனால் வெறும் 2 நிமிடங்களில் தனது சாட்சியத்தினை முடித்து விடுவதாக ஆரம்பித்த அவர், கச்சேரி 15 நிமிடங்கள் வரை நீடித்தது. இந்த 15 நிமிடத்திலும் அவர் சொன்னது தனது வீட்டை விற்பதில் தன்னை யாரோ மோசடி செய்து விட்டார்கள். அவர்கள் ஜனாதிபதியின் பெயரைப் பாவித்தே இதனைச் செய்தார்கள் என்பதுதான்.(கொழும்பிலும் ஆணைக்குழுவிடம் இதுபற்றிச் சொல்லியிருந்தாராம்). அவருக்குப் பின்னால் கண்ணீர் முகத்தோடு காத்திருந்த பலரும் இவரின் 'நேரவிழுங்கலால்' சாட்சி யமளிக்க முடியவில்லை. இதேபோன்று எல்லா அமர்வுகளிலும், ஒரு கட்டப்பஞ் சாயத்தாக ஆணைக்குழுவைக்கருதி தமது குடும்பப் பிரச்சினைகளைச் சொல்ல வந்தவர்களையும் காணமுடிந்தது.

''மக்களின் அவலக் கதைகளைக் கேட்கும் போது பல சமயங்களில் எனக்கு அழுகையே வந்துவிடுகிறது. அவர்களோடு ஒன்றித்துப் போய்விடுகிறேன். நிச்சயம் இந்த மக்களுக்கு விரைவில் நிம்மதி கிடைக்க வேண்டும்'' என மொழிபெயர்ப்பாளரான தாமோதரம்பிள்ளை கூறினார். ஒரு மொழிபெயர்ப்பாளரையே மக்களின் அவலங்கள் இத்துணை தூரம் தொட்டிருந்தால் இந்தக் கண்ணீர் மழை ஆணைக்குழு உறுப்பினர்களை எவ்வளவு அசைத்திருக்க வேண்டும்? உண்மைகளை வெளிக்கொணரும் -எல்லா அவலங்களுக்கும் நல்ல தீர்விணைத்தரும் சிபார்சுகள் அடங்கிய- இறுதி அறிக்கையை ஆணைக்குழு வெளியிடும் என்ற நம்பிக்கை யாழ். வருகையின் பின்னர் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அந்த நம்பிக்கையை ஆணைக்குழு காப்பாற்றுமா?

**ஒடுகாலி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீர்வேலி காமாட்சி அம்பாள் ஆலயம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

நீர்வேலி வடக்கில் அரசும் வேம்பும் தலைவிருட்சமாகக் கொண்ட இடத்தில் அமைந்துள்ளதுதான் நீர்வேலி காமாட்சி ஆலயம். இக்கிராமத்திலேயே முதன் முதலாக விஷ்ணு வழிபாடு ஏற்படுத்தப் பட்டது இங்கே தான். இது கிராமத்தின் புகழில் இடம் பெறவேண்டிய

**கு.எழிலன்**

அம்சமாகும். 23.02.1974ஆம் ஆண்டில் இல் ஆலய பரிபாலகர் சின்னப்பு தர்மலிங்கம் இறைபதம் அடைந்தமையினால் பூசைக் கருமங்களை கிரியாமணி குமார தியாகராசக் குருக்கள் ஆற்றிவருகின்றார்.


காலப்போக்கில் ஆலயக் கட்டடங்கள் பழுதடைந்தமையினால் 1987ஆம் ஆண்டில் புனராவர்த்தனம் செய்யப்பட்டு 07.02.1990 இல் மகாகும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

கும்பாபிஷேகக் கிரியைகள் சிவஸ்ரீ சாம்பசதாசிவக் குருக்கள் தலைமையில் பக்தி பூர்வமாக நிறைவேற்றப்பட்டது. மீண்டும் புனராவர்த்தன கும்பாபிஷேகம் 30.03.2005 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுகள் வண்ணை வேங்கடேஸ்வர பிரதம குரு ஸ்ரீவத்ஸ வரதராஜேஸ்வரக்குருக்கள் தலைமையில் நடைபெற்றன.

மூலமூர்த்தியாக அம்பாளும் சுற்றுப்பிரகாரத்தில் பிள்ளையார், முருகன், நடேசர், அர்த்தநாரீஸ்வரர், மகாவிஷ்ணு, வைரவர், சண்டேஸ்வரர் ஆகிய மூர்த்தங்களுக்குத் தனித்தனியான சந்நிதானங்களும் உண்டு. பொங்கல் மண்டபம், அன்னதான மண்டபம், களஞ்சிய அறை, அவற்றுக்கான தனிக் கிணறு என்பன உண்டு. அம்பிகையின் அருளூட்டத்தினால் வித்தகன் தெட்சணாமூர்த்தி கோபாலசிங்கம் அவர்களினால் திருவூஞ்சல் பதிகமும் பஜனைப்பாடல்களும் பாடப்பெற்றன. புத்தூர் பாவலன் காலஞ்சென்ற பெ.சின்னப்பு ஆச்சாரி அவர்களால் அம்பாள் பேரில் பக்திப் பதிகம் ஒன்றும் பாடப்பெற்றுள்ளது.

காலத்துக்குக் காலம் சமயப்பிரசங்கங்களும் மாணவரிடையே சமய அறிவுப் பரீட்சைகளும் நடைபெற்று வருகின்றன.




கும்பாபிஷேக தினத்தை இறுதிநாளாக வைத்து பன்னிரெண்டு தினங்கள் அலங்கார உற்சவம் நடைபெறுவதோடு இறுதி நாளன்று கப்பல் திருவிழா வெகுசிறப்பாக நடைபெற்றுவருகிறது. கிராமத்தில் முதன் முதலாக கப்பல் திருவிழா நடைபெறும் ஆலயம் இதுவென்பது குறிப்பிடத்தக்கது. மாசிமக தினத்தன்று சங்காபிஷேகம், அன்னதானம் என்பனவும் நடைபெற்று வருகின்றன. இவ்வாலயம் சமய வளர்ச்சிக்குப் பெருந்தொண்டாற்றி வருவது கிராமத்தின் புகழில் இடம்பெறும் ஓர் அம்சமாகும். மேலும் கிருஷ்ண ஜெயந்தி விழாவும் நடைபெற்று வருகிறது.



இவ்வாலயச் சூழலில் காமாட்சி அம்பாள் அறநெறிப் பாடசாலை, காமாட்சி அம்பாள் இந்து பரிபாலனசபை, காமாட்சி அம்பாள் முன்பள்ளி என்பனவும் அமைத்து சமயப்பணி, கல்விப் பணியாற்றி வருவது கிராமத்தின் பெருமையை ஒருங்கு சேர்ப்பனவாகும்.

இவ்வமைப்புக்கள் தனித்தனி நிர்வாக பரிபாலனத்தின் கீழ் கூட்டிணைவோடு அறப்பணி புரிந்து வருகின்றன. ஆலய பரிபாலன சபைத் தலைவராக கு.கனகசுந்தரம் அறநெறிப்பாடசாலை, இந்துபரிபாலன சபைத் தலைவராக சமூகஜோதி த.பரராசசிங்கம், முன்பள்ளியின் தலைவராக து.வே. மகேந்திரன் தலைமையிலான நிர்வாகசபை உறுப்பினர்களும் பக்திபூர்வமாக தன்னலமற்ற பணியினைப் புரிந்து இச் சூழலில் மக்களின் சமய வாழ்வு சிறக்க பெருந்தொண்டு புரிந்து ஆலயத்தின் அருள்பெருகச் செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

*(முற்றும்)*

# அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி

வலி.கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் அமைந்து, ஐந்து உள்ளூராட்சிக் கட்டமைப்புகளில் பெரியதும் நகர முக்கியத்துவம் வாய்ந்த மத்திய இடத்தில் அமைந்துள்ளதுமான அச்சுவேலி உப அலுவலகப் பிரிவில் 1995ஆம் ஆண்டு இடப்பெயர்வுக்கு முந்திய காலப்பகுதியில் 10 பாடசாலைகள்

**ஞானஆதவன்**




செயற்பட்டன. இந்த 10 கல்விக்கூடங்களும் அச்சுவேலி கொத்தணிப் பாடசாலைக் கட்டமைப்பிலும் குடும்பப்பாடசாலை கட்டமைப்பிலும் ஒரு குழுமமாகக் கருதப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தன.

10 பாடசாலைகளில் இடைக்காடு மகாவித்தியாலயம், வண் ஏ.பி பாடசாலையாகவும், அச்சுவேலி மத்திய கல்லூரி, அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி இரண்டும் வளர்ச்சித் தரத்திலும் அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, வளலாய் அமெரிக்கன் மிசன் பாடசாலை இரண்டும் தரம் 2 பாடசாலைகளாகவும் ஏனைய 5 பாடசாலைகளும் ஆரம்பப்பாடசாலைகளாகவும் இருந்தன. இந்த 10 கல்விக் கூடங்களினது கல்வி வரலாற்றில் 1995ஆம் ஆண்டுக்கு முந்திய கால யுத்த சூழ்நிலை பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியதுண்டு. பலாலி இராணுவ முகாமுக்கு மிக அண்மையில் அச்சுவேலி அமைந்திருந்ததும் பலாலி இராணுவ முகாம், பலாலி விமான நிலையம் உள்ளடக்கிய அதியுயர் பாதுகாப்பு வலயத்தின் கிழக்கு எல்லையில் இருந்தமையினால் அச்சுவேலிப் பிரதேசம் இடப்பெயர்வு உள்ளிட்ட பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியதுண்டு.

அச்சுவேலியில் செயற்பட்ட 10




பாடசாலைகளில் 1996ஆம் ஆண்டு மீளக் குடியேறுகைக்குப் பின்னர் அச்சுவேலி றோ.க.த. பாடசாலை, வளலாய் அமெரிக்கன் மிஷன் பாடசாலை, பத்தமேனி விபசி வித்தியாலயம் ஆகிய மூன்றும் மூடப்பட்டு நிர்வாக ரீதியாகப் பதிவுகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன. இந்தப்பாடசாலைகளில் காணி உள்ளிட்ட அசையாச் சொத்துக்கள் தற்பொழுது கல்வி நிர்வாகத்துக்குட் படாமல் யாரது பொறுப்பிலும் இல்லாமல் அச்சுவேலியில் உள்ள வறிய குடும்பங்களின் வளர்ச்சிக்குத் தடையாகவும் இருப்பது கண்டுணரப்பட்டுள்ளது.

அச்சுவேலி - சங்கானை வீதியில் தற்போதைய பொலிஸ் நிலையத்துக்கு முன்பக்கத்தில் பொருத்தமான கல்விக் கட்டுமானங்களுடன் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரி அமைந்துள்ளது.

*(தொடரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழங்குடா கல்வியியல் கல்லூரிக்கு முதற்கட்டமாக இருபது கணினிகள்

## கிழக்கு முதலமைச்சர் வாக்குறுதி

மட்டக்களப்பு, நவ.18

மட்டக்களப்பு, தாழங்குடாவில் உள்ள கல்வியியல் கல்லூரியில் நிலவும் பௌதிக வளங்களின் தேவையைத் தீர்க்கும் பொருட்டு முதல் கட்டமாக 20 கணினிகள் வழங்கப்படும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

இக் கல்வியியல்கல்லூரிக்கு பஸ்களை வழங்கும் நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், ஆசிரியர்கள் சமூக சிந்தனையுடன் செயற்படவேண்டும். எமக்கு இன்று உள்ள பெரிய சொத்து இந்தக் கல்வியே. இதனை வளர்த்தெடுக்க ஒவ்வொரு ஆசிரியரும் சிந்தித்துச் செயற்படவேண்டும்.

தேசிய கல்விக்கல்லூரி மத்திய அரசின் கீழ் இயங்குகின்றது. எனினும் எமது மாணவர்களின் நலன்கருதி எமது கிழக்கு மாகாண சபையால் இதற்கு முடிந்த உதவிகளைச் செய்து வருகின்றோம்.

கிராமப் புற பாடசாலைகள் என்றாலும் சரி, நகர்ப்புற பாடசாலைகள் என்றாலும் சரி, மத்திய அரசின் கீழ் செயற்படும் தேசிய பாடசாலைகளாக இருந்தாலும் சரி எல்லாப் பாடசாலைகளிலும் பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன. என்ன பிரச்சினையாகவிருந்தாலும் உள்ள வளங்களைக் கொண்டு அதன் பயன்பாட்டை உச்சரீதியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அதனடிப்படையில் கல்வி நிலையங்களில் ஏற்படும் நிதி விடயங்களையோ நிர்வாக ரீதியான சிக்கல்களையோ தீர்த்துவைப்பது அரசியல்வாதிகளான எங்களின் பொறுப்பு.

அதேவேளை, இந்த நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய, சமூக பொறுப்புள்ளவர்களை வெளிக்கொணரக்கூடிய உணர்வு அதிகாரிகளுக்கு தவறாது வரவேண்டும்'' - என்றார். (ளி)

## விருது...



கௌரவிப்பு: கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், காணி-காணி அபிவிருத்தி, போக்குவரத்து அமைச்சின் பிரதிச் செயலாளர் சி.தண்டாயுதபாணியின் தலைமையில் நடைபெற்ற 'தமிழ் இலக்கிய விழா - 2010' திருகோணமலை, உவர்மலை விவேகானந்தாக் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடை பெற்றது. கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக ஆக்க இலக்கியத்துறையில் ஆற்றிவரும் சேவையைக் கருத்தில் கொண்டு எழுத்தாளர் தம்பு. சிவசுப்பிரமணியத்துக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் விருது வழங்கிக் கௌரவிக்கிறார்.

# தண்ணீர் வாளியில் விழுந்து ஒன்றரை வயது குழந்தை பலி

மட்டக்களப்பு, நவ.18

மட்டக்களப்பு, புதூர்கதிரவெளியில் ஒன்றரை வயது பெண்குழந்தையொன்று தண்ணீர் வாளியில் தவறி வீழ்ந்து மூச்சுத் திணறி உயிரிழந்துள்ளது. நடராஜா தயாழினி என்ற குழந்தையே கடந்த திங்கட்கிழமை மாலை இவ்வாறு உயிரிழந்தது.

குழந்தையின் சடலம் வாழைச்சேனை வைத்தியசாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. இச் சம்பவம் குறித்து வாழைச் சேனைப் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். (ளி)

# சட்டவிரோத மான் இறைச்சி: பொலிஸாரால் நபர் கைது

அம்பாறை, நவ.18

அம்பாறை மாவட்ட தெஹியத்தகண்டிய பிரதேசத்தில் உலரவைத்த சட்டவிரோத மான் இறைச்சி விற்பனையில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பதியத்தலாவ பொலிஸாரால் நபர் ஒருவர் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார். குறிப்பிட்ட நபர் நீண்ட நாள்களாக மான் இறைச்சி விற்பனையில் ஈடுபட்டு வருகிறார் என பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து, மேற்படி நபரை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

தெஹியத்த கண்டிய நீதிவான் பீ.டபிள்யூ. எம்.என்.றுவந்திகா மாறப்பன முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்ட மேற்படி நபருக்கு 30ஆயிரம் ரூபாவை தண்டப்பணமாகச் செலுத் துமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ளி)




# தோட்டத் தொழிலாளருக்கு வழங்கப்படும் சவப்பெட்டி கொடுப்பனவை அதிகரிக்கவும்

கொழும்பு,நவ. 18

தோட்டத்தொழிலாளி ஒருவர் மரணிக்கும்போது தோட்ட நிர்வாகத்தினால் சவப் பெட்டிக்கென 2,000 ரூபா வழங்கப்படுகிறது. ஆனால் தற்போதைய நிலையில் சவப்பெட்டியொன்றுக்கு 18,000 முதல் 20,000 வரை செலவிட வேண்டியுள்ளது. எனவே,கொடுப்பனவுத் தொகை அதிகரிக்கப்பட வேண்டும் - எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தொழிலாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:

தோட்ட நிர்வாகத்தினால் வழங்கப்படும் இரண்டாயிரம் ரூபா மரண வீடொன்றின் தேநீர்ச் செலவுக்கு கூடப் போதுமானதாக இல்லை. தொழிற்சங்கங்களும் இது குறித்து நடவடிக்கை எடுக்க முன்வருவதில்லை.

ஆங்கிலேயர் காலத்திலிருந்து வழங்கப்பட்டு வரும் இந்தத் தொகையை காலத்திற்கு ஏற்றவாறு அதிகரித்து வழங்குவதற்கு தொழிற் சங்கங்கள் முன்வர வேண்டும்.

இதேவேளை, கிராமப்புறங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் இறப்பவர்களைப் புதைப் பதற்கென மயானங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

ஆனால் தோட்டப்பகுதிகளில் அவ்வாறான தொரு நிலை கிடையாது.

தேயிலை, இறப்பர் மரங்களுக்கிடையிலேயே சடலங்கள் புதைக்கப்படுகின்றன. இது எமக்கு மிகுந்த வேதனையை ஏற்படுத்துகின்றது - இவ்வாறு தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (ளி)




# அரிசி மூடைகளை தீயிட்டு அழித்தோர்மீது நடவடிக்கை

கொழும்பு, நவ.18

பாவனைக்குதவாத அரிசியை கொள்வனவு செய்த பசறை பல நோக்குக் கூட்டுறவு சங்கம் அந்த அரிசி மூடைகள் அனைத்தையும் தீயிட்டு அழித்ததால் சங்கத்திற்கு 6,12,000 ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

2008 ஆம் ஆண்டு இடம்பெற்ற இச்சம்பவத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என பசறை ப. நோ. கூ. ச. புதிய தலைவர் கே. பி. சுனில்சாந்த தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கலந்துரையாடலொன்றின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சங்கத்தினால் நிர்வகிக்கப்பட்டு வரும் எரிபொருள் நிலையத்தில் ஏற்பட்டிருந்த ஊழல் மோசடியினால் சங்கத்திற்கு 18 லட்சம்ரூபாநஷ்டம்ஏற்பட்டுள்ளது

இது தொடர்பாக பொலிஸாரிடம் முறையிட்டுள்ளேன். மேலும் பல கிராமிய வங்கிகளில் போலி நகைகள் அடகு வைக்கப்பட்டுள்ளன. இதனால் சுமார் ஐந்து லட்சம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது. பசறை ப.நோ. கூ. ச. பொறுப்பில் எரிபொருள் நிலைய மொன்றும், மினிகோப் சிற்றிகள் நான்கும், 15 கிராமிய வங்கி களும், 13 கூ. ச. கிளைகளும் உள்ளன. சங்கம் நஷ்டத்தில் இயங்கியதற்கு ஊழல் மோசடிகளே காரணம். -என்று அவர் மேலும் தெரிவித்தார். (ளி)

# நோர்வூட் தோட்டக் குடியிருப்பில் தீ விபத்து ஆறு வீடுகள் எரிந்து நாசம்; 30 பேர் நிர்க்கதி

கொழும்பு,நவ. 18

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட சென்ஜோன் டிலரி தோட்டத்தில் கடந்த திங்கட்கிழமை இரவு 9.15 மணியளவில் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் லயன் குடியிருப்பொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

மின் ஒழுக்கினால் இந்த தீ விபத்து ஏற்பட்டிருக்கலாமெனத் தெரிவிக்கப்படுகிறது

பொதுமக்களும், நோர்வூட் பொலிஸாரும் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதனால் 6 குடும்பங்களைச் சேர்ந்த 30 பேர் நிர்க்கதி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். உடைமைகள் அனைத்தும் தீக்கிரையாகியுள்ளன.

இவர்கள் தற்போது உறவினர், நண்பர்களின் வீடுகளில் தங்கியுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு அம்பகமுவ பிரதேச சபைத்தலைவர் ஜி.நகுலேஸ்வரன், மத்திய மாகாணசபை உறுப்பினர் கணபதி கனகராஜ் ஆகியோர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு தற்காலிக தங்கு மிடங்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு தோட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

சம்பவம் தொடர்பாக நோர்வூட் பொலிஸார் விசாரணைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை, கடந்த 5 வருடங்களுக்கு முன்பு இதே தோட்டத்தில் ஏற்பட்ட தீவிபத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் இதுவரை காலமும் தற்காலிக வீடுகளிலேயே தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ளி)

# கண்டியில் 8கோடி ரூபா நிதி மோசடி; சந்தேகநபரான இந்தியர் தலைமறைவு

கண்டி, நவ. 18

நிதி நிறுவனம் என்ற போர்வையில் இந்தியர் ஒருவர் கண்டிப் பிரதேச மக்களிடமிருந்து எட்டுக்கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகையை மோசடி செய்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரால் ஏமாற்றப்பட்ட சுமார் 25 பேர் கண்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

தன்னுடைய நிறுவனத்தில் அங்கத்துவம் பெற்றுத்தரப்படும் எனக் கூறி இவர் ஒவ்வொருவரிடமும் தலா 14,500 ரூபாவை வசூலித்துள்ளார். பின்னர் சிறிது காலம் வாடிக் கையாளர்களுக்கு மாதாந்தம் 6,500 ரூபாவைக் கொடுப்பனவாக வழங்கியுள்ளார்.

இதனால் மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டது. சந்தேக நபருக்கோ அதிக அங்கத்துவம் கிடைத்தது.

இந்த நிலையில் அவர் ஐயாயிரம்பேரின் பணத்தைச் சுருட்டிக் கொண்டு தனது காரியாலயத்தையும் மூடிவிட்டு நாட்டை விட்டு வெளியேறியுள்ளார் எனக் கூறப்படுகிறது. (ளி)

# குடிதண்ணீர்த் திட்டத்தால் பயனின்றி கலகெதர மக்கள் சிரமம்

கண்டி, நவ.18

ஹாரிஸ்பத்துவ, கலகெதர ஆகிய பிரதேசங்களில் புதிய நீர்வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

[illegible] பல்கும்புர, திப்புட்ட, டிபொல, பேஹெய், துல்லேவ ஆகிய கிராமங்களைச் சேர்ந்த சுமார் 800 குடும்பங்கள் குடி தண்ணீரைப் பெற்றுக்கொள்வதில் பலத்த சிரமங்களை எதிர்கொண்டுள்ளன.

இவர்கள் விவசாயக் கிணற்று நீரையே பாவிக்கின்றனர்.

"புதிய குடிதண்ணீர் திட்டம் எமது வதிவிடத்திலிருந்து சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்திலேயே உள்ளது. எனவே, [illegible]க்கும் இத்திட்டத்தின் மூலம் குடிதண்ணீரைப் பெற்றுத் தர வேண்டும்'' - என அந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ளி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்விச்சுடர்

## O/L மாவட்ட வலம் - 2010

### க.பொ.த சாதாரண தர மாதிரி வினாத்தாள்

கல்வி உலகின் ஊடக முன்னோடி உதயன்

நன்றிக்கும் பாராட்டுக்குமுரிய ஆசிரியர்
திரு.வி.பரணிதரன்,
மடுல்சீமை தமிழ் மகா வித்தியாலயம்,
பதுளை.
தொ.பே.இல: 072-5562646

G.C.E.(O/L)
வலம்-4
வெளியீடு-1
பதுளை

## விஞ்ஞானம் - I

நேரம்: 1 மணித்தியாலம்

01. இலத்திரனை கண்டுபிடித்தவர்.
 1) சட்விக். 2) J.J.தொம்சன். 3) இரதபோட். 4) தாற்றன்.

02. உந்தம், உந்தமாற்று வீதம் என்பவற்றின் அளவுகள் முறையே.
 1) $kgms, kgms^{-1}$ 2) $kgms^{-1}, kgm$ 3) $kgms^{-1}, kmgs^{-2}$ 4) $kgms^{-2}, kmgs^{-1}$

03. குழிக்குடலிகளுக்கு உதாரணம்.
 1) மண்புழு. 2) நண்டு. 3) ஐதரா. 4) நத்தை.

04. அலுமினியத்தின் நியம குறியீடு $^{27}_{13}Al$ ஆகும். $Al^{31}$ அயனில் உள்ள இலத்திரன்கள், நியூத்திரன்கள் என்பவற்றின் எண்ணிக்கைகள் முறையே.
 1) 13, 14 2) 13, 27 3) 10, 13 4) 10, 14

05. விஞ்ஞான முறையின் முதலாவது படிமுறை.
 1) எதிர்வுகூறல். 2) அவதானம்.
 3) முடிவுகூறல். 4) கருதுகோள் உருவாக்கல்.

06. 20kg திணிவுடைய பொருள் $3ms^{-1}$ வேகத்தில் இயங்குகின்றது. இப்பொருளின் இயக்கப்பாட்டு சக்தி,
 1) 60J 2) 180J 3) 66.6J 4) 90J

07. தவறான கூற்றைத் தெரிவுசெய்க.
 1) கலங்களில் கடத்தல் செயற்பாட்டை அகமுதலுருச் சிறுவலை, கொல்கியுடல் என்பன மேற்கொள்கின்றன.
 2) இலைகளில் கீழ்புற மேற்றோலில் மட்டுமே இலைவாய்கள் உள்ளன.
 3) ஒளித்தொகுப்பு தாக்கத்திற்கு எதிரான இரசாயன செயன்முறைகள் இழைமணியில் நிகழ்கின்றன.
 4) சைகஸ் தாவரம் பூக்களை உருவாக்காதபோதும் வித்துக்களை உருவாக்கும்.

08. மூலகம் X ஆனது இரண்டாம் கூட்டத்தை சேர்ந்ததாகும். மூலகம் X இன் பொசுபேற்றின் சூத்திரம்,
 1) $XPO$ 2) $X_2PO_4$ 3) $X_3(PO_4)_2$ 4) $X(PO_4)_3$

09. நிலமட்டத்தில் இருந்து () வேகத்தில் நிலைக்குத்தாக மேல்நோக்கி எறியப்படும் பந்து 2 செக்கனில் அடையும் உயரம்,
 1) 140m 2) 120m 3) 100m 4) 80m

10. வல்லுருக்கலவிழையத்தின் இயல்பு அல்லாதது?
 1) வன்மையற்றது. 2) கலத்திடைவெளி அற்றது.
 3) இறந்த கலங்களலானது. 4) இலிக்னின் படிவு கொண்டது.

11. உயர் உருகுநிலை, உயர் கொதிநிலை கொண்ட மூலகம்.
 1) சோடியம். 2) ஐதரசன். 3) காபன். 4) ஒட்சிசன்.

12. A- ஏமறைற்று B- மக்னைற்று C- போக்சைற்று D- கானலைற்று
 மேலுள்ள உலோகத்தாதுக்களில் இரும்பு பிரித்தெடுப்புக்கு பயன்படுவது.
 1) A, Bமட்டும். 2) A, C மட்டும். 3) B மட்டும். 4) C, D மட்டும்.

13. எல்லை உராய்வு விசையில் செல்வாக்கு செலுத்தாத காரணி,
 1) தொடுகை மேற்பரப்பின் தன்மை. 2) தொடுகையுறும் பரப்பு.
 3) செவ்வன் மறுதாக்கம். 4) உராய்வு குணகம்.

14. கடல் மட்டத்தில் வளிமண்டல அமுக்கம் அண்ணளவாக,
 1) 76mmHg 2) 760cmHg 3) 76cmHg 4) 760mmHg

15. நிலத்தாவரங்களில் எச்செயன்முறை மூலம் நீர், கனியுப்புக்கள் உயரமான பகுதிகளுக்கு கொண்டு செல்லப்படுகின்றது?
 1) பிரசாரணம். 2) உயிர்ப்பான கொண்டுசெல்லல்.
 3) திணிவுப்பாய்ச்சல். 4) பரவல்.

16. திரவ அமுக்கம் தங்கியிராத காரணி,
 1) கனவளவு. 2) ஆழம்.
 3) அடர்த்தி. 4) புவியீர்ப்பு ஆர்முடுகல்.

17. A- கல்சியம் அயன், B- இரும்பு அயன், C- விற்றமின் A, D- விற்றமின் மேலுள்ளவற்றில் குருதி உறைதலுக்கு அவசியமான காரணிகள்,
 1) A,B மட்டும். 2) B,C மட்டும். 3) A,D மட்டும். 4) A,C,D மட்டும்.

18. எரியும்போது மஞ்சள், வெள்ளை நிற சுவாலைகளை தரும் உலோகங்கள் முறையே,
 1) Mg, K 2) K, Na 3) Na, Mg 4) T, Mg


19. 400K வெப்பநிலை $^0F$ இல்,
 1) $1230^0F$ 2) $300^0F$ 3) $196.60^0F$ 4) $260.6^{00}F$

20. உட்சுவாசப் பொறிமுறையின்போது நடைபெறாதது.
 1) பிரிமென்றகட்டு வளைவு குறைதல். 2) விலாஎன்விடை தசைகள் தளர்தல்.
 3) நெஞ்சறை கனவளவு அதிகரித்தல். 4) நெஞ்சறை அமுக்கம் குறைதல்.

21. மெழுகுவர்த்தி ஒளிரும்போது காபனீரொட்சைட்டு, நீராவி, வெப்பம் என்பன வெளிவிடப்படும். காபனீரொட்சைட்டு, நீராவி என்பவற்றை இனங்கான ஆய்வுகூடத்தில் பயன்படுத்தப்படும் இரசாயனப் பதார்த்தம் முறையே,
 1) $C_2(OH)_2, CuSO_4$ 2) $C_2CO_3, CuSO_4.H_2O$
 3) $C_2(OH)_2, CuSO_4, H_2O$ 4) $CaC_2, CuSO_4$

22. காட்டுத்தீ ஏற்பட்டவேளை காட்டின் ஒருபகுதி வெட்டி அகற்றப்பட்டு தீ கட்டுப்படுத்தப் பட்டது. இங்கு நீக்கப்பட்ட தகனத்திற்குத் தேவையான காரணி,
 1) எரிபொருள். 2) தகனத்துணையி. 3) எரிபற்றுநிலை. 4) யாவும் சரி.

23. ஒரு முனை மூடப்பட்ட குழாயினுள் இரசம் காணப்படுவதை படம் காட்டுகின்றது. திறந்த முனை மேல்நோக்கி இருக்கும் போது வளி நிரலின் உயரம் h ஆகும். இக்குழாயை கிடையாக வைத்தால்,
 1) h இன் உயரம் கூடும்.
 2) h இன் உயரம் மாறாது.
 3) h இன் உயரம் குறையும்.
 4) கூறமுடியாது.




24. தோலின் தொழில் அல்லாதது,
 1) நிர்ப்பீடனம் வழங்கள் 2) கழிவகற்றல்
 3) அமைனகற்றல் 4) விற்றமின் D தொகுப்பு

25. 330Hz அதிர்வெண் கொண்ட இசைக்கவை அதிரும்போது ஏற்படும் அலையின் அசைவு காலம்,
 1) 330s 2) 1/330s 3) 330x330s 4) 1/330s

26. முனைவுத்தன்மையற்ற பதார்த்தம்,
 1) நீர் 2) மண்ணெண்ணெய்
 3) கொண்டிசு 4) சீனி


27. கரைதிறனை அதிகரிக்கும் நடவடிக்கை அல்லாதது,
 1) வெப்பமேற்றல். 2) அமுக்கத்தை அதிகரித்தல்.
 3) கரையம்/ கரைப்பானை மாற்றுதல். 4) கலக்குதல்.

28. அனுசேப செயற்பாட்டுடன் தொடர்புடைய ஓமோன்,
 1) GH 2) தைரோட்சின் 3) அதிரினலின் 4) ஈஸ்ட்ரஜன்

29. உடல்நலமுள்ள ஒருவரின் சதையியின் இலங்ககான் சிறுதீவுகளின் β தமது சுரப்பை சுரப்பது,
 1) குருதியில் குளுக்கோசு அதிகரிக்கும்போது.
 2) சிறுநீரில் குளுக்கோசு செறிவு கூடும்போது.
 3) குருதியில் குளுக்கோசு மட்டம் குறையும்போது.
 4) நீரிழிவு நோய் ஏற்படும்போது.


30. அமிலம், மூலம், உப்பு என்பன முறையே
 1) $HCl, MgCl_2, Na_2SO_4$ 2) $HNO_3, Ca(OH)_2, NaCl$
 3) $H_2SO_4, CaCl_2, Mg(OH)_2$ 4) $NH_4Cl_2, Na_2SO_4, NaCl$

31. அருகில் உள்ள சுற்றில் ஒளிரக்கூடிய LED அல்லது LED க்கள்,
 1) A, B மட்டும்.
 2) A,B,C எல்லாம்.
 3) A மட்டும்.
 4) C மட்டும்.




32. கம்பி ஒன்றின் தடைதிறன் தங்கியுள்ள காரணிகளை மட்டும் கொண்ட கூட்டம்,
 1) திணிவு, நீளம், மின்னோட்டம். 2) கனவளவு, நீளம், அடர்த்தி.
 3) நீளம், குறுக்குமுகபரப்பு, அடர்த்தி. 4) திணிவு, நீளம், நேரம்.

33. கம்பியினுள் காந்தத்தின் வடமுனையை செலுத்தியபோது (G) கல்வனோமானியில் திரும்பல் ஏற்பட்டது. கல்வனோமானியின் திரும்பலை அதிகரிக்கச் செய்ய,
 1) கம்பிச்சுருளின் எண்ணிக்கையை குறைத்தல்.
 2) வலிமையற்ற காந்தத்தை பயன்படுத்தல்.
 3) காந்தத்தை விரைவாக அசைத்தல்.
 4) மேற்கூறிய யாவும் பொறுத்தமன்று.




34. டெங்கு நோய் காரணி, நோய் காவி என்பன முறையே,
 1) ஈடிஸ், ஆபோவைரசு. 2) ஆபோவைரசு, ஈடிஸ்.
 3) கியூலெக்ஸ், பியஸ்மோடியம். 4) கியூலெக்ஸ், ஈடிஸ்.

35. ஒலி அலையின் இயல்பு அல்லாதது,
 1) வளியை விட வெற்றிடத்தில் மிக விரைவாக செல்லும்.
 2) பொறிமறை அலையாகும்.
 3) துணிக்கைகள் அதிர்வதன் மூலம் உருவாகும்.
 4) மனிதனால் கேட்க முடியாத ஒலிகளும் உள்ளன.

36. சூழலில் சிக்கல் தன்மை அதிகரிக்கும் ஒழுங்கு,
 1) தனியன் → சாகியம் → குடித்தொகை → சூழற்தொகுதி → உயிர்கோளம்.
 2) தனியன் → குடித்தொகை → சாகியம் → உயிர்கோளம் → சூழற்தொகுதி.
 3) குடித்தொகை → தனியன் → சாகியம் → உயிர்கோளம் → சூழற்தொகுதி.
 4) தனியன் → குடித்தொகை → சாகியம் → சூழற்தொகுதி → உயிர்கோளம்.

37. புல் → வெட்டுக்கிளி → தவளை → பாம்பு. இவ்வுணவுச்சங்கிலியில் உள்ள இணைப்புக்களின் எண்ணிக்கை, முதலாம் படி நுகரி என்பன முறையே,
 1) 3, வெட்டுக்கிளி 2) 3, புல்
 3) 4, வெட்டுக்கிளி 4) 4, புல்

38. பார உலோகங்களால் அதிகம் பாதிக்கப்படுவது,
 1) உற்பத்தியாக்கிகள். 2) முதல் நுகரிகள்
 3) துணைநுகரிகள் 4) புடைநுகரிகள்

39. சூழல் மாசடைதலில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள்,
 1) காடழிப்பு 2) கைத்தொழில்மயமாக்கல்.
 3) எரிபொருள் தகனம். 4) மேற்கூறிய யாவும் சரியானது.


40. ஒற்றை இடப்பெயர்ச்சித் தாக்கத்திற்கு உதாரணம் பின்வருவனவற்றில் எது?
 1) $Mg + 2HCl \rightarrow MgCl_2 + H_2$ 2) $CaCO_3 \rightarrow CaO + CO_2$
 3) $N_2 + 3H_2 \rightarrow 2NH_3$ 4) $CuSO_4 + BaCl_2 \rightarrow BaSO_4 + CuCl_2$


## விஞ்ஞானம் - II

3 மணித்தியாலங்கள்

### அமைப்புக் கட்டுரை வினாக்கள்

01. A. வெள்ளொளிக்கதிர் ஒன்று அரியத்தில் பட்டு முறிவடைந்து திருசியத்தை உருவாக்கும் தோற்றப்பாடு தரப்பட்டுள்ளது.
 1) X, Y என்பவற்றிற்குப் பொருத்தமான நிறங்களைக் கூறுக.
 2) X, Y என்பவற்றில் அதிக விலகலைக் காட்டும் நிறம் எது?
 3) திருசியம் எனப்படுவது யாது?
 4) திருசியத்தைக் காண்பிக்கும் இயற்கைத் தோற்றப்பாடு ஒன்றைத் தருக.
 5) பின்வரும் வரிப்படங்களில் ஒளிக்கதிரின் பாதையைப் பூரணப்படுத்துக.



 B. சூரிய ஒளி மட்டும் இல்லை எனில், அங்கிகள் யாவும் உணவின்றி இறக்க நேரிடும் என மாலன் கூறுகின்றான்.
 1) இக்கூற்று உணர்த்தும் உயிர்ச்செயன்முறை யாது?
 2) நீர் கூறிய உயிர்ச் செயன்முறைக்கு அவசியமான காரணிகள் எவை?
 3) இவ் உயிர்ச்செயன்முறையில் பங்கேற்கும் சூரிய ஒளியின் இரு நிறங்களையும் கூறுக.

 C. பின்வரும் சமன்பாடு கலச்சுவாசத்தை விளக்குவதாகும்.
 $$C_6H_{12}O_6 + O_2 \rightarrow CO_2 + H_2O$$
 1) இச்சமன்பாட்டைப் பூரணப்படுத்துக.
 2) ஒரு மூல் $C_6H_{12}O_6$ இன் திணிவைக் காண்க.
 3) ஒரு மூல் குளுக்கோசு சுவாசத்திற்குப் பயன்படும்போது பெறப்படும் $CO_2$ இன் திணிவைக் காண்க.


02. வெற்றுக்கண்ணினால் அவதானிக்க முடியாத அங்கிகள் நுண்ணங்கிகள் ஆகும்.
 1) நுண்ணங்கிகளின் வகைகள் மூன்றினைத் தருக.
 2) பக்றீரியாக்களின் சிறப்பியல்புகள் இரண்டைத் தருக.
 3) அவரையினத் தாவரங்களின் வேர்முடிச்சுக்களில் வாழும் பக்றீரிய இனம் ஒன்றைக் குறிப்பிடுக. நீர் கூறும் பக்றீரியா இனம் மூலம் சீரமைக்கப்படும் இயற்கை வட்டத்தைக் கூறுக.
 4) தனிக்கல ஒட்டுண்ணிக்கு 3 உதாரணங்கள் தருக.
 5) காளான்கள் எவ்வகையான நுண்ணங்கிகள்?
 6) வைரசுக்களுக்கு உயிர் இல்லை என்பதற்கான காரணங்கள் இரண்டு தருக.
 7) பின்வரும் நோய்களை ஏற்படுத்தும் நுண்ணங்கிகளின் பெயர்களைத் தருக.
 1. பன்றிக்காய்ச்சல். 2. டெங்கு.

(17ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

03. A, B, C ஆகிய சோதனைக் குழாய்களில் சம கனவளவு கொதிநீர், ஐதான HCl, செறிந்த HCl என்பன எடுக்கப்பட்டுள்ளன. மூன்று சோதனைக் குழாய்களினுள்ளும் சம திணிவுடைய Mg துண்டுகள் இடப்பட்டன.




1) தாக்கவீதம் எனப்படுவது யாது?
2) தாக்கவீதத்தில் செல்வாக்குச் செலுத்தும் எக் காரணியை நிரோதிக்க இச்செயற்பாடு மேற்கொள்ளப்பட்டது?
3) நீர் கூறிய காரணி தவிர்ந்த தாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் மேலும் இரு காரணிகளைத் தருக.
4) ஐதான HCl உடன் Mg காட்டும் தாக்கத்தை சமன்படுத்திய இரசாயனச் சமன்பாடு மூலம் காட்டுக.
5) குளிர்நீரில் தாக்கமடையக்கூடிய உலோகங்கள் இரண்டு தருக.
6) குழாய் B இல் Mg துண்டினை இட்டு சிறிது நேரத்தில் அக்குழாயினை வெப்பமேற்றினால் ஏற்படும் மாற்றங்கள் 2 தருக.

04. இலத்திரனியல் தொழில்நுட்பம் மனித செயற்பாடுகளை இலகுவாக்கினாலும், அதனால் பல சூழற் பிரச்சினைகள் தோன்றியுள்ளன.
1) இலத்திரனியல் சாதனங்கள் இரண்டு தருக.
2) தாக்கப்படலைகளால் ஆக்கப்பட்ட வலைவேலைப்பாடு ஒன்று தரப்பட்டுள்ளது.





1. K, L, M ஆகிய படலைகளின் பெயர்களைத் தருக.
2. தரப்பட்டுள்ள உண்மை அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| A | B | C | D |
|---|---|---|---|
| 1 | 1 | 1 | |
| 1 | 1 | 0 | |
| 1 | 0 | 1 | |
| 1 | 0 | 0 | |
| 0 | 1 | 1 | |
| 0 | 1 | 0 | |
| 0 | 0 | 1 | |
| 0 | 0 | 0 | |

3. இப்படலைகளை அதிகளவில் கொண்ட இலத்திரனியல் துணைச்சாதனம் ஒன்றைத் தருக.

3) பின்வரும் குறியீடுகள் குறிக்கப்பட்டுள்ள இலத்திரனியல் துணைச்சாதனங்களின் பெயர்களைத் தருக.





## கட்டுரை வினாக்கள்

(உயிரியல், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பகுதிகள் ஒவ்வொன்றில் இருந்தும் ஒவ்வொரு வினாவைத் தெரிவுசெய்க)

### உயிரியல்

05. மனித உடலானது பல அங்கங்களையும் தொகுதிகளையும் கொண்டு சிக்கல் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இவ்வங்கங்கள், தொகுதிகள் என்பன ஒன்றோடு ஒன்று தொடர்புற்று ஒத்திசைவுடன் இயங்குகின்றன. அங்கங்கள், தொகுதிகளை ஒருங்கிணைப்பதில் நரம்புத்தொகுதி, அகஞ்சுரக்கும் தொகுதி என்பன ஈடுபடுகின்றன.
1) நரம்புத்தொகுதியின் கட்டமைப்பு அலகு எது?
2) நரம்புத்தொகுதியின் இரு பெரும் பிரதான பிரிவுகளும் எவை?
3) மனித மூளையைப் பாதுகாக்கும் மூன்று மூளைச்சருமங்களும் எவை?
4) மூளைச்சரும நோய் எவ்வாறு ஏற்படுகிறது?
5) மூளையத்தின் தொழில்கள் இரண்டு தருக.
6) தெறிவில் எனப்படுவது யாது?
7) பரிவு நரம்புத்தொகுதி மூலம் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் 3 தருக.
8) இயக்கு நரம்புக்கலத்தில் மயலின் கவசம் காணப்படும். மயலின் கவசத்தின் மூலம் நிறைவேற்றப்படும் பணி ஒன்றைக் கூறுக.
9) மாலனின் கையில் தீ சுட்டது. உடனடியாக அவன் கையை இழுத்தான். இங்கு தூண்டல், துலங்கல், வாங்கி, விளைவுகாட்டி என்பவற்றைக் கூறுக.
10) நரம்புகளின் ஊடாக நிகழும் கணத்தாக்கத்தின் வேகம் குறைவதற்கான காரணங்கள் 3 தருக.
11) மனித உடலின் pH பெறுமானம் மாறாது பேணவேண்டியதன் அவசியம் யாது?

06. a)




1) A இலிருந்து J வரையான பகுதிகளைப் பெயரிடுக.
2) குருதிச் சுற்றோட்டத் தொகுதியில் இதயத்தின் மூலம் நிறைவேற்றப்படும் தொழில் என்ன?
3) சுற்றோட்டத் தொகுதியின் மூலம் நிறைவேற்றப்படும்தொழில் என்ன?
4) சுற்றோட்டத் தொகுதியின் மூன்று பிரதான பகுதிகளும்எவை?
5) நாடி, நாளம் என்பவற்றுக்கிடையிலான வேறுபாடுகள் மூன்று தருக.
6) மாரடைப்பு ஏற்படும் விதத்தைச் சுருக்கமாக விளக்குக. இந் நோயைத் தடுக்க மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகளைத் தருக.
7) J, H என்பவற்றில் காணப்படும் குருதிகளுக்கிடையிலான வேறுபாடுகள் 2 தருக.


b) 1) குருதி மூலம் கடத்தப்படும் பதார்த்தங்கள் எவை?
2) குருதியின் பிரதான கூறுகளைத் தருக.
3) பிறபொருள் எதிரியாகத் தொழிற்படும் குருதியின் திண்மக் கலவகையைத் தருக. அதன் இரு பிரதான கலங்களையும் தருக.
4) குருதிப்புரதங்கள் இரண்டு தருக.
5) குருதிப்புற்றுநோய் ஏற்படும் விதத்தை விளக்குக.

### இரசாயனவியல்

07. a) புவிமேற்பரப்பில் பட்டுத்தெறித்து வெளியேறவேண்டிய ஒரு வகை சூரியக் கதிர்கள் வளிமண்டலத்தில் சில வாயுக்களின் கலவையில் உருவான படையால் தடுக்கப்பட்டு மீண்டும் மீண்டும் புவியின் மேற்பரப்புக்கே அனுப்பப்படுகின்றன. இதனால் புவியில் வெப்பநிலை நாளுக்குநாள் அதிகரிக்கின்றது.
1) மேற்படி தோற்றப்பாடு எவ்வாறு அழைக்கப்படுகிறது?
2) புவியை வெப்பமடையச்செய்யும் சூரியக்கதிரின் பெயரைத் தருக.
3) மேலே பந்தியில் கூறப்பட்ட மூடுபடையை உருவாக்கும் வாயுக்கள் 3 தருக.
4) மேற்படி நிகழ்வால் ஏற்படும் விளைவுகள் 2 தருக.

b) வல்கனைசுப்படுத்தப்பட்ட இறப்பரை எரிப்பது சூழலுக்குத் தீங்காகும்.
1) வல்கனைசுப்படுத்தல் எனப்படுவது யாது?
2) வல்கனைசுப்படுத்திய இறப்பரை எரிப்பதால் புவியில் ஏற்படும் நிலையைக் கூறுக.
3) மேற்படி நிலையை ஏற்படுத்தும் மனித செயற்பாடுகள் 2 தருக.
4) ஓசோன் வாயுவின் சூத்திரத்தைத் தருக.
5) ஓசோன்படை பாதிப்படைவதால் ஏற்படும் பாதகமான விளைவுகள் 2 தருக.


08. $CuCl_2$ கரைசலினை மின்பகுப்பதற்காக மேற்படி ஒழுங்கமைப்பு தயார்செய்யப்பட்டது. X, Y என்பன காபன் மின்வாய்கள் ஆகும்.




1) மின்குமிழ் பயன்படுத்தப்பட்டது ஏன்?
2) அனோட், கதோட் என்பவற்றைக் குறிப்பிடுக.
3) மின்பகுபொருளில் காணப்படும் அயன்களைத் தருக.
4) அனோட், கதோட் என்பவற்றில் நிகழும் தாக்கங்களுக்கான அயன் சமன்பாடுகளைத் தருக.
5) அனோட்டில் ஏற்படும் அவதானம் என்ன? இவ் அவதானத்தைவிரைவாகப் பெற மேற்படி ஒழுங்கமைப்பில் என்ன மாற்றத்தை ஏற்படுத்தலாம்?
6) அனோட்டுக்கு அண்மையில் ஈரமான நீல, சிவப்பு பாசிச்சாயத்தாள்களைப் பிடிக்கும்போது நிகழும் மாற்றம் என்ன?
7) மின்முலாமிடல் என்றால் என்ன?
8) மின்முலாமிடல் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 2 தருக.
9) அனோட்டு, கதோட்டு என்பவற்றால் கருதப்படுவது யாது?

### பௌதிகவியல்

09. a)





200g திணிவுடைய பந்து நியூட்டன் தராசில் கட்டித் தொங்கவிடப்பட்டு வளியில் நிறுக்கப்பட்டது. பின்னர் பந்து நீர் நிரப்பப்பட்ட பாத்திரம் A இல் வைத்து நிறுக்கப்பட்டது. பின்னர் பந்தை நீரினுள் இட்டபோது அது நீரின் அடிக்குச் சென்றது.
1) பந்தின் நிறை யாது?
2) பந்தை நீரினுள் இடும்போது ஏற்படும் அவதானங்கள் 2 தருக.
3) பந்தை நீரினுள் வைத்து நிறுக்கும்போது தராசின் வாசிப்புக்கு யாது நிகழும்?
4) மேற்படி 3 இல் கூறிய அவதானத்திற்கு என்ன காரணம்?
5) பந்தின் கனவளவு $50cm^3$ எனில், நீர் மேலே 4 இல் கூறிய காரணத்தின் பருமன் யாது?

b) அருகில் நீரமானி ஒன்றின் படம் தரப்பட்டுள்ளது.



1) இங்கு மிகக்குறைந்த பெறுமானம் குறிப்பிடப்பட்டுள்ள புள்ளியைக் கூறுக. அதற்கான காரணம் என்ன?
2) சாதாரண நீரமானி மூலம் இரசத்தின் அடர்த்தியை அளவிட முடியாது. காரணம் என்ன?
3) இறப்பர்ப்பாலின் அடர்த்தியை அளக்கும் உபகரணம் யாது?
4) நீரில் இடும்போது நீரமானியின் வாசிப்பு எவ்வளவாக இருக்கும்?
5) நீரில் சிறிதளவு சீனியை இட்டு கரைக்கும்போது மேலே 4 இல் கூறிய விடைக்கு யாது நிகழும்?

10. A, B, C, D, E, F ஆகிய குண்டுகள் வெவ்வேறு நீளம்கொண்ட நூல்கள் மூலம் XY கயிற்றின் மீது வெவ்வேறு இடங்களில் தொங்கவிடப்பட்டுள்ளன.




1) குண்டு A ஐ சற்று இழுத்துவிட்டு சிறிது நேரத்தில் ஏற்படும் மாற்றம் என்ன? அதற்கான காரணத்தைத் தருக.
2) குண்டு D ஐத் தன்னிச்சையாக அசையவைக்க எந்தக் குண்டை இழுத்துவிடவேண்டும்?
3) அணியில் சென்ற இராணுவ வீரர்கள் பாலத்தின் மீது சாதாரண மாக நடந்துசென்றனர். அவர்கள் பாலத்தின் மீது அணிநடையைத் தவிர்த்ததன் காரணத்தை விஞ்ஞான ரீதியாக விளக்குக.
4) ஊசல்குண்டு C ஆனது நிமிடத்தில் 120 அலைவுகளை நிகழ்த்தியது. இவ்வூசலின் மீடிறன் என்ன? அலைவுகாலம் என்ன?
5) விமானம் ஒன்று வெடித்துச் சிதறுவதை அவதானித்த தரையில் ஒருவருக்கு விமானத்தின் வெடியோசை 2 செக்கன்களில் கேட்டது. விமானம் தரையில் இருந்து எவ்வளவு உயரத்தில் வெடித்திருக்கும்?
6) 512Hz மீடிறன் கொண்ட இசைக்கவை ஒலிக்கும்போது ஏற்படும் அலையின் அலைநீளம் யாது? இங்கு பிறப்பிக்கப்பட்ட அலையின் இயல்புகள் இரண்டு தருக.


(முற்றும்)

## கணிதம் I (பகுதி B) விடைகள் (22.10.2010)

01 1) 1-800 பங்குகள், 2-ரூபா 8,000 3-1,120, 4-9.3%
2) 1-ரூபா 1,230, 2- ரூபா 13,230

02. 1) சரிவகம். 2) 7m 3) 96m
4) $341m^2$ 5) ரூ. 17,050

03. 1) 1.
2-10
3-35
4-6
2) 1-5/8, 2-3/8




04. 1) 1,500 ரூபா. 2) 270 ரூபா.
3) 1-ரூபா 6,000, 2-ரூபா 480

05. 1) 1-சரியாக வரையப்பட்ட வலையுரு வரையம்.
2-சரியாக வரையப்பட்ட மீடிறன் பல்கோணி
2) 1-50, 2-19, 3-75, 4-56 3) இடை = 39 (முற்றும்)

கணித பாட வினாத்தாள் நாளைய தினம் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆடைத் தொழிலில் பிராண்டிக்ஸ் நிறுவனத்துக்கு உலக அந்தஸ்து



அஷ்ரப் ஓமர் உரையாற்றுகிறார்

இலங்கையின் பிராண்டிக்ஸ் (Brandix) ஆடை உற்பத்தி நிறுவனத்துக்கு உலக அந்தஸ்து வழங்கப்பட்டதாகக் கரு தக் கூடிய சம்பவம் ஒன்று சமீபத்தில் நடந்தது.

புடைவைக் கல்லூரியின் நூறாவது உலகளாவிய ஆண்டுக் கூட்டம் இங்கிலாந்தின் மன் செஸ்டர் நகரில் நடைபெற்றது.

அந்த மிக முக்கியமான கூட்டத்தில் முக்கிய உரை நிகழ்த்துவதற்கு பிராண்டிக்ஸ் ஆடைத் தொழில் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஷ்ரப் ஓமர் அழைக்கப்பட்டிருந்தார்.

''புடைவைத் தொழிலுக்கும் ஆடைகளுக்கும் காலணிகளுக்கும் உலகளாவிய புதிய நோக்கு'' என்ற தொனிப் பொருளில் ஆண்டுக் கூட்டம் நடந்தது.

ஓமார் உரையில் 'உலக அரங்கில் உற்பத்தி' என்ற தலைப்பில் தமது முக்கிய உரையை நிகழ்த்தினார்.




''மோட்டார், கணினி, காலணி முதலான தொழில்களில்சிறப்பானவையும் அசாதாரணமானவையுமான பொருள்கள் நுகர்வோருக்கு கூடுதல் விலைகளில் வழங்கப்படுகின்றன. புடைவைத் தொழில், குறிப்பாக ஆடைத் தொழில் எதிர்த் திசையில் செல்கிறது. மாற்றமில்லாத ஒரே பொருள் உயர்ந்த விலைக்கு விற்கப்படுகிறது என்று அஷ்ரப் ஓமர் தமது உரையில் சுட்டிக்காட்டினார்.

மோட்டார், டெலிபோன், டெலிவிஷன் தொழில்கள் விமான சேவை - இவையெல்லாம் கைதேர்ந்தவர்களால் முழு வீச்சில் நடத்தப்படுகின்றன. புடைவைக் கல்லூரி 100 ஆண்டுகளைக் கடந்துவிட்டது. எனினும் புடைவைத் தொழில் இன்னும் ஆரம்பக்கட்டத்திலேயே உள்ளது. ஆடைத் தொழிலில் பெரும் எண்ணிக்கையில் சிறிய விநியோகஸ்தர்களே இருக்கிறார்கள். அவர்களால் அதிசிறப்பான வற்றை நுகர்வோருக்கு வழங்க முடியாமல் இருக்கிறது என்றும் அஷ்ரப் ஓமர் தெரிவித்தார்.

# வரலாற்று தகவல்களுக்கு உலக டிஜிட்டல் மின் நூலகம்

வரலாற்று தகவல்களைப் பற்றி மேலும் விரிவாக அறிந்து கொள்வதற்கு வசதியாக உலக டிஜிட்டல் மின் நூலகம் உள்ளது. காலத்தால் என்றும் அழியாத பொக்கிஷங்களான வரலாற்று தகவல்கள் பாதுகாப்பான முறையில் சேமித்து வைத்திருந்து வழங்கப்படுகின்றன. தேவைப்படும் போது பயன்படுத்திக் கொள்ளலாம்.

லட்சத்திற்கும் மேற் பட்ட வரலாற்றுப் புத்தகங் களை ஒன்லைன் மூலம் படிக்கலாம். அதற்கு வழி செய்கிறது உலக டிஜிட்டல் மின் நூலகம். அதற்கான இணையத்தள முகவரி: http:www.wdl.org ஆகும்.

இந்தத் தளத்திற்கு செல்வதன் மூலம் எந்த நாட்டின் வரலாற்று தகவல்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமோ அவற்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அடுத்துவரும் திரையில் அந்த நாட்டைப்பற்றிய அனைத்து வரலாற்று புத்தகங்களும் வரும். இவற்றில் பிடித்த புத்தகங்களை எளிதாகத் தேடிப் படித்துப் பயன்பெறலாம்.



செலிங்கோ ஆயுட் பகுதியின் நெல்லியடிக் கிளையின் வாடிக்கையாளராக அழகேஸ்வரசாமி-தேவச்சந்திரன் என்பவரது மரணத்தின் பின்னரான இழப்பீட்டுத் தொகையாகிய 3 லட்சத்து 12 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையினை பிராந்திய அபிவிருத்தி முகாமையாளர் சி.நிறேஞ்ஜன், தி.யோகேந்திரன் என்பவரிடம் கையளிக்கிறார். அருகில் கிளை முகாமையாளர் வி.பாஸ்கரன், விற்பனை நிறைவேற்று அதிகாரியான எஸ்.சுயந்தன், விற்பனை ஆலோ சகராகிய ஆர்.யோகராஜா ஆகியோர் உள்ளனர். (த)

# 'நிவாஸி' வீடுகளை நிர்மாணிப்பதோடு நம்பிக்கையுடன் அரவணைக்கிறது

வீடமைப்பில் முன்னோடிகளான 'நிவாஸி டிவலப்பேர்ஸ்' இவ்வாண்டு 10 வருடச் சிறப்பு சேவையை கொண்டாடுகிறது. ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக செய்மதி நகரமான நிவாஸிபுர உள்ளடங்கலான வெற்றிகரமான பல முன்னோடித் திட்டங்களைக் கம்பனி முன்னெடுத்துள்ளது. த நெஸற், ட்ரங்கயில் கிறசென்ற், ஹில் கிரஸ்ட் எஸ்ரேற் மற்றும் இப்பொழுது கண்டியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் விக்டோறியா றேஞ்ச் பங்களோஸ் ஆகிய வீட்டுத் திட்டங்களும் இதனுள் அடங்கும். நிவாஸி கம்பனி தனது வாடிக்கையாளர்களுக்கு உயிரின இயல்பு வாழ்க்கைக்கு அமைவான வீடமைப்பு வழங்க முடிந்தது டன் புத்தாக்கத் தீர்வு முயற்சிகளூடாக வாடிக்கையாளர் சாந்தமும் அமைதியும் நிலவும். முற்றிலும் உயிரினச் சூழல் நட்புறவு நிரம்பிய சூழலை உருவாக்கி வழங்கியுள்ளது. நிவாஸியினால் உருவாக்கப்பட்ட புதுமைத் தீர்வுகளுக்கு மேலாக, நிவாஸி வீட்டுத்திட்டங்களின் தீர்மானிப்புக்களை ஏற்றிருந்த International Construction Consortium (Pvt) Ltd. (ஜீ.சீ.சீ) புதிய தொழில்நுட்பங்களையும், முன்னரே வார்த்து உருவாக்கப்பட்ட கொங்கீறீட் பாகங்களை அறிமுகம் செய்தது. நிவாஸி கம்பனி ஐ.சீ.சீ கம்பனியின் முழு உரிமை கொண்ட துணைக் கம்பனியாகும். ஐ.சீ.சீ 30 ஆண்டுகளாக இத்துறையில் சேவையாற்றி வருவதுடன் இலங்கையின் அபிவிருத்திக்கு அதன் பங்களிப்பு பாரியது. ஐ.சீ.சீ.யினது உறுதிப்பாடான நிலையும் வழிகாட்டியாக செயற்படும் திறனும், நிவாஸி நிறுவனத்தை அதன் போட்டியாளர்கள் மத்தியில் உறுதியும் நிலைப்பாட்டுடனும் தொடர்ச்சி நிலையை பேணவும் வைத்திருக்கிறது.

பத்தாண்டு நிறைவு கொண்டாட்டங்களைத் தொடங்கிவைக்கும் நிகழ்வாக நிவாஸி கம்பனி ஒரு இரத்ததான நிகழ்வொன்றினை ஒக்ரோபர் மாதம் அதன் சிறப்பு நிலைக் கம்பனியான நிவாஸிபுரவில் நடத்தியது. ஒரு இடை நிகழ்வு என்னும் படியாக, 2005இல் நிவாஸிபுர முற்றுப்பெற்றிருந்தா லும் அதன் அன்றாடைய பராமரிப்புப் பணிகள் இன்றும் அதன் வசமே விடப்பட்டுள்ளது. இது தொடர்பில் கண்டி விக்டோறியா றேஞ் பங்களாவில் அக் கிராம கோவிலினது பங்களிப்புடனும் கிராமவாசிகளின் பங்கேற்புடனும் ஒரு 'பிரித்' ஓதும் நிகழ்வும் நடத்தப்பட்டது. இக் கொண்டாட்டங்களின் ஒரு அம்சமாக நிவாஸி கம்பனி கண்டியிலுள்ள விக்டோறியா றேஞ்ச் Readymade பங்களாக்களை ஒரு சிறப்புத் தள்ளுபடியுடன் கையளிக்க முன்வந்துள்ளது. இந்த வாய்ப்பானது மலைநாட்டின் தலைநகரில் ஒரு ஆடம்பர பங்களாவினை ஒருவர் கொள்வனவு செய்வதற்குக் கிடைத்துள்ள ஒரு அரிய வாய்ப்பேயாகும்.

நிவாஸிபுர வீடமைப்புத் திட்டம் நாட்டு மக்களுக்கு குடியிருப்புகளை நியாயமான விலைகளில் வழங்குவதற்கு அரசாங்கம் முன்னெடுக்கும் முயற்சிகளில் ஒத்துழைப்பு வழங்குவதற்கென 2000ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒன்று. இன்றும் கூட இலங்கை அரசு பொதுமக்களைத் தத்தமக்கென வீடுகளை தாமே அமைத்துக் கொள்வதற்கு ஊக்கமளித்து வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளில் 1500க்கும் மேற்பட்ட குடியிருப்புகளை நிவாஸி கையளித்திருக்கிறது. இதனால் சுமார் 7500 பேர் குடியிருப்பு வசதிகளைப் பெற்றிருக்கின்றனர். தம்மிடம் தொடர்ச்சியான வாடிக்கையாளர்கள் பெருநம்பிக்கை கொண்டு மீண்டும் வீடுகளை கொள்வனவு செய்ய முன்வந்திருப்பது பற்றி நிவாஸி பெருமை கொள்கிறது. மேலும் நிவாஸி வீடமைப்புத் திட்டத்தின் தன்னிகரற்ற ஒரு சேவையாதெனில் அதன் விற்பனைக்குப் பிந்திய சேவையாகும். குடியிருப்பாளர்களிடம் ஒரு நியாயமான தொகையை அறவிட்டு இச்சேவையை நிவாஸி நிறைவேற்றுகிறது.

நிவாஸியின் எதிர்காலத் திட்டங்களாக கொழும்பு, அதன் புறநகர்ப் பகுதிகளான ஹோமாகம, இரத்மலானை, ஜா - எல ஆகியவற்றில் வீட்டுத் திட்டங்கள் அமையவுள்ளன.

புத்தாக்கத் தீர்வுகளை முன்வைத்து, வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தித் துறையில் அயராது உழைத்து வரும், நிவாஸி டிவலப்பர்ஸ் கம்பனி புதிய பாணியிலான திட்டங்களை முன்னெடுப்பதன் மூலம் இத்துறையின் முதன்மை நிலையை அடையும் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ளது. (த)

# உயர்கல்வி வாய்ப்பை வழங்கும் FLEX

* உங்களுடைய படிப்புத்தான் உங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும்.
* உங்களுடைய படிப்புத்தான் உங்கள் முன்னேற்றத்தைக் கொடுக்கும்.
* உங்களுடைய படிப்புத்தான் உங்களைச் சமுதாயத்தில் சிறந்தவராக ஆக்கும்.
* ஆக படிப்பு என்பது ஒருவரது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான அரிய சந்தர்ப்பம்.

வெள்ளவத்தையில் கடந்த ஐந்து வருடகாலம் FLEX GRAPHIC விளம் பர நிறுவனத்தையும் FLEX INSTITUTE கல்வி நிலையத்தோடு FLEX TRAVELS என்ற வெளிநாட்டுப் பயண முகவர் நிலையத்தையும் வெற்றிகரமாக நடத்தி வரும் FLEX INSTITUTE கல்வி நிலையம் மக்கள் மத்தியில் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் வென்றுள்ளது. அவர்கள் யாழ்.நகரிலும் உயர் கல்வி கற்கும் மாணவர்களுக்குத் தமது சேவையை நடத்தத்திட்டமிட்டுள்ளார்கள்.

வெள்ளவத்தை இலக்கம் 04, IBC வீதியில் அமைந்துள்ள Flex Institute அண்மைக்காலமாக Kids Computer,

flex Institute
Step Towards a Bright Future

Ms Office, Package Graphic Designing, Web Designing, Accounting என சகல வயதினருக்கும் பயன்படும் கணனிக் கற்கை நெறிகளை ஆரம்பித்து நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

முற்று முழுதாக 4 வயது முதல் 14 வயது வரையிலான குழந்தைகளுக்கு கணினிப் பயிற்சியை உன்னதமான வழிகாட்டல்களுடன் வழங்கி வருகின்ற Kids Computer School, Flex இன் வளர்ச்சிப் பதையில் மற்றுமொரு படிக்கல்லாகும். சிறார்களின் கணனி அறிவை வளர்க்கும் முகமாக இளம் பராயத்திலேயே அவர்கள் ஆற்றல்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்கின்றது Kids Computer School. தனித்துவமான வசதிகள், பாடநெறிகள், கவனிப்பு, வழிகாட்டல்கள், வசதியான பயிற்சிக் கட்டணங்கள், அன்புடன் பயிற்றுவிக்கும் அனுபவம் வாய்ந்த பெண் விரிவுரையாளர்கள் என்பவற்றை தன்னகத்தே கொண்ட மிகக் குறுகிய காலத்தினுள் குழந்தைகளால் கவரப்பட்ட Kids Computer School இதுவென்றால் மிகையல்ல.

பலதரப்பட்ட துறையிலும் பயன்படும் Accounting Packages (Tally, OB, Acc, Pac, M.Y.O.B), Ms Office (Ms Word, Ms Excel, Ms Access.Power point) Internet & Email, Web Designing (HTML, Dream, Weaver, Flash, Photpshop). ஆகிய கணினிக்கற்கைப் பயிற்சி வகுப்புக்கள் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு மாணவரது பயிற்சியிலும் தனியான கவனம் செலுத்தப்பட்டு கற்கை நெறிகள் மேற்கொள்ளப்படுகின்றன. முற்று முழுதாக FLEX விளம்பர நிறுவனத்தினால் பாடசாலையை விட்டு விலகியோர், இளையோர், வயது வந்தோர் யாவருக்கும் Graphic Designing கலையை பயிற்றுவிக்கும் முகமாக ஆரம்பிக்கப்பட்ட மேற்படி உப நிறுவனம் அதன் வளர்ச்சிப் படிகளில் பிரமிக்கக் கூடிய சாதனைகளை நிலை நாட்டி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச நாடுகளிற்கான விமான பயணச் சீட்டுக்களை உங்கள் வீட்டில் இருந்தவாறே முற் பதிவுகளை மேற்கொள்ளலாம்.



மேலதிகத் தொடர்புகளுக்கு:
**Metro Travels & Tours (Pvt) Ltd.**
62/33, Stanley Link Road, Jaffna.
Tel: 021 5673555 / 021 5673666
Fax: 0212220404
e-mail : info@metrotravels.lk


# கூட்டம்

நவாலி, நவ.18

மானிப்பாய் பலநோக்குகூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுச் சபைக் கூட்டம் எதிர்வரும் 21ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10மணிக்கு சங்கத் தலைவர் க. செல்வராசா தலைமையில் சங்க மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (204-100)

# கண்காட்சி

புன்னாலைக்கட்டுவன் மகா வித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி நாளை வெள்ளிக்கிழமை மு.ப. 9.30 மணியளவில் ஆரம்பமாகவுள்ளது.

பாடசாலை அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், உடுவில் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் பிரதம விருந்தினராகவும் ஈவினை அ.த.க. பாடசாலை அதிபர் செ.பரமேஸ்வரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (எ)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



16.11.2010 அன்று நடைபெற்ற யாழ். இந்துக் கல்லூரிக்கும், யாழ்ப்பாண மத்திய கல்லூரிக்கும் இடையிலான 13 வயதுக் கிரிக்கெட் போட்டியில் 10 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி மாபெரும் சாதனை படைத்த

**வெற்றிவேல் நிசோதன்**

அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*அம்மன் வீதி,*
*திருநெல்வேலி கிழக்கு,*
*திருநெல்வேலி.*

வாழ்த்துவோர்: பெரியத்தை குடும்பம்,
சின்னத்தை குடும்பம்,
நோர்வே அத்தை குடும்பம்.


# யாழ் நகரில்



**IELTS** இன்றி
**Spot Admissions**
மூலம் **UK** இல்
உயர் கல்வி

**West End College London**

இடம் : Green Grass Hotel & Restaurant | 33, Aseervatham Lane, Hospital Road, Jaffna.
திகதி : 20th November 2010
நேரம் : காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணிவரை

Spot Admission by the College Representatives
Ms. Hannah Bilcliffe & Ms. Marie Lovett

VISA பெற்றுக்கொள்ளும் முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.
எமது சேவை முற்றிலும் இலவசம்

For appointment please contact :
0777-761346
4, IBC Road, Wellawatte, Colombo 6.
E-mail: flexinstitute@sltnet.lk
Web: www.flexinstitute.lk

flex Institute
Step Towards a Bright Future
(A Subsidiary of Flex Graphic)
FLEX Graphic



# வாடகைக்கு

கோண்டாவில் சந்திக்கு அண்மையாக 2200 சதுர அடி கொண்ட புதிதாக அமைக்கப்பட்டதும் போதிய வாகனத்தரிப்பிடம் கொண்டதுமான இடப் பரப்புடன் வாடகைக்கு விடப்பட தயாராக உள்ளது. நிறுவனங்கள் காரியாலயங்கள் விரும்பத்தக்கது.

தொடர்பு: 0776176899, 021 4590122



# விற்பனைக்கு



**DELL**
**Ultra SharpLCD Monitor 17"**
கிராபிக்ஸ் வடிவமைப்பு, மற்றும் சிறந்த நிறமாற்றங்களை சிறப்பாக செய்வதற்கு உகந்தது
**4 USB PORTS**
**DVI-D Port**



Nikon D40,D60,D80,D90,D300,D3000
போன்ற வகை கமராவகைகளுக்கு பயன்படுத்தக்கூடிய
SD Memory Card Original Japan 4GB
**Sony A200,Nikon D90**
விற்பனைக்கு உண்டு
. Nikon Camera Bag
. Energizer charger
. PSD Back Round CD
. DVD Back Round CD
IEEE 1394(AKA Firewire, i-Link)
6-pin 4-pin
**DV Cable**
6-pin to 6-pin
4-pin to 4-pin
TP .0754985860


# அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1243 நீலம்

வெற்றி இலக்கங்கள்

சிங்கம் 15 30 37 38 16-11-2010

ஜக்பொட் பரிசு ரூபா. 4,025,750/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 236,791 | 20/- | 4,735,820/- |
| 2 இலக்கங்கள் | 21,739 | 40/- | 869,560/- |
| 1 இல. + லக்கினம் | 21,491 | 60/- | 1,289,460/- |
| 2 இல. + லக்கினம் | 1,967 | 200/- | 393,400/- |
| 3 இலக்கங்கள் | 565 | 1000/- | 565,000/- |
| 3 இல. + லக்கினம் | 59 | 10,000/- | 590,000/- |
| 4 இலக்கங்கள் | 03 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 4,025,750/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 9,043,240/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 630 | | 613,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 283,245 | | 9,656,740/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 5,083,050/-

## இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

கும்பம் 02 49 50 52

ஜக்பொட் பரிசு ரூபா. 400,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 627 | 500/- | 313,500/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 400,000/- | - |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 630 | | 613,500/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 500,000/-


# நாளை

ஓர் புதிய உதயம்..!



**புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு**

நிகழும் மங்கலகரமான விகிர்தி வருடம் கார்த்திகை மாதம் 3 ஆம் நாள் நாளை (19.11.2010) வெள்ளிக்கிழமை காலை 8.21 மணி தொடக்கம் 9.32 மணிவரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும் மகரலக்கினமும் அமிர்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள

**சரவணா** ரெக்ஸ் Saravana Texs

இன் இரண்டாவது கிளையை இல.770, 772, காங்கேசன்துறை வீதி (தட்டாதெருச் சந்திக்கு அருகில்) ஆரம்பித்து வைக்க உள்ளோம். அத்தருணம் வாடிக்கையாளர் வருகைதந்து விழாவைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*இல.770, 772 காங்கேசன்துறை வீதி,*
*(தட்டாதெரு சந்திக்கு அருகில்) யாழ்ப்பாணம்.*
T.P. 021 222 0421

தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்:
*உரிமையாளர், ஊழியர்கள்.*



# கிளிநொச்சிக் கிளைக்கான பதவி வெற்றிடம்

வாழ்க்கையில் வெற்றிபெற்ற எங்களுடன் இணையுங்கள்



காப்புறுதித் துறையில் ஆசியாவில் முன்னிலை வகிக்கும் பிரபல காப்புறுதி நிறுவனத்தின் கிளிநொச்சி கிளைக்கான பதவி வெற்றிடங்கள்

01. விற்பனை ஆலோசகர் (Sales Consultant)
02. ஆயுள் காப்புறுதி நிதி ஆலோசகர் (Life Insurance Advisor)
03. குழுத் தலைவர் (Group Leader)
04. விற்பனை நிறைவேற்று அலுவலர் (Sales Executive)



அடிப்படைத் தகைமைகள்
01. க.பொ.த சாதாரண தரத்தில் கணிதம் உள்ளடங்கலாக 6 பாடங்கள் சித்தி
02. வயது எல்லை: 18 வயதிலிருந்து 45 வயதுவரை (ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்)
03. மேலதிக தகைமைகள் விரும்பத்தக்கது

நேர்முகத் தேர்வு : 20.11.2010 சனிக்கிழமை
நேரம் : 9 மணி முதல் 1 மணிவரை
இடம் : கிளிநொச்சி மகா வித்தியாலயம்

(சி-523021)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்ரோறியா மாதா இறும்பூதெய்துகிறாள்

2010 தமிழ் மொழித்திறன் பிரிவு 5 தனி நடனம் நிகழ்ச்சியில் தேசிய மட்டத்தில் முதலாமிடம் பெற்ற மாணவி செல்வி லாவண்யா சயந்தன் அவர்களினதும், நெறிப்படுத்திய ஆசிரியர்களினதும் சாதனைகளையிட்டு கல்லூரிமாதா இறும்பூதெய்துகிறாள்.



திருமதி சி.கண்ணதாசன் | செல்வி ச.லாவண்யா. | திருமதி ப.முகுந்தன்.

நீண்ட கலையின் நெடும் பயணத்தில்
விக்ரோறியாத் தாயின் பிரசவத்தில்
நர்த்தனத்தின் வித்தகியாம் லாவண்யாவை
சான்றோனாக்கி முந்தியிருப்பச் செய்த
ஆசான்கள் அனைவருக்கும்
சங்கமமாய்க் கூடி
வாழ்த்துக்கள் பாராட்டுக்கள்.

கல்லூரிச் சமூகம்.
யா/ விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.

(சி/573013)

## அமைச்சரவை மறுசீரமைப்பு தாமதத்துக்கு அரசின் உட்பூசல்களே காரணமாம்

கொழும்பு,நவ.18

நவம்பர் மாதத்தில் மேற் கொள்ளப்படவிருந்த அமைச் சரவை மறுசீரமைப்பை எதிர்வரும் ஜனவரி பின்தள்ள வேண்டிய நிலை ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள் ளமைக்கு அரசின் உள்ளே தீவி ரம் பெற்று வரும் ஏராளமான பிரச்சினைகளே காரணம் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலருக்கு அமைச் சர் பதவிகள் கிட்டாது போவ தும், ஐக்கிய தேசியக் கட்சியிலி ருந்து அரசில் இணைந்து கொண் டுள்ள தரப்பினருக்குச் சிறப்பான அமைச்சர் பதவிகளும் அமைச் சுக்களும் கிட்டியிருப்பதுவுமே இந்த உட்பூசலுக்கு முக்கிய மான காரணம் எனவும் பேசப் படுகின்றது.

இதேவேளை எதிர்வரும் அமைச்சரவை மறுசீரமைப்பின் போது, 18ஆவது அரசமைப்புத் திருத்தம் காரணமாக அரசுடன் இணைந்து கொண்ட ஐ.தே.கட்சி எம்.பிக்கள், மன்ற உறுப்பினர் சிலருக்குத் தம் வசமுள்ள அமைச் சரவை அமைச்சர் பதவிகளை, பிரதியமைச்சர் பதவிகளைக் கையளிக்க ஜனாதிபதி மேற் கொண்டுள்ள தீர்மானம் சுதந் திரக் கட்சியின் மூத்த உறுப்பினர் களின் மத்தியில் கொதிப்பை ஏற்படுத்தியுள்ளதாகவும் கூறப் படுகின்றது. இந் தக் காரணங்களா லேயே தமது இரண்டாவது பதவியேற்பையடுத்து மேற்கொள்ள ஒழுங்கு செய்யப்பட்டிருந்த அமைச்ச ரவ மறுசீரமைப்பை ஜனவரி மாதம் வரையில் ஜனாதிபதி ஒத்திவைத் திருப்பதாக அறிய முடிகின்றது. (ஓ - 22)

## பெண்களுக்கு வேலைவாய்ப்பு

மானிப்பாயில் இயங்கும் உற்பத்தி நிறுவனம் ஒன்றுக்கு பெண்வேலையாள்கள் தேவை.

தொடர்பு : 021 5100717

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி, பலாலி வீதிக்குச் சமீபமாக சந்திக்கு அருகாமையிலுள்ள 4 அறைகள், ஹோல், குளியல் அறை மற்றும் சகல வசதிகளும் உள்ள வீடு வாடகைக்கு விடப்படும். நிறுவனங்கள் விரும்பத்தக்கது

தொடர்பு
077-9695818, 021-222 3086

## ஆயிரம் பாடசாலைகள் அபிவிருத்தி; மேலும் இரு பாடசாலைகள் இணைப்பு

தென்மராட்சி, நவ. 18

ஆயிரம் பாடசாலைகளைத் தரம் உயர்த்தும் திட்டத் தின் கீழ் தென்ம ராட்சி கல்வி வலயத்தில் மேலும் இரு பாட சாலைகள் இணைக்கப்பட்டுள் ளன என்று அறி விக்கப்பட்டுள் ளது.

மீசாலை வீர சிங்கம் மகா வித் தியாலயம், கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியால யம் ஆகியவையே புதிதாக இத் திட் டத்தில் இணைக் கப்பட்டவை யாகும்.

இத் திட்டத் தில் ஏற்கனவே ஐந்து பாடசாலை கள் தெரிவு செய் யப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக் கது.

(201-207)

## மனமுவந்து பாராட்டுகின்றோம்



குலசிங்கம் பூர்ணிமா
159 புள்ளிகள்



தவத்துரை கோபிகன்
151 புள்ளிகள்



நேசறூபன் கேனுஜன்
143 புள்ளிகள்



சிவராசா கானுஷன்
141 புள்ளிகள்

2010 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களையும் 100 இற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்ற மாணவர்களையும் கல்வியில் மேன்மேலும் உயர்வுகள் பெற இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம். இம் மாணவர்களை நெறிப்படுத்திய அதிபர், ஆசிரியர்களையும் பாராட்டி மகிழ்வுறுகின்றோம்.

*பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,*
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



16.10.2010 பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் உயர் தேசிய முகாமைத்துவ டிப்ளோமா (HNDM) என்னும் பட்டம் பெற்ற

திருமதி நாதவர்ஷனி சிறீகரசர்மா

அவர்களை வாழ்த்தி இவர் மேலும் பல பட்டங்கள் பெற நயினை அம்மனை வேண்டுகின்றோம்.

வாழ்த்துவோர்: திரு.திருமதி வாமதேவக் குருக்கள்,
திரு.திருமதி சிவகுமாரக் குருக்கள்,
கல்வியங்காடு. திரு.திருமதி ஜீவானந்தக் குருக்கள், திரு.திருமதி பிரகதீஸ்வரசர்மா

(106123)

## 1ஆவது பிறந்த நாள் வாழ்த்துக்கள்




செந்தூரன் - கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வி ஜதுஷா தனது முதலாவது பிறந்த நாளை 18.11.2010 வியாழக்கிழமை கனடாவில் உள்ள அவரது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவளை அப்பா, அம்மா, அம்மப்பா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், அண்ணாமார், அக்காமார், மாமாமார், மாமிமார், சித்திமார் மற்றும் உற்றார், உறவினர்கள் ஆகியோர் மீனாட்சி அம்மன் அருள்பெற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் வாழ்க என்று வாழ்த்துகின்றனர்.

தகவல்:
ச.யோகநாதன் - அம்மப்பா.
168, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


விளம்பி



*விளம்பரத்திற்கான ஒரு விடை காணல்*



இது உங்களின் வியாபார, வியாபார ரீதியான ஸ்தலத்தை மற்றவர்கள் இலகுவில் அறிந்துகொள்ளும் படியாக **Internet** எனப்படுகின்ற தொழில்நுட்பத்தினூடாகவும் 'விளம்பி'யின் வழிகாட்டி எனப்படுகின்ற எழுத்துருவிலும் விளம்பரப்படுத்தி வியாபாரத்தை முன்னோக்கி எடுத்துச்செல்ல வழிகாட்டி நிற்கிறது.




Mob:0773464739
email: Jana@vilampi.com
Mob: 0777599198
email: thushy@gmail.com




FREE Classified Adds

www.vilampi.com
302, Temple Road, Nallur, Jaffna, SriLanka.
Tel: 021 2220348
Submit your Business Listing Today

*அன்பான வாடிக்கையாளர்களுக்கு*

**இனிய செய்தி.........!**

*யாழ்.நகரின் முன்னணி அச்சகமான*

யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகம்

முற்றிலும் நவீன வசதிகளைக் கொண்ட இயந்திரம் இணைக்கப்பட்டு தங்கள் அச்சக வேலையை

* உச்ச தரத்தில் - நியாய விலையில்
* உரிய நேரத்தில் நிறைவேற்றக் காத்திருக்கின்றது.
* 2011ஆம் ஆண்டு இரகுநாதையரினால் கணிக்கப்பட்ட பஞ்சாங்கத்துடன் கூடிய கூட்டுறவுக் கலண்டர்.
* சகலவிதமான அழைப்பிதழ்கள், வாழ்த்துமடல்கள்
* வர்ணக் கலர்ப்படங்கள், பிரசுரங்கள்
* நினைவு மலர்கள்
* கூட்டுறவு நிறுவனங்களின் படிவங்கள்
* அரச, அரச சார்பற்ற, தனியார் நிறுவனங்களின் படிவங்கள்

என்பனவற்றை சிறந்தமுறையில் அச்சிட்டுப் பெற்றுக்கொள்ள

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை அச்சகம்

93/4 (153/9) நாவலர் வீதி, ஐந்து சந்தி அருகில்,
யாழ்ப்பாணம். தொ.பே. 021 3210031

(சி/573016)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றைய டெஸ்ட் ஆட்டம் மழையால் இடைநிறுத்தம்



காலி,நவ. 18

காலியில் நடந்த டெஸ்ட் போட்டியின் நேற்றைய ஆட்டம் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி, இலங்கைக்கு எதிரான 3 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடிவருகிறது. முதலாவது போட்டி கடந்த திங்களன்று காலியில் ஆரம்பமானது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 580 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்த இலங்கை அணி, நேற்றுமுன்தினம் ஆட்ட நேரம் முடியும்போது ஒரு விக்கெட் இழப்புக்கு.54 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

பரணவிதாரண (10) சங்கக்கார (33) ஆகியோர் களத்தில் இருந்தனர்.

மீண்டும் நேற்றுத் தனது இன்னிங்ஸைத் தொடர்ந்து இலங்கை அணி, பரண விதாரணவை (10) உடனேயே இழந்தது.

அவரைத் தொடர்ந்து சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த சங்கக்கார 73 ஓட்டங்களைச் சேர்த்த நிலையில் ஆட்டமிழந்தார்.

ஆட்டத்தின் இடையிடையே மழை குறுக்கிட்டதால் நேற்றைய ஆட்டம் இடையிலேயே கைவிடப்பட்டது.

அப்போது இலங்கை அணி 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 165 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பாக பந்துவீச்சில், ரோச், ருசேல், பிராவோ ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

நேற்று வரையான கள நிலைவரப்படி இலங்கை அணி, 415 ஓட்டங்களால் பின்னிலையில் உள்ளது. அதேவேளை, 7 விக்கெட்டுகளையும் கைவசம் வைத்துள்ளது.

இன்று ஆட்டத்தின் நான்காம் நாள் ஆகும்.

# கடைசி டெஸ்டில் சஹீர் இல்லை

நியூஸிலாந்துக்கு எதிரான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில், இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான சஹீர்கான் விளையாடமாட்டார் என்று இந்திய அணி நிர்வாகம் அறிவித்துள்ளது.




இவருக்குப் பதிலாக மற்றொரு இடது கை வேகப் பந்து வீச்சாளரான ஜெய்தேவ் உனட்கட் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் நடந்து முடிந்த டெஸ்ட் போட்டியின் 4ஆம் நாள் ஆட்டத்தின்போது சஹீர்கான், 3 ஓவர்கள் மட்டுமே பந்து வீசினார். அதன் பிறகு அவர் பந்து வீசவில்லை.

இதன்காரணமாக நாக்பூரில் நடைபெறவுள்ள அடுத்த டெஸ்ட் போட்டியில் இஷாந்த் ஷர்மா விளையாடுவார் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

### ஆசிய நீச்சல் போட்டியில்

# 24 ஆண்டுகளின் பின்னர் இந்தியாவுக்கு பதக்கம்



குவாங்சு, நவ.18

ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் நீச்சல் போட்டியில் இந்தியாவுக்கு 24 ஆண்டுகளுக்குப் பின்னர் முதல்முறையாகப் பதக்கம் கிடைத்துள்ளது. விர்தவால் காதே இந்தியாவின் நீண்டகாலத் தாகத்தைத் தணித்துள்ளார்.

45 நாடுகளைச் சேர்ந்த சுமார் 10 ஆயிரம் வீரர், வீராங்கனைகள் பங்கேற்றுள்ள 16ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள், சீனாவின் குவாங்சு நகரில் நடந்து வருகின்றன.

போட்டியின் 5ஆவது நாளான நேற்றுமுன்தினம் இந்தியாவுக்கு நீச்சலில் பதக்கம் கிடைத்தது.

நீச்சலில் ஆண்களுக்கான 50 மீற்றர் பட்டர்பிளே இறுதிச் சுற்றில் இந்தியாவின் விர்தவால் காதே, 24.31 வினாடிகளில் இலக்கைக் கடந்து, 3ஆவது இடத்தைப் பிடித்து வெண்கலப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார்.

ஆசிய விளையாட்டில் நீச்சல் போட்டியில் கடந்த 24 ஆண்டுகளின் பின்னர் இந்தியாவுக்குக் கிடைத்த முதலாவது பதக்கம் இதுவாகும்.

இதற்கு முன்பு கடைசியாக 1986ஆம் ஆண்டு ஆசிய விளையாட்டில் இந்திய நீச்சல் வீரரான கஸன்சிங் தோகாஸ் 200 மீற்றர் பட்டர்பிளே பிரிவில் வெள்ளிப் பதக்கம் வென்றிருந்தார்.

இப்பிரிவில் தங்கப்பதக்கம் வென்ற சீனாவின் ஜியாவெயியை விட 0.65 வினாடிகளாலும், வெள்ளிப்பதக்கம் பெற்ற மற்றொரு சீன வீரரான கிஷிடா மசாயுகியை விட 0.18 வினாடிகளாலும், விர்தவால் காதே பின்தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# 10 வினாடிகளுக்கு லட்சம் ரூபா!

துபாய், நவ. 18

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி நடக்கும் நேரங்களில், தொலைக்காட்சியில் விளம்பரம் செய்ய, 10 வினாடிகளுக்கு சுமார் 10 லட்சம் ரூபா விளம்பரக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் தொடங்குகிறது. இந்தியா, பங்களாதேஷ், இலங்கை ஆகிய நாடுகள் இணைந்து இந்தப் போட்டியை நடத்துகின்றன.

மொத்தம் 49 போட்டிகளைக் கொண்ட இத்தொடரை, தொலைக்காட்சியில் ஒளிபரப்புச் செய்யும் உரிமத்தை இ.எஸ்.பி.என். தொலைக்காட்சி பெற்றுள்ளது.

இந்த நிறுவனம் இதுவரை இல்லாத அளவுக்கு மிக அதிக அளவில் வருமானத்தை ஈட்டத் திட்டமிட்டுள்ளது.

சுமார் 1,800 கோடி ரூபா

ICC Cricket World Cup
2011

வரை வருமானத்தைப் பெற வியாபார ஒப்பந்தங்களைச் செய்து வருகிறது. அந்த வகையில், இப்போட்டியை பல முன்னணி நிறுவனங்கள் அனுசரணை ஒப்பந்தம் செய்துள்ளன.

பெப்சி, மாருதி சுசுகி, நொக்கியா, பிலிப்ஸ், சொனி, ரிலையன்ஸ் மொபைல், பியூச்சர், ரிபோக், எமிரேட் ஆகிய நிறுவனங்கள் அனுசரணையாளருக்கான ஒப்பந்தத்தைச் செய்துள்ளன.

இன்னும் பல நிறுவனங்கள் விளம்பரம் செய்ய முயற்சித்து வருகின்றன.

போட்டி நடக்கும் நேரங்களில் 10 வினாடிகளுக்கு சுமார் 10 லட்சம் ரூபா விளம்பரக் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர கேபிள் இணைப்பு மற்றும் டி.டி.எச். இணைப்பு போன்றவற்றை வழங்கவும் தனிக் கட்டணங்களை நிர்ணயிக்கவுள்ளது.

எல்.ஜி. நிறுவனம் மட்டுமே சுமார் 76 கோடி ரூபாவை விளம்பரத்துக்காகச் செலவிடத் திட்டமிட்டுள்ளது. இது எல்.ஜி. நிறுவனத்தின் மொத்த இந்திய விற்பனையில் 10 சதவீதமாகும்.

# எமது வெற்றியை ஹர்பஜன் பறித்துவிட்டார் அடுத்த மோதலில் இந்தியாவை ஒரு கை பார்ப்போம்



ஹைதராபாத், நவ.18

''வெற்றிநோக்கி நகர்ந்துகொண்டிருந்த எம்மை, ஹர்பஜன்சிங் தடுத்து நிறுத்தி வெற்றியைப் பறித்துவிட்டார். எனினும், அடுத்த போட்டியில் இந்தியாவை ஒரு கை பார்ப்போம்.''

- இவ்வாறு நியூஸிலாந்து அணியின் தலைவரான வெற்றோரி கூறியுள்ளார்.

இந்தியா-நியூஸிலாந்து அணிகளுக்கிடையே ஹைதராபாத்தில் நடந்த டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிந்த பின்னர் கருத்துக் கூறும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2ஆவது டெஸ்ட் போட்டியில் எங்களுக்கு வெற்றி வாய்ப்பு இருந்தது. ஆனால், எங்கள் வெற்றியை ஹர்பஜன்சிங் பறித்துவிட்டார்.

இந்திய அணியின் விக்கெட்டுகள் சரிந்து கொண்டிருந்த நிலையில் 8ஆவது விக்கெட்டுக்கு வந்த ஹர்பஜன்சிங், நிலைத்து நின்று ஆடி இந்தியாவுக்கு அதிக ஓட்டங்களைச் சேர்த்துக் கொடுத்துவிட்டார். அதுவும் கடைசி விக்கெட்டான ஸ்ரீசாந்த் நீண்ட நேரம் தாக்குப் பிடித்து நின்று எங்களுக்கு அதிர்ச்சியளித்துவிட்டார்.

முதல் இன்னிங்ஸில் குறைந்த ஓட்டங்களுக்குள் இந்தியாவை மடக்கியிருந்தால் நாங்கள் வெற்றி பெற்றிருப்போம்.

2ஆவது டெஸ்ட்டில் வெற்றியின் முனைவரை சென்றமையால், அடுத்த டெஸ்ட் போட்டியில் நிச்சயம் வெல்வோம் என எதிர்பார்க்கிறோம். இதன் மூலம் டெஸ்ட் தொடரை நாங்கள் கைப்பற்றுவோம்.


எங்கள் அணி வீரர்களான ரைடர், வில்லியம்சன் ஆகியோர் ஏற்கனவே சிறப்பாக ஆடினார்கள். இந்தப் போட்டியில் மக்கலம் சிறப்பாக ஆடியிருக்கிறார்.

எங்களைப் பொறுத்தவரை ஆடுகளம் சிறப்பாக இருந்தது. ஆனால், பந்து வீச்சாளர்களுக்குச் சற்றுச் சிரமத்தை ஏற்படுத்திவிட்டது.

- இவ்வாறு அவர் கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ்

(பணியாளர்- கரித்தாஸ் கியூடெக் நிறுவனம், பழைய மாணவன், மானிப்பாய் இந்துக்கல்லூரி)

புலவர் வீதி, நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜஸ்ரின் றேகன் றெனோல்ட்ஸ் 14.11.2010 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் ஜஸ்ரின் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் ரிச்சாட், றிச்மன், ஜனனி, ஷாளினி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராயப்பு- மேரிறோசலின், சின்னப்பு- செல்வ ராணி ஆகியோரின் அன்பு மருமகனும், தியாகராஜா - ஞானம்மாவின் அன்புப் பெறாமகனும் வத்சலா, ஸ்ரீதரன், முரளிதரன், குமணதரன், பகீரதன் ஆகியோரின் சகோதரனும், றமேஸ், முகேஷ், தினேஸ், திலக், தீபன், சுரேக்கா, நிமலினி, ரியூறின், சுதன் ஆகியோரின் மைத்துனரும் கோஷிகன், பௌசிகன், பிரிந்திக்கா, பரத், அஜன் ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ரிசானி, ஷாரா, ஷரோனி ஆகியோரின் அன்பு மாமாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (18.11.2010) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் நவாலி வடக்கு திருஇருதயநாதர் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டு பின்னர் நவாலி ஆரியம்பிட்டி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

புலவர் வீதி, நவாலி வடக்கு.

தகவல்: குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தாயின் மடியில்
21.04.1915

ஆண்டவன் அடியில்
19.10.2010

## அமரர் அருணாசலம் சோமசுந்தரம்

கடந்த 19.10.2010 செவ்வாய்க்கிழமை இறைபதமடைந்த எமது அன்புத் தந்தையாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.11.2010) வியாழக்கிழமை காலை 8 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எதிர்வரும் 21.11.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் இடம் பெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நல்லூர், துர்க்கா மணிமண்டபத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

** இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

*இல. 365, கோவில் வீதி,*
*நல்லூர், யாழ்ப்பாணம்.* (106145)

பிள்ளைகள், குடும்பத்தினர்,
திருமதி யோகேஸ்வரி பற்குணராசா
(யாழ்.மாநகர முதல்வர்).

## பருத்தித்துறை - மருதங்கேணி வீதி மீளத்திறப்பு

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான பிரதான வீதிகளில் ஒன்றான நாகர் கோயில் ஊடான பருத்தித்துறை - மரு தங்கேணி வீதி எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி முதல் பொதுமக்களின் பாவனைக்கெனத் திறந்துவிடப்படவுள்ளது.

இதேவேளை சோரன்பற்று - மருதங்கேணி வீதியில் அமைந்துள்ள பாலம் திருத்தப்பட்டுவருவதனால், மாற்றுப் பாதையாக இயக்கச்சி - புல்லாவெளி கட்டைக்காடு வீதியை பயன்படுத்துவதற்கான நடவடிக்கையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (எ)

## வலி.தென்மேற்கில் மரநடுகை நிகழ்வுகள்

சண்டிலிப்பாய், நவ.18

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலம் ஆரம்பமாவதையொட்டி நாடு முழுவதும் நடை முறைப்படுத்தப்பட்டு வரும் ''பதினொரு இலட்சம் மரம் நடுகை''த் திட்டத்தின் கீழ் வலி. தென்மேற்குப் பிரதேசத்திலும் பல இடங்களில் மரம் நடும் வைபவம் இடம்பெற்றது.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் தலைமைக் காரியாலயப் பகுதியில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மரத்தை நட்டு வைத்தார். அதைத் தொடர்ந்து மானிப்பாய் வர்த்தக சங்கச் செயலாளர் உட்படப் பலர் மரங்களைநட்டனர்.

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் ஆனைக்கோட்டையிலுள்ள உப அலுவலகத்திலும் நவாலி வடக்கு வளர்மதி சனசமூக நிலைய முன்றிலிலும் மரங்கள் நடப்பட்டன. (ஒ-115)

# மரண அறிவித்தல்கள்

## இராசன் நவரத்தினம்



சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராசன் நவரத்தினம் நேற்று (17.11.2010) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசன் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நற்குணராசம்மா மற்றும் தங்கம்மா, குணரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற யோகாம்பிகையின் அன்புக் கணவரும் கருணாகரன் (லண்டன்), கஜதீபன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2010) வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சிறுப்பிட்டி மேற்கு பத்தகலட்டி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராஜ வீதி,*
*சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.* (106141)

தகவல் :
வி.தங்கம்மா
(சகோதரி)

## *சின்னத்தம்பி (கிட்டு) லக்ஸ்மன் (லச்சா)*



சிவகுருநாதர் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி லக்ஸ்மன் நேற்றுமுன்தினம் (16.11.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பி (கிட்டு கறாச்) - செல்வராணி தம்பதிகளின் மகனும் ஜனார்த்தனன் (ஆசிரியர், விபுலானந்த ம.வி., வவுனியா), காலஞ்சென்ற சுகிர்தா மற்றும் ஜெகப்பிரகாஷ் (பாரின்), பிறேம் நாத் (பாரின்), கபிலன், திவாகரன் (யாழ். இந்துக்கல்லூரி உயர்தர மாணவன்), வைஸ்னவி (யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் றஜனி (ஆசிரியர், மூன்று முறிப்பு ம.வி., வவுனியா), சங்கீதா (பாரின்) ஆகியோரின் மைத்துனரும் சதுர்சனாவின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.11.2010) வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவகுருநாதர் வீதி,*
*நீராவியடி, யாழ்ப்பாணம்.* (சி/573022)

தகவல் :
குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் ஏரம்பு முருகேசு**
மலர்வு 14.01.1938 உதிர்வு 29.11.2009



**திருமதி முருகேசு மனோன்மணி**
மலர்வு 14.01.1940 உதிர்வு 13.01.2001



**அமரர் முருகேசு சுதர்சன்**
மலர்வு 11.09.1975 உதிர்வு 21.08.2000

எங்கள் அன்பான அப்பாவே
கண்ணுக்குள் கண்ணாய்
எமைக் காத்து எங்கள் கண்ணை விட்டு
அகன்றதேனோ அப்பா

உங்கள் கைவிரல் பிடித்து
நாம் நடக்க வழிகாட்டி
எங்கள் கைவிரல் பிடித்து
நீங்கள் நடக்க மறுத்ததேனோ அப்பா.

புணாவில் மேற்கு, மடத்தடி, சாவகச்சேரி. (106048)

பிள்ளைகள்.


**Computer Express**
Institute of Information Technology
No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422

6வது ஆண்டு நிறைவை முன்னிட்டு
அதிரடிக் கட்டணக் கழிவு

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft Office 1000/= 3 Months | Diploma in Desktop Publishing 1000/= 4 Months | Diploma in Web Page Designing 1000/= 3 Months |
| Diploma in Graphic Designing 1000/= 4 Months | Diploma in Hardware Engineering 1000/= 3 Months | Diploma in Auto CAD 1000/= 3 Months |
| Diploma in Accounting Package 1000/= 3 Months | Diploma in Computer Science 1000/= 4 Months | Honors Diploma in Computer Science 1000/= 3 Months |

Advances Courses
Diploma in Video Editing 4Months 1000/=
Diploma in Multimedia 4Months 1000/=

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்,
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி கொழும்பில் இருந்து வருகை தரும்
பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Batch i -20/11/2010- 9am or 3pm
Batch ii -21/11/2010- 9am or 3pm
Batch iii -22/11/2010- 9am or 3pm
Batch iv -24/11/2010- 9am or 3pm

30.11.2010க்கு முன்
பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=
மேலதிக விபரங்களுக்கு எமது நிறுவனத்துடன் தொடர்புகொள்ளுங்கள்...

முதன்முறையாக...
Full Version Software Tally-9.0
Tallyஇல் Date மாற்றலாமா???
NEW Batch :- Saturday (20/11.2010) & Sunday (21/11.2010) 2pm to 3pm


# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மண் மகிழ
1957.01.02

கண் நெகிழ
2007.11.21

## அமரர் வேலுப்பிள்ளை சபாபதிப்பிள்ளை

திதி - துவாதசி

*பாசத்தின் உறைவிடமாய்*
*பணியின் சிகரமாய்*
*கிராமத்தின் விடிவெள்ளியாய்*
*உறவினரின் உற்றவனாய்*
*நண்பர்களின் - அன்பனாய்*
*மக்கள் எல்லாம் இன்புற்று அகிலம் போற்றிட*
*அயராது உழைத்த உத்தமனே*
*எமையெல்லாம் தவிக்கவிட்டுப்*
*பிரிந்து மூன்று ஆண்டுகள் ஆனதுவோ ?*
*எத்தனை ஆண்டுகள் சென்றாலும்*
*உமை நாம் மறப்பது எப்படி ?*
*என்றென்றும் உமது நினைவலைகளுடன்*
*நாம் உமது ஆத்மா சாந்தியடையப்*
*பிரார்த்திப்போம்.*

*வரணி இயற்றாலை,*
*வரணி* (106133)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பகம்
சபை. யாழ்ப்பாணம்

# சரத் பொன்சேகா அடைக்கப்பட்டுள்ள சிறைக்கூண்டுக்குள் மழை நீர் ஒழுகுகிறது

கொழும்பு, ஜன. 18

''முன்னாள் இராணுவத் தளபதியான சரத் பொன்சேகா சிறைவைக்கப்பட்டுள்ள கூண்டிலுள்ள கூரைகளின் துவாரங்கள் வழியாக மழை நீர் ஒழுகுகிறது'' என அனோமா பொன்சேகா கவலை தெரிவித்துள்ளார்.

''அவர் அடைக்கப்பட்டுள்ள கூண்டிலுள்ள கூரைகளில் துவாரங்கள் காணப்படுகின்றன. அதனால், மழை பெய்த போது கூரை வழியாக மழை நீர் ஒழுகிபது. இதனால், அவர் வாளிகள் மூலம் நீரை அகற்ற நேரிட்டது.

### அனோமா கவலை

பின்னர், வெலிக்கடைச் சிறைச்சாலை அதிகாரிகள் அவருக்கு 5 வாளிகளை வழங்கினர்'' எனவும் அனோமா கூறினார்.

இதேவேளை, தமது கணவரின் மருத்துவ நிலைமை குறித்தும் அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டமை குறித்தும் சிறைச்சாலை அதிகாரிகள் தமக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (சி)

## வலி.வடக்கில்..

(முதலாம் பக்கத் தொடர்சி)

குறித்து ஈ.பி.டி.பி.யினரும் செய் திக் குறிப்பு ஒன்றை வெளியிட் டுள்ளனர்.

அதில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் இந் நிகழ்வில் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ கலந்துகொள்கிறார். - என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-15)

**விற்பனையாகிறது.**

சிறைச்சாலை தொலைபேசி மற்றும் சிறைச்சாலை உத்தியோகத்தர் பரீட்சைக்கான வழிகாட்டி

தொடர்பு: த.தவசேகர்

பூபாலசிங்கம், அன்னை புத்தகசாலைகளில் பெற்றுக்கொள்ளமுடியும்

விலை ரூபாய் : 150/=

**MIS கணினிக்கல்வி நிறுவனம்**

**Instructor தேவை**

MS-Office / DTP தெரிந்த Instructor உடனடியாகத் தேவை.

5 நாள்களுக்குள் சுயவிவரக்கோவையை அனுப்பவும்.

குறிப்பு:- பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்

74, சபாபதி வீதி, தலையாழி, யாழ்ப்பாணம்.
0776577359 (106125)

## பொது...

(முதலாம் பக்கத் தொடர்சி)

ரூபா சம்பள உயர்வு கோரியிருந்தோம். ஆனால், சம்பள உயர்வு இன்றுவரை வழங்கப்படவில்லை. அதனால் இன்று ஒன்பதாயிரம் ரூபா சம்பள உயர்வைக் கோரி நிற்கிறோம்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த நாள் முதல் இன்று வரை வாழ்க்கைச் செலவு இரட்டிப்பாக அதிகரித்துள்ளது. எதிர்காலத்திலும் அதிகரிக்கும் சாத்தியம் காணப்படுகிறது. இந்நிலையில், தொழிற்சங்கங்களினால் விடுக்கப்படும் சம்பள உயர்வுக் கோரிக்கைகளை அரசு தட்டிக் கழிக்கிறது.

மக்களின் வாழ்க்கைச் செலவுகளைக் குறைக்காமலும், அத்தியாவசிய பொருள்களில் விலை கட்டுப்பாட்டைப் பேணாமலும் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திகளில் எந்தப் பயனும் இல்லை. அரசின் இவ்வாறான நடவடிக்கைகளுக்கு எதிராக எங்களுடன் இணைந்து போராட்டங்களை முன்னெடுக்க முன்வருமாறு நாம் பொது மக்களுக்கும் அழைப்பு விடுக்கிறோம். - என்றார். (ஒ-சி)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்சி)

இந்தக் கூட்டத்தின்போது வடக்கில் இடம்பெற்றுவரும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள், நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் ஆகியவை தொடர்பாகவும் ஆராயப்படும் என்று அவர் கூறினார்.

எதிர்வரும் 22ஆம் திகதி நாடாளுமன்றில் வரவு - செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அதற்கு முதல் நாள் வரவு - செலவுத் திட்டம் தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூடி ஆராயவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-சி)

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்சி)

எம்.பி. ஏ.ஆர்.எம். அப்துல் காதருக்கு அமைச்சுப் பதவியோ அல்லது பிரதி அமைச்சர் பதவியோ வழங்கப்படலாம். மேலும் 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றுத் தொடர்ந் தும் பிரதி அமைச்சர்களாக இருக்கும் ஒரு சிலருக்கும் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன.

கடந்த பொதுத் தேர்தலில் ஐ.தே. கட்சிப் பட்டியலில் போட்டியிட்டு நுவரெலியா மற்றும் கொழும்பு மாவட்டங்களில் போட்டியிட்டு வெற்றிபெற்ற ஜே.ஸ்ரீரங்கா, பிரபா கணேசன் ஆகியோருக்கு பிரதியமைச்சர் பதவிகள் வழங்கப்படலாம் எனவும் அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்கள், பிரதிஅமைச்சர்களைத் தெரிவு செய்வதில் ஸ்ரீல.சு. கட்சியைச் சேர்ந்த குறிப்பிட்ட சில அமைச்சர்களுடன் ஜனாதிபதி ஆலோசனை நடத்தி வருகின்றார் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஒ-சி)

## நல்லிணக்க..

(முதலாம் பக்கத் தொடர்சி)

சொந்தங்கள் பற்றிய தகவல் களைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் பலர் இந்த முறைப்பாடு களைச் செய்துள்ளனர்.

பதினைந்து, இருபது ஆண்டுகளுக்கு முன்னர் காணாமல் போனவர்கள் பற்றிய முறைப்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் டிசம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் திருகோணமலையில் அமர்வுகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-சி)

## யாழ்.வந்துள்ள...

(முதலாம் பக்கத் தொடர்சி)

யாழ்ப்பாணம் வரும் அமைச்சர், வடக்கு விவசாயிகளுக்கென 100 டிராக்டர்களையும் கையளிக்க உள்ளார். இதற்கான டிராக்டர்களில் பெரும் பகுதி நேற்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தன. இந்தியாவின் மகேந்திரா நிறுவனத் தயாரிப்புக்களான டிராக்டர்கள் உழவுக் கலப்பையுடன் விவசாயிகளுக்காக வழங்கப்பட உள்ளன. அவற்றின் முகப்பில் இந்திய அரச குறியீடான அசோகச் சக்கரம் பொறிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் கிருஷ்ணா விவசாயப் பிரதிநிதிகளிடம் இந்த டிராக்டர்களை நேரடியாகக் கையளிப்பார். வடக்கில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்குத் தேவையான உதவிகள் வழங்கப்படும் என, போர் முடிந்த கையோடு இந்திய அரசு அறிவித்திருந்தது. அதன் ஒரு பகுதியாகவே டிராக்டர்கள் வழங்கப்பட உள்ளன. (உ)

**தேவை - உதவி அச்சக முகாமையாளர்**

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரபல அச்சகம் ஒன்றுக்கு, அச்சக முகாமைத்துவத்தில் ஆகக் குறைந்தது மூன்று வருட அனுபவம் உள்ளவர் தேவை.

4 வர்ணம், 2 வர்ணம் அச்சிடும் இயந்திரங்களின் செயற்பாடுகள், இயக்கப்பாடுகளின் தன்மைகளையும் அவற்றுடன் தொடர்புள்ள தொழில்நுட்ப அறிவு மற்றும் பரந்துபட்ட சேவைத் திறனும் அவசியம்.

முழுமையான சுயவிவரங்களுடன் சிபார்சு செய்யக் கூடிய இருவரின் விவரங்களுடன் 23.11.2010 இற்கு முன் விண்ணப்பிக்கவும்.

mmslanka@gmail.com

**விஷேட கருத்தரங்கு**

முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்கானது
இன்று 18.11.2010 1.30 - 5.30 வரை
துண்ணறிவு
1.00 p.m. - 5.30 p.m.
P.கமல்தாசன் கட்டணம் 200/=
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**வான் விற்பனைக்கு**



PB - XXXX தொடர் இலக்க
Toyota டொல்பின் டீசல்
வான் உடன்
விற்பனைக்குண்டு.
மொடல் LH 172
என்ஜின் 5 L
dual A/C
Adjustable - Rotating Seat
Auto Gear
தொடர்பு: 0777739224

**தேவை**

காமன்ஸ்க்கு தையல் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. நாள் சம்பள அடிப்படையில் தெரிவுகள் மேற்கொள்ளப்படும். வன்னியில் உள்ளவர்கள் பிள்ளையார் அருள் புடைவை, கிளிநொச்சி எனும் முகவரிக்குத் தொடர்புகொள்ளவும். 24.11.2010 புதன்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை தொடர்புகொள்ளவும். தூரத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிட வசதி இலவசம்.

யாழில் தொடர்பு :-
றொசாணி காமன்ஸ்,
263/1, இராஜகாரியர் வீதி,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய். (106104)

கிளை :-
சபாபதிப்பிள்ளை வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE, JAFFNA
CHEMISTRY - 2011 A/L
இரசாயன இயக்கவியல்
ஆரம்பம் :- 20/11/2010 (சனி)
SAT, SUN :- (5.00-6.00) P.M.
By : RAJAH

**New Med. Care Hospital**

யாழ். பிரபல குழந்தை வைத்திய நிபுணர்
Dr.Maruthainar
(Consultant - Peadiatrician)
சாவகச்சேரி நியூ மெடி கெயர் மருத்துவமனையில் பிரதி சனிக்கிழமைகளில் மாலை 4 மணிக்கு நோயாளிகளைப் பார்வையிடுவார். முன் பதிவுகள் செய்து வைத்திய ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.
No. 32, Kachchai Road, Chavakachcheri.
T.P : 0213735505, 0214920949

**முக்கிய அறிவித்தல்**

அன்பார்ந்த வாடிக்கையாளர்களுக்கு,

இல. 487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (கொமர்ஷல் வங்கிக்கு அருகில், யாழ். போதனா வைத்தியசாலைக்கு முன்பாக) அமைந்திருக்கும் சிற்றி மெடிக்கல்ஸ் ஸ்தாபனம் தனக்கென கிளை ஸ்தாபனங்கள் எதையும் யாழ்ப்பாணத்திலோ அல்லது இலங்கையில் வேறெந்தப் பிரதேசங்களிலோ கொண்டிருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புவதோடு, எமது ஸ்தாபனம் போன்ற பெயர்களையுடைய ஏனைய ஸ்தாபனங்களுக்கும் எமக்குமிடையில் எந்த விதமான தொடர்புகளும் இல்லை. ஆகையால் அத்தகைய ஸ்தாபனங்களை சிற்றி மெடிக்கல்ஸ் எனக்கருத வேண்டாம்.

சிற்றி மெடிக்கல்ஸ்,
நிர்வாகத்தினர்.
0212222198

**MyWay English 3 மாத சனி, ஞாயிறு பயிற்சிநெறி**

21.11.2010 இற்குப்பின் அதிபர், ஆசிரியர், அரச அலுவலர், பல்கலைக்கழக மாணவர்கள் மட்டுமே சனி, ஞாயிறு 3 மாத ஆங்கில பயிற்சியில் சேர்த்துக்கொள்ளப்பட உள்ளதால்

பயிற்சியில் சேர விரும்பும் தனியார் அலுவலர்கள், வங்கியாளர்கள், காப்புறுதி ஊழியர்கள், அரச சார்பற்ற நிறுவன பணியாளர்கள், இளைஞர் மற்றும் யுவதிகள் 21.11.2010 இற்குமுன் பயிற்சியில் சேரலாம்

பிரிவுகள் : காலை 8 - 9, 10 - 11, 11 - 12 மாலை 1 - 2, 2 - 3, 4 - 5

ஆங்கிலத்தில் ஒரு சொல்கூட தெரியாதவர்களும் 3 மாதத்தில் முழுமையாக ஆங்கிலத்தில் பேசலாம்

MyWay English 182, Stanley Rd Jaffna 077 33 63 456

**பர்ணபாஸின் மாபெரும் மலிவு விற்பனை**

Barnabas 5வருட உத்தரவாதம் Life Time Free Service



★ 29" Sony Flat TV, 21" FlatTv, 14" TV மிக மிகக் குறைந்த விலையில்
★ தற்போது 21" TV 12,490 ரூபா மட்டுமே....
★ எங்கும் பெறமுடியாத உத்தரவாதமும் விற்பனைக்குப் பிந்திய அதி வேகமான சேவையும் எம்மிடம் மட்டுமே. உடன் விரையுங்கள் உங்கள் தெரிவுக்கு...

247, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (ஸ்ரீதர் தியேட்டர் அருகில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.11.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.